உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 05 சனிக்கிழமை (22.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 330



14
மேற்குலக நாடுகளின் ஒரு சுருக்கமான வரலாறு



23
கடாபி கொடூரமாக கொலை செய்யப்பட்டாரா?



25
தோல்வியை தவிர்க்குமா இலங்கை

கடாபியின் சாவும் புதிய தகவல்களும்...! 03, 23 ஆம் பக்கங்களில்

# கூட்டமைப்பினர் - ஹிலாரி சந்திப்பை தடுத்து நிறுத்த அரசு கடும் முயற்சி

கொழும்பு, ஒக். 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்கா சென்று அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிங்ரனைச் சந்தித்துப் பேசுவதைத் தடுக்க அரசு, இராஜதந்திர ரீதியிலான காய் நகர்த்தல்களை மேற்கொண்டுள்ளது என நம்பகரமாகத் தெரிய வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினர் அடுத்த வாரம் அமெரிக்காவிற்குச் செல்லவுள்ளனர். அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிங்ரனையும் வெளியுறவுத்துறை அமைச்சின் உயரதிகாரிகளையும் கூட்டமைப்பினர் சந்திக்கவுள்ளனர் எனச் செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்த நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பது தொடர்பில் உத்தியோகப்பற்றற்ற ரீதியில் இலங்கை அரசு ஆட்சேபனையை வெளியிட்டுள்ளது எனத் தெரியவருகிறது. இது தொடர்பான அதிருப்தியை அமெரிக்காவிலுள்ள இலங்கை ராஜதந்திரிகள் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் உயரதிகாரிகளுக்கு கோடிகாட்டியிருக்கின்றனர்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சராக ஹிலாரி கிளிங்ரன் பதவியேற்ற பின் இலங்கை அரச தலைவரைக்கூடச் சந்திக்காத ஒரு சூழ்நிலையில் அரசியற் கட்சியொன்றை சந்திப்பது

பக் 26



விழிநீர் சொரிய அஞ்சலி

## இந்தியப் படைகள் கொன்றவர்களுக்கு நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையிலிருந்த போது இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மருத்துவர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், 21பேரின் 24ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் அவர்களது உறவினர்களின் கண்ணீருக்கு மத்தியில் நேற்று போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

கொல்லப்பட்டவர்களின் படங்கள் வைத்தியசாலையில் நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பவானி பசுபதி ராஜா மற்றும் நிர்வாக அலுவலர்கள், தாதியர்கள் ஆகியோர் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

21 பேரினதும் நினைவாக 21 ஈகைச் சுடர்கள் ஏற்றப்பட்டன.

''சம்பவம் இடம்பெற்று 24 வருடங்கள் உருண்டோடிவிட்ட நிலையிலும் இன்றும் அவர்கள் நினைவு கூரப்படுவது சிறந்த பண்பு'' என்று தெரிவித்தார் பணிப்பாளர் பவானி.

''அந்த இக்கட்டான நேரத்தில்கூட தமது உயிர்களைவிட நோயாளர்களின் உயிர்களைக் காப்பாற்றவே, இந்தச் செம்மல்கள் தமது உயிர்களைத்

பக் 26

## புலனாய்வைப் பலப்படுத்துகிறது இலங்கை அரசு

கிளிநொச்சி, ஒக். 22

போர் முடிந்துவிட்ட போதிலும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாக புதிதாக 5 இராணுவப் புலனாய்வுப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்புச் செய

பக் 27

## சொல்ஹெய்மின் உதவியை நாடும் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது இராணுவத் தளபதிகளையும் அனைத்துலகப் போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தும் சர்வதேசத்தின் முயற்சிகளை முறியடிக்க நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் உதவியை

பக் 27

# போர்க்குற்ற அறிக்கை ஐ.நா. அறிக்கைதான்

### அடித்துச் சொல்கிறார் நிபுணர் குழுத் தலைவர்

கொழும்பு, ஒக்ரோபர் 22

இலங்கையில் நடந்த இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை ஐ.நாவின் அதிகாரப்பூர்வ அறிக்கைதான் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி இருக்கிறார் குழுவின் தலைவர் தருஸ்மன். இந்த அறிக்கை ஐ.நாவின் அறிக்கை அல்ல; அது தருஸ்மனின் தனிப்பட்ட அறிக்கை என்று இலங்கை அரசு தொடர்ச்சியாகக் கூறி, அதனைத் 'தருஸ்மன் அறிக்கை' என்றே அறிவித்து வரும் நிலையில் அதனை ஐ.நாவின் அதிகாரப்பூர்வ அறிக்கை என்று அறிவித்திருக்கிறார் தருஸ்மன்.



வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரில் இலங்கைப் படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் புரிந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கு

பக் 27

# இழக்க இனி எதுவுமே இல்லை வடக்கு கடல்தொழிலாளர்கள் கதறல்

### இந்திய மீனவர் ஆக்கிரமிப்பை நிறுத்தக்கோரி அவர்கள் மனு

யாழ்ப்பாணம், ஒக். 22

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் பரப்பை ஆக்கிரமித்துத் தொழில் செய்வதற்கு வடமராட்சி மற்றும் வலி. வடக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இழப்பதற்கு இனித் தம்மிடம் உயிர் மட்டும்தான் உள்ளது என்று தெரிவித்திருக்கும் மீனவர்கள் தாம் விரக்தியடைந்து விட்டனர் என்றும் கூறி இந்தியத் துணைத் தூதரிடமும் யாழ். அரச அதிபரிடமும் இரு மனுக்களைக் கையளித்துள்ளனர். அதில் இந்திய அரசு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் கோரி உள்ளனர்.



யாழ். அரச அதிபரிடம் மனுவைக் கையளிக்கும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள்.

''மனிதநேய அடிப்படையில் எமது மக்களின் துயர் துடைக்க இந்திய அரசுடன்பேசி தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்'' என்று இந்தியத் துணைத்தூதர் வி.மகாலிங்கத்திடம் கையளிக்கப்பட்ட மனுவில் வடமராட்சி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட கடல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தலைமையிலான மீனவர்களால் இரு மனுக்களும் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

இந்திய மீனவர்கள் தமது இழுவைப் படகுகளில், தடைசெய்யப்பட்ட இரட்டை மடி வலையைப் பயன்படுத்துவதால் மீனி

பக் 26

# காணி அபகரிப்பும் இன அழிப்பும் நீடித்தால் நல்லிணக்கம் ஏற்படாது

### நாடாளுமன்றில் சம்பந்தன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 22

நாட்டில் போர் முடிவுற்ற நிலையிலும் காலம் காலமாகத் தமிழ் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் தமிழர்களின் காணி அபகரிப்பும் இன அழிப்பும் தமிழரின் பாரம்பரிய சமய, காலாசார, பண்பாட்டு அடையாள அழிப்பும் தொடருமேயானால் அது நல்லிணக்கத்தையோ மீள்இணக்கத்தையோ ஒருபோதும் ஏற்படுத்தாது.

- இவ்வாறு ஆணித்தரமாக நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் அத்துமீறல்கள், திட்டமிட்ட குடியேற்றம், தமிழர்களின் அடையாளங்கள் அழிக்கப்படுதல் என்பன தொடர்பாகச் சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை ஒன்றை சபையில் முன்வைத்து சம்பந்தன் பேசினார்.

நேற்று முழு நாளும் இந்த விவாதம் நடைபெற்றது. அங்கு சம்பந்தன்

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் தெளிவான வானிலையும் பிற மாவட்டங்களில் இடியுடன் கூடிய மின்னல் நிலவும் சாத்தியம்.

## தடுப்பூசி வழங்கல்

யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட உணவுடன்தொடர்புடையவர்களுக்கான நெருப்புக்காய்ச்சல் தொற்று நோய்க்கான தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இன்று யாழ். நகர் II இற்கு உட்பட்ட பகுதிக்குரியவர்களுக்கு யூபிலி மகப்பேற்று நிலையத்தில் நடைபெறவுள்ளது. (313)

# காணிப்பதிவால் தமிழ் மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதாம்

அரசு மேற்கொண்டுள்ள காணிப் பதிவுகளினால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்று கூறுகின்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

நேற்று நாடாளுமன்றத்தில், புதிதாக வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் காணிப்பதிவுகள் இனசுத்திகரிப்பு, பாரம்பரிய கலாசார அழிப்புகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்படிக் கூறினார்.

**சட்ட பூர்வமான காணி உறுதிகள் இருக்கும்போது புதிய பதிவு ஏன்?**

யுத்தத்தின் போது வடக்கு, கிழக்கில் பல காணிகளும் உடைமைகளும் அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவற்றுக்கான காணிப் பதிவுகள் காணி ஆணையாளர் திணைக்களத்தில் சட்ட பூர்வமாகப் பதியப்பட்டுள்ளன.

இப்படியான நிலையில் புதிதாக ஒரு பதிவு அவசியம் இல்லை. பலர் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். பலர் இறந்துள்ளனர். பலர் வேறு மாவட்டத்தில் வாழ்கின்றனர். இவர்களை எல்லாம் இரண்டு மாதங்களுக்குள் மீளவும் காணிகளைப் பதிய வேண்டும் என்று காலக்கெடு விதிப்பது திட்டமிடப்பட்ட அநீதியாகும். இதனை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வாதிட்டனர்.

**இதில் சூழ்ச்சி எதுவுமே இல்லை என்கிறார் டக்ளஸ்**

இவர்கள் சுய அரசியல் இலாபம் தேட இப்படி பிரசாரம் செய்கின்றனர். நீங்கள் பயப்பட வேண்டாம். காணிப்பதிவு முறை ஒன்றும் புதிதல்ல. நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் இடம்பெறத்தான் செய்கின்றன. வடக்கு கிழக்கில் மட்டும் செய்யவில்லை என்று எதிர்வாதம் புரிந்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

**கூட்டுத் தாக்குதல்**

இந்த விவாதத்தில் அமைச்சர் டக்ளஸ் உரையாற்றிக் கொண்டிருந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் அமைச்சருக்கும் இடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்றன. இடையூறுகளும் குத்தல் பேச்சுகளும் தாராளமாக இடம் பெற்றன.

மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் முரளிதரனும், அமைச்சர் றிசாத் பதியுதீனும் உரையாற்றும்போது அவர்கள் குறிப்பிட்ட சில விடயங்கள் கூட்டமைப்பினருக்கு சற்று சூட்டைக் கிளப்பி விடத்தான் செய்தது.

**சம்பூரில் மீண்டும் குடியேற்றம்**

சம்பூர் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட சுமார் 1,700 குடும்பங்கள் இன்னும் வெளியிடங்களில் அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். அங்கே புலிகளும் இல்லை. கண்ணிவெடிகளும் இல்லை. இவர்கள் மீண்டும் அங்கே குடியமர்த்தப் படமாட்டார்கள். வேறு இடங்களுக்கே கொண்டு செல்லப்படுவர் என கூறப்படுகின்றது. இது அநீதி என்றார் சம்பந்தன். நீங்கள் பயப்படவேண்டாம். அனல் மின் உற்பத்தி நிலையத்துக்குத் தேவையான காணியைத் தவிர்த்து ஏனைய இடங்களில் மக்கள் மீண்டும் குடியமர்த்தப் படுவார்கள் என்று கூறினார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

**அமரர் சிவசிதம்பரத்தை நினைவு கூர்ந்தார் றிஷாத்**




சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

இந்தச் சந்தர்ப்பத்தில் வணிகத்துறைகள் அமைச்சர் றிஷாத் பதியுதீன் யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டபோது கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவருமே ஒரு வார்த்தைகூட பேசவில்லை.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் அமரர் சிவசிதம்பரம் மட்டுமே உணர்வுபூர்வமாகக் கூறினார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியமர்த்தும் வரை யாழ். வரமாட்டேன் என்று கூறினார். அதே போன்று அவர் மரணித்தபின்னரே பூதவுடல் அங்கு கொண்டு செல்லப்பட்டது என்று கூறினார் அமைச்சர் றிஷாத் பதியுதீன்.

**உண்மை தெரியாமல் பேசவேண்டாம்**

இதனை ஆட்சேபித்தனர் மாவை சேனாதிராசாவும் விநாயகமூர்த்தியும். தம்பி நீங்கள் இப்போது உண்மை தெரியாமல் பேசுகின்றீர்கள். நாங்கள் வெளியில் மட்டுமல்ல இந்த சபையிலும் முஸ்லிம்களுக்காகப் பேசி உள்ளோம். பழைய பதிவேடுகளைப் பாருங்கள் என்று இடித்துக் காட்டினர் அவர்கள்.

**புலிகளை உருவாக்கியது இலங்கை அரசே!**

விவாதத்தின்போது இரா. சம்பந்தன் ஒரு முக்கியமான விடயத்தை சுட்டிக்காட்டினார். அதாவது மாறி மாறிவந்த அரசாங்கங்கள் தந்தை செல்வாவுடனோ அமிர்தலிங்கத்திடனோ பிரச்சினைகளைப் பேசி தீர்த்திருந்தால் புலிகள் உருவாகி இருக்க மாட்டார்கள் என்றும் கூறினார். ஆனால் பிரச்சினைகளை உருவாக்கியதே அரசுகள் தான் என்றும் குறிப்பிட்டார்.

# சம்பூர் மின்நிலையக் காணிகளைவிட மிகுதி இடங்களில் மக்கள் குடியமரலாம்

**எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்கிறார் பஸில்**

கொழும்பு, ஒக். 22

சம்பூரில் அமைக்கப்படும் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான காணிகளைவிட மிஞ்சி உள்ள காணிகளில் வாழ்ந்த மக்கள் மீண்டும் அவர்களுடைய காணிகளிலேயே குடியமர்த்தப்படுவார்கள். எவரும் அச்சப்படவேண்டாம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் உறுதி அளித்தார்.

கிழக்கு மாகாணத்தில் இது வரை 3,700 குடும்பங்கள் மீண்டும் குடியமர்த்தப்பட்டுள்ளன. இன்னும் 1,700 குடும்பங்கள் மட்டுமே முகாம்களில் இருக்கின்றன. கூடிய விரைவில் இவர்களும் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என்றும் கூறினார் பஸில்.

வடக்கு, கிழக்கு நிலைமைகள் தொடர்பாக இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் இப்படி கூறினார்.

அதேவேளை அபிவிருத்தி நடவடிக்கைகளை கருத்திற் கொண்டு மூன்று இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அங்கு சென்று மீளக்குடியமர்வோருக்கு சகல வசதிகளும், நஷ்டஈடும் வழங்கப்படும்.

எந்த ஒரு குடிமகனும் பலாத்காரமாக வெளியேற்றபடமாட்டார்கள். மீளக்குடியேற்றம் மேற்கொள்ளப்படும் வரை அம்மக்கள் தொடர்ந்தும் அங்கே தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் பஸில் உறுதிபடக் கூறினார். (ஒ-2)

# வாகனம் தடம் புரண்டதில் சிப்பாய் காயம்

தென்மராட்சி, ஒக்.22

பொருள்களுடன்சென்ற படையினரின் வாகனம் தடம் புரண்டதில் அதில் பயணித்த சிப்பாய் ஒருவர் காயமடைந்தர்.

நேற்று முன்தினம் பளையில் இடம்பெற்ற இந்த விபத்தில் பளை இராணுவ முகாமைச் சேர்ந்த பண்டார (வயது-34) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-207)

# நிகழ்வுகள்

**அபிவிருத்திக் கூட்டம்**

ஆசியா பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

**பரிசளிப்பு விழா**

வல்வெட்டித்துறை கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.45 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் அதிபர் க. செல்வானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

**சாரணர் பாசறை விழா**

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்க சாரணர் வருடாந்த ஒன்றுசேர் பாசறை விழா இன்று காலை 8 மணிமுதல் தொடர்ந்து 3 தினங்கள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.இந்த நிகழ்வில் மைதானக் காட்சிகள் , தீப்பாசறை நிகழ்வு, திறந்த வெளியரங்கக்காட்சிகள் ,அணிநடை என்பன இடம்பெறும்.(ஒ-313)

**தையல் பயிற்சி நிறைவு விழா**

பாளை, பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியின் நிறைவு விழாவும் கண்காட்சியும் இன்று முற்பகல் 10 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறும்.பேரவைத் தலைவர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ச. மோகன்பவன் கலந்து கொள்வார். (ஒ-207)

**முதியோர் மற்றும் வலுவுடையோர் விழா**

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சர்வதேச முதியோர், மாற்று வலுவுடையோர் தின விழா இன்று காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்வார். (ஒ-313,100)

**சிறுவர், முதியோர் தின விழா**

நல்லூர் சமூக அபிவிருத்தி மன்றத்தின் சிறுவர்,முதியோர் தின விழா இன்று காலை 9 மணிக்கு மன்றத் தலைவி திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் மன்றத்தின் முன்னாள் தலைவர்கள் கௌரவிக்கப்படுவதுடன் 52 சிறுவர்களும் , 52 முதியவர்களும் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-313)

**பழைய மாணவர் சங்கக் கூட்டம்**

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் இன்று கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் சங்கத் தலைவர் வே. விமலராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.இந்த நிகழ்வில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் நினைவுப் பேருரையும் இடம்பெறவுள்ளது. (ஒ-313)

**சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு**

எழுத்தாளர் லதாங்கியின் ''மீண்டும் வசந்தம்'' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9மணிக்கு கரணவாய் பொன்னம்பல வித்தியாலய மண்டபத்தில் அதிபர் சு. ஜெயானந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-236)

**இலவசமாக மூக்குக் கண்ணாடி**

இலவசமாக கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சமூக நோக்கில் மூக்குக் கண்ணாடி வழங்கப்படும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில் இடம்பெறும். (ஒ-302)

**கலாசார நிகழ்ச்சி**

சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக 'ராகதான சங்கமம்' கலாசார நிகழ்ச்சி இன்று மாலை 5 மணிக்கு கல்லூரியின் பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-10)

**மாட்டுவண்டிச் சவாரி**

அளவெட்டி வடக்கு ஞானவைரவர் சனசமூக நிலையமும், அளவெட்டி வடக்கு இளம் விவசாயிகள் சங்கமும் இணைந்து நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி பண்டத்தரிப்பு சவாரித்திடலில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-323)

**கருத்தமர்வு**

தமிழ்நாட்டில் இருந்து வருகைதந்துள்ள மூத்த தமிழ் எழுத்தாளர் கி.அ. சச்சிதானத்தின் ''தமிழில் நவீனத்துவமும் சிறு பத்திரிகை இயக்கமும்'' என்ற தொனிப்பொருளிலான கருத்தமர்வு இன்று பிற்பகல் 3.30 மணியளவில் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள சாந்திகம் நிலையத்தில் இடம்பெறவுள்ளது ''ஆனந்த குமாரசுவாமி வாழ்வும் கருத்துக்களும்'' என்ற தொனிப் பொருளில் இவர் நாளை மறுதினமும் கருத்தமர்வு வழங்குவார். (ஒ-319)

**புத்தகக் கண்காட்சி**

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி சாவகச்சேரி, கச்சாய் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்றும், நாளையும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இடம்பெறும். காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரையும் இந்தக் கண்காட்சி நடைபெறும். (10-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லிபிய விடுதலை' விரைவில் பிரகடனம்

திரிபோலி, ஒக். 22

'லிபிய விடுதலை'யை இன்னும் சில தினங்களில் தேசிய இடைக்கால நிர்வாக சபை உத்தியோக பூர்வமாக பிரகடனம் செய்யும் என்று அறிவிக்கப்படுகிறது.

இதையடுத்து, ஜனநாயக ரீதியிலான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும். இந்நடவடிக்கை தேர்தல்களுக்கு வழிவகுக்கும் என்றும் இடைக்கால அரசு அறிவித்துள்ளது.

லிபியாவில் அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்பது யார் என்பதில் லிபிய தேசிய மாற்று அரசு கவுன்சில் உறுப்பினர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அடுத்த புதிய ஆட்சியில் எல்லாக் கட்சியினரும் நாட்டின் சகல தரப்பு பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறோம். கடாபியை கொல்வது மட்டுமே எங்கள் நோக்கம் இல்லை. அது சிறிய வேலைதான். இனிமேல்தான் மிகப்பெரிய கடமையே உள்ளது. லிபிய மக்களுக்கு நீதி, சுதந்திரம், வளர்ச்சி வேண்டும். அவற்றை எப்படி நிறைவேற்றுவது என்பதுதான் மிகப்பெரிய சவாலாக உள்ளது. இவ்வாறு கவுன்சிலின் தலைவர் மஜித் கூறினார். (ஒ)

# 'இந்தத் தருணத்துக்குத்தான் காத்திருந்தோம்'

திரிபோலி, ஒக். 22

தலைநகர் திரிபோலியில் அவசரமாக ஏற்பாடுசெய்யப்பட்ட பத்திரிகையாளர் கூட்டத்தில், ''மும்மர் கடாபி கொல்லப்பட்டார். இந்தத் தருணத்துக்காகத்தான் இத்தனை காலமும் காத்திருந்தோம்'' என்று லிபிய தற்காலிக அரசின் பிரதமர் முகம்மத் ஜிப்ரீல் உற்சாகமாகத் தெரிவித்தார்.

இடையில், கடாபியைப் போன்று தோற்றம் கொண்ட, இரத்தம் கொட்டும் உடலை அல்-ஜஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியது. தரையில் இழுத்து வந்ததால் ஆடைகள் கிழிந்திருந்தன. உடல் முழுவதும் இரத்தக் காயங்கள் தென்பட்டன.

அவருடைய உடலைப் பிரேத பரிசோதனை செய்த டாக்டர்கள், கடாபியின் தலையில் குண்டு காயம் இருந்ததாகக் கூறுகின்றனர். ஆனால் அந்த காயத்தால்தான் அவர் மரணம் அடைந்தாரா அல்லது அவரை கிளர்ச்சியாளர்கள் கொடூரமாக அடித்துக் கொலை செய்த பின்னர் தலையில் சுட்டார்களா என்பது தெளிவாகவில்லை. (ஒ)



கடாபியின் சாவை அடுத்து மக்கள் குதூகலித்துக் கொண்டாட்டம்

# லிபிய மறுசீரமைப்பை உலகத் தலைவர்கள் வலியுறுத்து

லிபியா மறுசீரமைக்கப்படும் என ஏற்கனவே தேசிய இடைக்கால அரசு வாக்குறுதி அளித்துள்ளது. தற்போது கடாபியின் கொடுங்கோல் ஆட்சி முடிவடைந்துவிட்டது. எனவே, தனது வாக்குறுதியை துரிதமாக நிறைவேற்றுவதில் இடைக்கால அரசு அதீத அக்கறை செலுத்தவேண்டுமென உலகத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

**அமெ. ஜனாதிபதி ஒபாமா**

கேணல் கடாபியின் மரணம் லிபிய மக்களுக்குப் புதிய அத்தியாயமொன்றை தோற்றுவித்துள்ளது என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

நான்கு தசாப்தங்களாக நீடித்துவந்த கடாபியின் ஆட்சி அஸ்தமித்துவிட்டது. லிபியாவை ஒரு ஜனநாயக நாடாகக் கட்டியெழுப்பவேண்டிய பெரும் பொறுப்பு, லிபிய மக்களைச் சார்ந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயகத்தில் மலரும் லிபியாவின் பங்குதாரராக அமெரிக்கா திகழும். அதேவேளை, அந்த நாட்டுக்கான நேட்டோவின் பணியும் விரைவில் நிறைவடைந்துவிடும் என்றும் ஒபாமா குறிப்பிட்டுள்ளார்.

**பிரிட்டிஷ் பிரதமர் கமரூன்**

மும்மர் கடாபியின் ஆட்சிக் கவிழ்ப்புக்கு நேட்டோவின் தலையீடு உறுதுணையாக இருந்துள்ளது. இதில் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் அதிமுக்கிய பங்கை வகித்து வந்துள்ளார்.

கடாபியின் மரணம் குறித்து, மிகச் சுருக்கமாக அவர் விடுத்துள்ள செய்தியில், ''கேணல் கடாபியின் எதேச்சாதிகார ஆட்சிக்குக் பலர் பலியாகியுள்ளனர். இது கொலையுண்டவர்களை நினைவுகூரவேண்டிய ஒரு தினம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

**ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன்**

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தமது செய்தியில், ''இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம். லிபியாவும், அதன் மக்களும் எதிர்நோக்கும் பாதை சுலபமானதொன்றல்ல. அது கடினமானது. பெரும் சவால்களைக் கொண்டது. நாடும், மக்களும் இவற்றைக் கடந்தேயாகவேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

**செனட்டர் ஜோன் மெகைன்**

அமெரிக்க குடியரசுக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் செனட்டர் ஜோன் மெகைன், பி.பி.சி. இரவுச் செய்தி நிகழ்ச்சிக்கு இது குறித்து தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதில் அவர், ''கேணல் கடாபியின் ஆட்சி லிபியாவில் வீழ்ச்சி கண்டுவிட்டது. இந்த வீழ்ச்சி விடுக்கும் செய்தி, சிரியா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் அரசுகளை நிலைகுலையச் செய்யும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

''இது ஒரு வசந்தம். ஆனால், அரபு வசந்தம் அல்ல'' என்றும் செனட்டர் ஜோன் மெகைன் தெரிவித்துள்ளார்.

**இந்தியா நம்பிக்கை**

லிபியாவில் விரைவில் அமைதி திரும்பிவிடும் என்று இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது. லிபிய மக்களுக்குத் தேவையான அனைத்து [illegible] தயாராக [illegible] என்றும் இந்தியா கூறியுள்ளது. (ஒ)



# 'சுடாதீங்க, சுடாதீங்க....!'

குழாய்க்குள் பதுங்கியிருந்த கடாபியை எதிர்ப்புப் படைச் சிப்பாய்கள் வெளியே இழுத்த போது, ''சுடாதீங்க, சுடாதீங்க'' என்று அவர் கூறியிருக்கிறார். அதுவே அவரது கடைசி வார்த்தையாக இருந்திருக்கிறது.

எதிர்ப்புப் படைச் சிப்பாய் கூறினார் என பி.பி.சி. இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறது. கடாபியின் உடல் மிஸ்ரதா நகரிலுள்ள மசூதிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. (ஒ)

# கடாபியின் தங்கத் துப்பாக்கி!

கடாபியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கத் துப்பாக்கியைக் கிளர்ச்சியாளர்கள் கையிலேந்தி ஊர்வலமாக எடுத்துச்சென்றனர்.

கொல்லப்பட்ட கடாபியின் உடல் பாதுகாப்புக் காரணங்களுக்காக இரகசியமான இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என கிளர்ச்சிப் படையின் இராணுவ அதிகாரி முகமது அப்துல் கபி தெரிவித்துள்ளார் எனினும் கடாபியின் உடல் மசூதி ஒன்றில் வைக்கப்பட்டிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

டுனிசியா, எகிப்து ஆகிய நாடுகளைத் தொடர்ந்து லிபியா விலேற்பட்ட கிளர்ச்சியால் கடாபியின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. சிரியா, ஏமன் ஆகிய நாடுகளில் கிளர்ச்சிப்படையினரின் போராட்டம் தொடர்கிறது. (ஒ)

# பெண் பாதுகாவலர்களை தேடும் பணி தீவிரம்

சுட்டுக் கொல்லப்பட்ட லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கேணல் கடாபி தனது மெய்ப்பாதுகாவலர்களாக பெண்களை நியமித்திருந்தார்.

இவர்களை வெற்றியின் அடையாளமாக அவர் கூறி வந்தது குறிப்பிடத்தக்கது.

கடாபி கொல்லப்பட்ட நிலையில் இவர்கள் இப்போது தேடப்பட்டு வருகின்றார்கள்.

ஆனால் எப்போதுமே பெண்கள், ஆண்களுக்கு சமமானவர்கள் இல்லை. காரணம் உடல் அமைப்பும் தன்மையும் வேறு என்று குறிப்பிட்டு வந்த கடாபி, இந்தப் பெண் மெய்ப்பாதுகாவலர்கள் விஷயத்தில் மட்டும் மிகவும் தாராளம் காட்டி வந்தார்.

அவரது அரசில் பணியாற்றியவர்களில் இந்தப் பெண்களே உயர்ந்தபட்ச பதவி வகித்தவர்களாக கருதப்பட்டனர். அதற்கு அவர் பெண்களைத்தான் தேர்ந்தெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நீல நிற சீருடை, நகச்சாயம், 'ஹை ஹீல்ஸ்' செருப்பு, இயந்திரத் துப்பாக்கி சகிதம் இவர்கள் கடாபிக்கு பாதுகாவலர்களாக இருந்தனர். கடாபி கொல்லப்பட்டுவிட்ட நிலையில் இவர்களது கதி என்ன ஆனது என்று தெரியவில்லை. (ஒ)



சொந்த ஊரில் பதுங்கியிருந்த இரகசிய 'பங்கர்'

# இரகசியமாகப் புதைக்க நடவடிக்கை

லிபியாவின் முன்னாள் தலைவர் கேணல் மும்மர் கடாபியின் ஜனாசாவை இரகசியமாக அடக்கம் செய்வதற்கு லிபிய அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாகப் பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

எங்கே எவ்வாறு அடக்கம் செய்வது என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லையென லிபிய அதிகாரிகள் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்ததாகவும் பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

கேணல் கடாபி பலியானவுடன் லிபியாவின் இராணுவ நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளதாக கருதப்படலாமென பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் அலன் ஜூப்பே தெரிவித்துள்ளார்.

இதனிடையில், கடாபியின் வயிற்றில் துளைத்த குண்டு காரணமாகவே அவரின் மரணம் சம்பவித்ததாக இணைத்தளம் ஒன்று நேற்றிரவு தெரிவித்தது. (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் குளிர்பான நிலையம் ஒன்றுக்கு பணியாளர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு-0779608395

சிவமயம்

## சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்

**யாழ்ப்பாணம்- இலங்கை**

## பரிசளிப்பு விழா- 2011

5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு

இடம்: சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத் தலைமைச் செயலகம்.
காலம்: 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணி
தலைவர்: சபா.வாசுதேவக்குருக்கள்.

**பிரதம விருந்தினர்:**
திரு.சு.தியாகலிங்கம்
(அதிபர், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

**சிறப்பு விருந்தினர்:**
முதறிஞர் திரு.சிற்பிசரவணபவன்
(கந்தரோடை)

**விழா சிறப்புற ஆசி வழங்குபவர்:**
சிவஸ்ரீ ஜம்புகேச மகேஸ்வர சிவாச்சாரியார்
(சர்வதேச இந்து மதகுரு பீடாதிபதி)

**கௌரவ வித்வ சபை உறுப்பினர்கள்**

பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ண ஐயர் (வாழ்நாள் பேராசிரியர்).
சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் (சுன்னாகம்).
சிவஸ்ரீ. தா.மகாதேவக்குருக்கள் (இணுவில்).
சிவஸ்ரீ. கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் (புன்னாலைக்கட்டுவன்).
சிவஸ்ரீ.கை. வாமதேவக்குருக்கள் (நயினாதீவு).
சிவஸ்ரீ. சந்திரசேகரக்குருக்கள் (நீர்வேலி).

**இரண்டாவது குருமகா சன்நிதானம்**
ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் (நல்லூரர்).

அனைவரும் இவ் விழாவுக்கு வருகை தந்து மாணவர்களை வாழ்த்தி விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி. சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

# மூத்த பிரஜைகள் சிறுவர் தினவிழா

யாழ்ப்பாணம், ஒக்.22

மூத்த பிரஜைகள் மற்றும் சிறுவர் தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் மூத்த பிரஜைகள் சங்கத் தலைவர் ச.இராமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் இவ்வாண்டு புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் எண்பது வயதை அடைந்து அமுத விழாவைக் கொண்டாடுபவர்களும் கௌரவிக்கப் படவுள்ளனர். இவற்றுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-323)

## தவறிவிட்டது

ஏழாலை மேற்கு/ஏழாலை செல்லத்துரை துளசிமாறன் என்னும் பெயர் முகவரியுடைய தே.அ.அட்டை இல. (871684600V) மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன கிளிநொச்சி கரடிபோக்குச் சந்தியில் தவறி விட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.
தொடர்களுக்கு: 0772395912, 021 300 7835

## கண்ணீர் அஞ்சலி



யா/ வட்டு சுப்பிரமணிய வித்தியாலயத்தில் 1974-1984 வரை அதிபராகப் பணியாற்றிய

**உயர் திரு க. ஆறுமுகம்**

சிவபதமடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்க் காணிக்கைகளைச் செலுத்துவதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

யா/வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை, வட்டுக்கோட்டை.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்.

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
25
01
1934



மறைவு
22
09
2011

### அமரர் கதிரவேலு திலகவதி

கடந்த 22.09.2011 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் கதிரவேலு திலகவதி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தும், இறுதிச்சடங்கில் அஞ்சலி செலுத்த உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் நினைவாக இன்று (22.10.2011) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*குடும்பத்தினர்.*
ஸ்ரீதரன் (பிரான்ஸ்)
0033140101380
கலாவதி (பிரான்ஸ்)
0033148456084
மேகலா (இலங்கை)
0094776621685

108, கலைமகள் வீதி,
அரியாலை.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரஞ்சோதிநாதன் சிவமலர்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு 190 ஆம் கட்டையடியை வசிப்பிடமாகவும் கனடாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி சிவமலர் கடந்த 16.10.2011, ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், பரஞ்சோதிநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா-செல்லம்மா தம்பதியரின் மருமகளும், தவமணியின் மைத்துனியும்,ஜசிந்தா (நோர்வே), கஜதீபன் (கனடா), பிரதீபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவநேந்திரன் (நோர்வே), பிருந்தா (கனடா) ஆகியோரின் மாமியும், லக்சயா, ஜெயனி, ஜஸ்மிதா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், கனகரத்தினம், கணேசலிங்கம், சறோயினிதேவி, மல்லிகாதேவி, தனேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுசிலாதேவி மற்றும் மதனதாஸ், றமேஸ்வரன், காலஞ்சென்ற பரமசாமி ஆகியோரின் சகோதரியும், சாந்தநாயகி, செல்வமணி (சுவிஸ்), தர்மேந்திரன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2011) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் மு.ப. 10.00 மணியளவில் (கனடா நேரம்) இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

190ஆம் கட்டையடி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
காளி கோயிலடி, ஏழாலை மத்தி.
தகவல்:
குடும்பத்தினர்.

### செபஸ்ரியான் பற்றிக்



55/1, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியான் பற்றிக் 19.10.2011, புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராச துரை செபஸ்ரியன்-கனகம் அக்கினஸ் தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மரியதாஸ்-இமெல்டா (அன்னரெத்தினம்) மற்றும் ஊவாம்சலின், விகதாஸ் (ஓய்வு பெற்ற பொலிஸ்), அமலரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் றெஜினா, றோஸ், முருகானந்தம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.10.2011) சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு 46/1, கடற்கரை வீதியில் அமைந்திருக்கும் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
46/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

**“அழகு தொடக்கம் ஆரோக்கியம் வரையிலான சேவைகள்” நிழல் அல்ல நிஜம்!!!**

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகளுடனான சேவைகள்.
- ஒரேவாரத்திலே உங்கள் கருமைநிறம் நீங்கி அழகிய நிறம்!! கரும்புள்ளிகள், முகப்பருக்கள், பழையதழும்புகள், கருவளையம் உதட்டுக்கருமை நீக்கம் போன்ற சிகிச்சைகள்.
- முடி உதிர்வு,இளநரை,பொடுகு, முடிகருமையாக்கல் சிகிச்சைகள்
- உடற்பருமன் கூட்டுதல்,குறைத்தல், முகப்பொலிவுச் சிகிச்சைகள்
- உடல் அழகுச் சிகிச்சைகள்
- வயிறு,இடுப்பு,கை,கால்தசைகள் குறைவதற்கான சிகிச்சைகள்
- மற்றும் ஆரோக்கிய அனைத்து சிகிச்சைகளையும் பெற முற்பதிவுகளுக்கு

அழையுங்கள். 0777351954, 0774011129

262-செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.
முற்றிலும் ஆயுள்வேத சிகிச்சைகள்
we care always

## பதவி வெற்றிடம்

**பக்க வடிவமைப்பாளர்**
- பத்திரிகைத்துறையில் ஆகக் குறைந்தது 2 வருட அனுபவம் எதிர்பார்க்கப்படும்.

**அலுவலக உதவியாளர்**
- வயதெல்லை 40 - 50
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தகுதி திறமையின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- உரிய ஆவணங்களுடன் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை 9.00 - 1.00 மணி வரை நேரில் வரவும்

*Uthayan IT Island,*
359, Kasthuriyar road,
Jaffna.
*T.P NO : 0212220549*

e.com

**Vacancy.... Call:021-7429005**
**பதவி வெற்றிடம்....**

எமது கணினி நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான நேர்முகத் தேர்வானது எதிர்வரும் 23-10-2011 நடைபெற உள்ளது. விரும்புவர்கள் தங்களின் சுயவிபரக் கோவையுடன் காலை 10.00 மணிக்கு நேரில் சமூகம் தரவும்.



- Marketing Executive (Male/Female)
- IT Lecturer
- Computer Instructor
- Receptionist

A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்

No.95A Temple Road, Nallur, Jaffna

## ஊர்க்குஞ்சுகள் விற்பனைக்கு

தடுப்பூசி ஏற்றப்பட்ட முதற்தர கலப்பின ஊர்க்குஞ்சுகள் (ஒரு நாள்/ஒரு கிழமை) விற்பனைக்குண்டு.
விலை ரூபா - 75/= இருந்து
மொத்தக் கொள்வனவுக்கு விநியோகம் இலவசம்
தொடர்பு: 0217200616, 0773372146

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர் கல்பேட் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 450/= மட்டும்.
**விஜயகுமார்,**
**குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.**

## தேவை

யாழ். நகரில் பெரியகடை வீதியில் அமைந்துள்ள நவீன மயப்படுத்தப்பட்டுள்ள தேநீர் சாலை (Snack Bar) ஒன்றுக்கு வயது 18 தொடக்கம் 24 வரையுள்ள ஆண் உதவியாளர் தேவை.

தொடர்பு: 0771320038

## கார் விற்பனைக்கு

4 சிறி பரீனா (FAREENA) கொழும்புக்கார், நல்ல நிலையில் உள்ள என்ஜின்.
**தொடர்பு: சண்முகநாதன்,**
**பிரதேச சபை ஒழுங்கை, மல்லாகம்.**

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் கட்டுடையில் 100 பனை மரங்களுடன் 30 பரப்பு நல்ல காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:0778350478

## கடைத்தொகுதி வாடகைக்கு

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மந்திகை கந்தமுருகேசனார் சிலையடியில் (மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக) நிர்மாணிக்கப்பட்டு தற்போது கட்டட வேலை முடிவுறும் நிலையில் உள்ள சகல வசதிகளும் கொண்ட (வாகன தரிப்பிட வசதி உட்பட) மாடிக்கடைத் தொகுதிகள் (16' x 27') விஸ்தீரணம் கொண்ட ஒவ்வொரு கடைகளும் வாடகைக்கு விடுவதற்குத் தயார் நிலையில் உள்ளன.

**தேவையானவர்கள்**
**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:**

**HARI ENGINEERS AND CONTRACTORS**
**ALVAI**
**T.P. No.: 0772830694**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# லிபியத் தலைவர் மறைவும் அரபு உலகின் எதிர்காலமும்

லிபிய ஜனாதிபதி மும்மர் கடாபி கிளர்ச்சிப் படைகளினால் கொல்லப் பட்டுள்ளார்.

கடாபியின் முடிவு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். அவரது மறைவு அரபு உலகை அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது. ஆனால் அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றன.

முதலில் டுனிசியாவிலும் பின்பு எகிப்திலும் ஆரம்பமான மக்கள் எழுச்சி, லிபியாவிலும் பரவியது. இந்த எழுச்சிகளில் முதலாவது உயிரிழந்த அரச தலைவர் கடாபி தான். கடாபியின் கடந்த 42 வருடகால ஆட்சி நேட்டோவின் ஆதரவுடன் துடைத்தெறியப்பட்டிருப்பது துரதிஷ்டமே.

லிபியா மன்னர் இத்ரிஸின் ஆட்சியில் மக்கள் அடக்கி ஒடுக் கப்பட்டு வந்த காலத்தில், 1969ஆம் ஆண்டு தனது 27ஆவது வயதில் இராணுவப் புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றியவர் கடாபி. இதன் மூலம் மத்திய கிழக்கில் எஞ்சி இருந்த மன்னர் ஆட்சி நாடுகளைக் கதிகலங்க வைத்தார். அவரது வீழ்ச்சிக்கு தற்பொழுது பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. எனினும் அரபு உலகைப் பலவீனப்படுத்தவும், அரபு நாடுகளின் பரம விரோதியான இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வகுக்கப்பட்ட நீண்ட காலச்சதித் திட்டமே இது என்று சந்தேகிக்க வேண்டி இருக்கிறது.

1979 காம்ப்டேவிட் ஒப்பந்தம் மூலம் இஸ்ரேலும் எகிப்தும் சமாதானம் செய்துகொண்ட பின்னர் இஸ்ரேலுக்கு எதிரியாக இருந்த நாடுகளில் பிரதானமானது ஈராக். இஸ்ரேலின் எல்லை நாடாக இல்லாவிட்டாலும் நீண்ட தூரம் சென்று இஸ்ரேலைத் தாக்கக் கூடிய ஏவுகணைகள் ஈராக்கிடம் இருந்தன. 2003ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையிலான நேசப்படைகள் ஈராக்கை துவம்சம் செய்ததுடன் கமால் அப்துல் நாஸருக்குப் பின்பு அரபு உலகின் இரும்பு மனிதனாகக் கருதப்பட்ட சதாம் ஹுசேய்னைப் பிடித்துத் தூக்கிலிட்டனர்.

1952ஆம் ஆண்டு எகிப்திலே மன்னர் பாரூக்கின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டு பதவிக்கு வந்தவர்தான் கமால் அப்துல் நாஸர். அரபு உலகின் சிற்பி அவர். 1958ஆம் ஆண்டு ஈராக்கிலே மன்னர் பைஸலின் ஆட்சி கவிழ்க்கப்படவும், 1969ஆம் ஆண்டில் லிபியாவில் மன்னர் இத்ரிஸின் ஆட்சி இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் தூக்கிவீசப்படவும் மத்திய கிழக்கில் மன்னர் ஆட்சி நாடுகளுக்கு எதிராக நாஸர் எழுப்பிய குரலே காரணமாக இருந்தது. 1967ஆம் ஆண்டு முழு அரபு நாடுகளையும் திரட்டி இஸ்ரேலுக்கு எதிராகப் போர் தொடுத்தவரும் நாஸர் தான்.

அரபு நாடுகளின் ஒன்றுமையைக் குலைக்கவும் அவற்றைப் பலவீனப்படுத்தவும் அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் திட்டம் வகுத்தன. இதன் வெளிப்பாடுதான் டுனிசியாவிலும் எகிப்திலும் லிபியாவிலும் ஏற்பட்ட கிளர்ச்சிகள்.

இந்த வருட முற்பகுதியில் டுனிசியாவில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி ஒருசில நாட்களுக்குள்ளேயே ஜனாதிபதி அபிடின் பென் அலியின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டது. அதன்பின்பு எகிப்தில் ஹொஸ்னி முபாரக்குக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி இரு மாதங்களில் அவரை பதவியிலிருந்து அகற்றியது. கைதாகி நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கி உள்ளார் முபாரக். தற்பொழுது கடாபியின் ஆட்சியும் முடிவுக்கு வந்துவிட்டது.

கேர்ணல் கடாபி தனது ஆட்சிக் காலத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் தூண்டுதலாக இருந்தார் என்பதும் லிபியாவில் அடக்குமுறை மூலம் நூற்றுக் கணக்கானவர்கள் கொல்லப்படக் காரணமாக இருந்தார் என்பதுமே அவர் மீதான பிரதான குற்றச்சாட்டுக்கள்:

★ 1988ஆம் அண்டு ஸ்கொட்லாந்தின் லொக்கப்பீ பகுதிக்கு மேலாக பறந்து கொண்டிருந்த அமெரிக்க விமானம் ஒன்றுக்குள் குண்டு வெடிக்க வைத்து விமானி மற்றும் தரையில் நின்றோர் உட்பட 270 பேரின் மரணத்துக்குக் காரணமாக இருந்தது. அதில் ஈடுபட்ட லிபியர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது.

★ 1989ஆம் ஆண்டு நைகருக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த பிரெஞ்சு விமானத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 170 பேர் மரணம் அடையக் காரணமாக இருந்தது.

★ இஸ்ரேலிலும் மற்றும் மேற்கு நாடுகளுக்கு ஆதரவான நாடுகளிலும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்தது. பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்கியது.

★ லிபியச் சிறை ஒன்றில் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைச் சுட்டுக்கொல்லுமாறு உத்தரவிட்டது.

இப்படி எத்தனையோ குற்றச்சாட்டுக்கள் கடாபி மீது சுமத்தப்பட்டிருந்தன.

2003ஆம் ஆண்டு இடம்பெற்ற சமரச முயற்சியின்போது, இரு விமானக் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குமான குற்றச்சாட்டை கடாபி ஏற்றுக் கொண்டிருந்தார். பேரழிவு தரும் இரகசிய ஆயுத உற்பத்தியையும் கைவிட இணக்கம் தெரிவித்திருந்தார். இதனை அடுத்து ஐ.நாவினால் 1992-93ஆம் ஆண்டுகளில் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையும் நீக்கப்பட்டது.

நேரத்துக்கு நேரம் குணம்மாறும் சுபாவமுடைய கடாபி இஸ்ரேலினதும் மேற்கு நாடுகளினதும் எதிரியாகவே தொடர்ந்து செயற்பட்டு வந்தார். சதாம் ஹுசேய்னும் இதனையே செய்துவந்தார். சிரியா ஜனாதிபதி பாஷர் அல் அசாத்தும் இப்படியானவரே.

1967 யுத்தத்தில் இஸ்ரேலிடம் தனது பகுதியான கோலான் குன்றுகளை இழந்த சிரியா அதனை மீண்டும் கைப்பற்றக்கூடிய நிலையில் இல்லை. அப்படி இருந்தும் இஸ்ரேலுடன் பகைமைப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது. காஸாவில் அதிகாரத்தில் உள்ள ஹமாஸ் இயக்கத்துக்கு இரகசியமாக ஆயுதங்களை வழங்கி வருகிறது.

ஆகவே அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளினதும் அடுத்த இலக்கு சிரியாதான். இதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன. சிரியாவும் துடைத்தெறியப்பட்டு விட்டால் இஸ்ரேலுக்கு எதிரிகள் இல்லாது போய்விடும். பலம் பல மடங்கு ஓங்கிவிடும்.

1967இன் யுத்தத்தின்போது கைப்பற்றி சமாதான ஒப்பந்தங்கள் மூலம் திருப்பி ஒப்படைத்த காஸா, மேற்குக்கரை, சினாய் போன்ற பகுதிகளை இஸ்ரேல் மீண்டும் தன்னுடன் இணைத்துக் கொள்ள முற்படலாம். ஏனெனில் இஸ்ரேல் தனது பாதுகாப்புக்கு 1967 எல்லைகள் முக்கியமானவை என்று கருதுகிறது.

அரபு நாடுகளுக்கு இப்படியான ஒருகதி ஏற்படுவதற்கு ரஷ்யா, சீனா போன்ற நாடுகள்தான் காரணம். இந்த நாடுகளே பெருமளவு ஆயுதங்களை வழங்கி அமெரிக்க, இஸ்ரேல் விரோதப் போக்கை அரபு நாடுகள் மத்தியில் வளர்த்தன. கடைசியில் கைவிட்டு விட்டன. இலங்கைக்கும் இது ஒரு பாடமாக அமையவேண்டும்.

# இந்து ஆலய விக்கிரகங்கள் திருட்டை தடுப்பது குறித்துக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ். மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களில் தொடர்ந்து இடம்பெற்று வரும் ஆலய விக்கிரகங்கள் மற்றும் ஆலயப் பொருள்களின் திருட்டைத் தடுப்பதற்கான வழி வகைகள் குறித்து ஆராயப்பட வுள்ளது.

யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நாக விகாரையில் இடம்பெறவுள்ளது. இதன் போதே மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஆரா யப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நான்கு மதங்களைச் சேர்ந்த மதத் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாநாகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரிடம் சர்வமதத் தலைவர்களால் மனு ஒன்றும் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-14)

# கணித பாடக் கருத்தரங்கு செவ்வாயன்று நடைபெறும்

தென்மராட்சி, ஒக்.22

வடக்கு மாகாண எல்லைக்குட்பட்ட 11 கல்வி வலயங்களில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இன்று சனிக்கிழமை நடத்தப்படவிருந்த கணித பாட கருத்தரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறுமென மாகாண கல்வித் திணைக்கள மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் க.பொ .த. சாதாரணதர வகுப்புக்கள் உள்ள பாடசாலைகள் இவ் விடயத்தை கவனத்தில் எடுத்து ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-207)

# ஜெய்ப்பூர் முதலிடம்

யாழ்ப்பாணம், ஒக்.22

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சிஅபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட ''சில்ப் 2011'' போட்டியில் யாழ். ஜெய்ப்பூர் வலது குறைந்தோர் புனர்வாழ்வு நிலையம் மாகாண மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுத் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் தேசிய கண்காட்சியும் விற்பனையும் இடம் பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியின் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் சமீபத்திய உற்பத்திப் பொருள்களுடன் புகைப்படமும் காட்சிப்படுத்தப் படவுள்ளன. (த)

# இரணைமடு குடிதண்ணீர் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆராயும்

யாழ்ப்பாணம், ஒக்.22

இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு குடி தண்ணீர் வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழு அடுத்த மாதம் யாழ். வரவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி அரச அதிபர்களையும், வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாநகர முதல்வர் ஆகியோரையும் இந்தக் குழு சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

இதில் கழிவகற்றல் திட்டம் குறித்தும் சுகாதாரத் திட்டம் குறித்தும் ஆராயப்படவுள்ளதுடன் பிரதேசங்களையும் அந்தக் குழு நேரில் சென்று பார்வையிட்டு அறிக்கை தயாரிக்கவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி முதல் 12 திகதி வரை இந்தக் குழுவினர் கலந்துரையாடல்களை மேற்கொள்வர் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இந்தக் குழுவினர் நெடுந்தீவுக்குச் சென்று அங்குள்ள குடிதண்ணீர் நிலைமை தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-302)

# வடக்கு மாகாண கண்காட்சி, மாநாடு

யாழ்ப்பாணம், ஒக்.22

உள்ளூர் அபிவிருத்தி ஊடாக தேசிய அபிவிருத்தி என்னும் தலைப்பில் வடக்கு மாகாண கண்காட்சியும் மாநாடும் இடம்பெறவுள்ளது.

இந்த வடக்கு மாகாணக் கண்காட்சி 5 மாவட்டங்களின் உள்ளூராட்சி சபைகளின் பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் எதிர்வரும் 30ஆம், 31ஆம் மற்றும் நவம்பர் 1ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளும் இதில் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-302)

# நிமலராஜன் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.22

மறைந்த ஊடகவியலாளர் நிமலராஜன் நினைவு நிகழ்வும் மறைந்த ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கான உதவித் திட்டங்கள் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

யாழ். பிரதான வீதியில் மறைக்கல்வி நிலைய மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறும்.

செல்வி சீதா ரஞ்சினி எழுதிய 'கருத்துச் சுதந்திர வெளியீட்டுத் தியாகிகள்' நூல் அறிமுகம் இதில் இடம்பெறும்.

சிறப்புரைகளை ராவய பத்திரிகையின் செய்தி ஆசிரியர் வசந்த ருகுணுகே, சூரியன் எப்.எம் முன்னாள் செய்திப் பிரிவுப் பணிப்பாளர் நடராஜா குருபரன், யாழ். தினக்குரல் உதவி ஆசிரியர் பொ.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (த-302)

# 1,000 ரூபாவுக்கு குறைந்த சமுர்த்தி கொடுப்பனவை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு,ஒக்.22

1000 ரூபாவை விடக் குறைந்த சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை 1000 ரூபா வரை அதிகரிப்பதற்கு அரசு ஆலோசித்திருப்பதாக பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கடந்த 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாதாந்தம் 1000 ரூபாவுக்குக் குறைவாக சமுர்த்தி நிவாரணங்களை பெறும் 15 இலட்சத்து 64 ஆயிரத்து 809 குடும்பங்கள் நாட்டில் இருப்பதாகவும் பிரதியமைச்சர் இதன் போது தெரிவித்திருந்தார்.

மேலும் சமுர்த்தி நிவாரண உதவிகளுக்கு 930 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், சமுர்த்தி குடும்பங்கள் தொடர்பாக ''திரிய பியஸ'' வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக ஒரு லட்சம் ரூபா வழங்கப்படுமெனவும், அது மீள அறவிட்டுக் கொள்ளப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாஸ்ரீ ஜயசேகரவினால் நாடாளுமன்றத்தில் வைத்து எழுப்பப்பட்ட வினா வொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இதனைத் தெரிவித்தார். (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகள் செயற்றிட்டம் முதன்முறையாக யாழ்.மாவட்டத்தில்

## மனித உரிமை ஆணைக்குழு முன்னெடுக்கிறது

யாழ்ப்பாணம்,ஒக.22

சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பான செயற்றிட்டமொன்று யாழ்.மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகமும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து இந்தத் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளன.

நாட்டின் ஏனைய பாகங்களில் இவ்வாறான செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் முதல்முறையாக யாழ்.மாவட்டத்தில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பதிகாரி த.கனகராஜ் தெரிவித்தார்.

முதற்கட்டமாக சிறுவர் உரிமைகளுடன் தொடர்புடைய வேலைகளில் ஈடுபட்டவரும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிளுடனான கலந்துரையாடல் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் இடம்பெறவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். இது பின்னர் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-14)

# அச்சுவேலி கூட்டுறவுச் சங்கத்துக்கு யாழ்.மாவட்டத்தின் முதல்தர விருது

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். மாவட்டத்தில் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முதல்தரப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாகத் தெரிவு செய்யப்பட்டு அந்தச் சங்கத்துக்குச் சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.

கைதடியில் அண்மையில் நடைபெற்ற கூட்டுறவுக் கண்காட்சியில் வைத்து இந்த விருது சங்கத்தின் பொது முகாமையாளர் கே.கவிந்திரதாஸிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலேயே எமது சங்கம் முதல்தரச் சங்கமாகத் தெரிவானதையிட்டு மகிழ்ச்சியும் திருப்தியும் அடை[illegible]தாக முகாமையாளர் கே.கவீந்திரதாஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

மாதாந்த மொத்த வியாபாரத்தில் அதிக விற்பனை, பணியாளர்களின் திருப்திகர[illegible] சேவை, சங்க நிர்வாகக் கட்டமைப்பின் செயல்திறன், சங்கத்தின் இலாபகரமான செயற்பாடு ஆகிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் கூட்டுறவுத் திணைக்களத்தால் இந்தச் சங்கம் முதல் தரச் சங்கமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (த-26)

# 'சத்தியமே ஜெயம்' நாளை வெளியீடு

தென்மராட்சி,ஒக.22

சாவகச்சேரி இந்துக் கல்லூரியினால் தயாரிக்கப்பட்ட 'சத்தியமே ஜெயம்' என்னும் குறுந்திரைப்பட இறுவட்டு வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனும், கௌரவ விருந்தினராக வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி இசை ஆசிரியை திருமதி கயல்விழி சூரியகுமார், இசை ஆசிரியர் பொன் ஸ்ரீவாம தேவன் ஆகியோர் கலந்துகொள்வர்.

முதல் இறுவட்டினை நுணாவில் எலைற் என்ரபிறைஸ் நிறுவன உரிமையாளர் சீவரத்தினம் கோபிதாஸ் பெற்றுக்கொள்வார். (த-207)

## எப்படியிருக்கு?..............



புதிய நூல்களின் கண்காட்சி நேற்று யாழ்.பொது நூலகத்தில் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களுக்கு வடை, பிஸ்கட் என்பன பரிமாறப்பட்டன. அதில் யாழ். மாநகரசபை ஆளும்கட்சி உறுப்பினர் மனுவல் மங்கள நேசனுக்கு வழங்கப்பட்ட வடைக்குள் கரப்பான் பூச்சி ஒன்று இறந்த நிலையில் காணப்பட்டது. அதனை அவரே ஊடகவியலாளர்களிடம் காட்டினார். இந்த வடை யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்க உணவகத்தில் இருந்து எடுத்து வரப்பட்டது எனவும் அவர் அங்கு கூறினார். (த-311)

# அச்சுவேலி-ஆவரங்கால் பகுதிக்கு கேபிள் தொலைபேசி இணைப்புகள்

அச்சுவேலி, ஒக். 22

அச்சுவேலி-ஆவரங்கால் பகுதிக்கு இந்த வருடம் முடிவதற்கு முன்னர் ஒளி நுண் இழைகள் இணைப்புக்களுடன் கூடிய கேபிள் தொலைபேசி வசதி பாவனையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளைள ஸ்ரீலங்கா ரெலி கொம் யாழ்.பிராந்திய அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் கேபிள் இணைப்பு தொலைபேசி வசதி வலிகாமம் கிழக்குப் பிரிவில் கோப்பாய் வரை விஸ்தரிக்கப்பட்டுக் கோப்பாய் பரிவர்த்தனை நிலையத்தின் ஊடாக வழங்கப்படுகின்றது. கேபிள் தொலைபேசி இணைப்பை அச்சுசேலி-புத்தூர் பகுதிக்கு விஸ்தரிக்குமாறு நீண்டகாலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இந்த வருடம் முடிவதற்கு முன்னர் அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிக்கு ஒளி நுண் இழை இணைப்புடன் கூடிய கேபிள் தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது. இணைப்பு வழங்குவதற்கான உபகரணத் தொகுதி யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியிலும் ஆவரங்கால் சந்திப் பகுதியிலும் தலா 250 இணைப்புக்களை வழங்கக் கூடிய நவீன வசதிகளைக் கொண்ட தொலைபேசிப் பரிவர்த்தனைப் பெட்டிகள் நிறுவப்பட்டு பாவனையாளர்களுக்கான தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இணைப்புக்களை மேற்கொள்வதற்கான சாதனங்கள் தயாராக உள்ள போதிலும் அதனை இணைப்புச் செய்வதற்கான ஆளணிப் பற்றாக்குறையினால் தான் காலதாமதம் ஏற்படுவதாகவும், இந்த வருடம் முடிவதற்கு முன்னர் அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிக்கான இணைப்புகள் வழங்குவதற்கான வேலைகள் நிறைவு செய்யப்படும் எனவும் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவன [illegible] அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொலைபேசி இணைப்புக்கள் வீடுகள் தோறும் வழங்கப்படவிருப்பதால் இணைப்புக்குரிய கட்டணம் மட்டும் செலுத்த வேண்டும். மேலதிகக் கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

இணைப்புக்களுக்கான விண்ணப்பங்களைப் பிராந்திய அலுவலகத்தில் பெற்றுப்பூர்த்தி செய்து ஒப்படைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-11)

# தொழில் திணைக்களக் கட்டடத்தை பொறியியலாளர்கள் குழு பார்வை

யாழ்ப்பாணம்,.ஒக். 22

மத்திய தொழில் திணைக்களத்தின் பொறியியலாளர் குழுவினர் வடமாகாணத்துக்குத் திடீரென வந்து வடக்கின் தொழில் திணைக்கள அலுவலகத்துக்கு என அமைக்கப்படும் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை ஆய்வுசெய்தனர்.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைக்கப்படும் யாழ். தொழில் திணைக்களத்தின் மூன்று மாடிக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டதுடன் முதல் மாடிக்கான கட்டுமானப் பணிகளை அடுத்த மார்ச் மாதத்துக்குள் முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

இந்தக் கட்டடத்தின் பணிக்கு மொத்தம் 89.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.


இதில் முதற்கட்டப் பணிகளுக்கான 39.6 மில்லியன் ரூபா நிதியின் கீழ் மாடித் தளத்துக்கான பணிகள் நிறைவுபெற வேண்டும்.

இந்தப் பொறியியலாளர் குழுவினர் முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளுக்கும் விஜயத்தை மேற்கொண்டனர்.

இந்துப் பகுதிகளிலும் தொழில் திணைக்களத்தின் புதிய கட்டடங்களை அமைப்பது குறித்தும் அவர்கள் ஆராய்ந்தனர்.

பொறியியலாளர்களான வி.புஸ்பகுமார, என்.விஜயரட்ண மற்றும் தொழில் திணைக்கள அதிகாரிகள் இந்தக் குழுவில் இடம்பெற்றனர். (த-26)

# புதையுண்டது 'பைக்கோ'



கைதடி, ஒக். 22

ஏ-9 வீதித் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த ''பைக்கோ' கனரக வாகனம் சேற்றில் புதையுண்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை கைதடி பனை அபிவிருத்திச் சபைக் கட்டடத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் வீதித்திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த இந்தக் கனரக வாகனம் அங்குள்ள பள்ளம் ஒன்றுக்கு மண் அள்ளி அணையிட்டுக் கொண்டிருந்தபோது சில்லென்று புதையும் தறுவாயில் இருந்தவேளை அதனைச் சாரதி சேறு நிறைந்த கடற்கரைப் பிரதேசத்துக்குத் திருப்பினார். இதனால் இந்த வாகனம் அரைவாசிக்கும் மேல் புதையுண்டது. நேற்றுவரை இந்த வாகனம் அங்கு புதையுண்ட நிலையில் காணப்பட்டது.

இதேவேளை நாவற்குழிப் பாலத்திலும் நேற்று முன்[illegible] மதியம் வேகமாக வந்த [illegible]ணுவ வாகனம் ஒன்று பாலத்தில் மோதிச் சில்லுடைந்த நிலையில் நேற்று வரை தொடர்ந்தும் அந்த இடத்திலேயே உள்ளது. (த-288)

# மயானத்தில் சகோதரர்களுக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஒக். 22

மயானத்தில் பிணத்தைத் தகனம் செய்யும்போது இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதனால் சகோதரர்கள் இருவர் வாள் வெட்டுக்கு இலக்காகித் தலையிலும் கையிலும் படுகாயமடைந்தனர்.

இருவரும் உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் கற்கோவளம் வல்லிபுரக்குறிச்சி ஆனைவிழுந்தான் மயானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் கற்கோவளம் புனிதநகரைச் சேர்ந்த இருவரே காயமடைந்தர்கள் ஆவர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (த-12)

# அளவுக்கதிகமான மது வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.22

அளவுக்கதிகமாக மதுபானத்தை உடைமையாக வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அல்வாய்கிழக்கைச்சேர்ந்த சந்தேக நகர் ஒருவர் பருத்தித்துறை மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

இவர் சுமார் 1,500 மில்லிலீற்றர் கள்ளை உடைமையாக வைத்திருந்த போதே மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் சந்தேகநபருக்கு 1000 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இதேவேளை அரச சாராயத்தை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பருத்தித்துறை புலோலிப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். இவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் [illegible] வழங்கித் தீர்ப்பளித்தார். (த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பன் பிரதேச வைத்தியசாலையை மலேசியத் தூதுவர் திறந்து வைத்தார்



வைத்தியசாலையை மலேசியத் தூதுவர் மற்றும் ஆளுநர் இணைந்து திறந்து வைக்கின்றனர். (த-236)

யாழ்ப்பாணம், ஒக்.22

மலேசிய அரசின் ஒத்துழைப்புடன் 'மேர்சி மலேசியா' என்ற மலேசிய நிறுவனத்தினால் சுமார் 27 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அம்பன் பிரதேச வைத்தியசாலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

சிறப்பு விழா நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

வைத்தியசாலைக் கட்டடத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, இலங்கைக்கான மலேசியத் தூதுவர் அஷ்மி ஷனுதீன் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், சுகாதார சேவைகள் திணைக்களத்தின் வடமாகாணப் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ்.ஆர்.யூட், மருதங்கேணி உதவி அரச அதிபர் எஸ்.திருலிங்கநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

2000 ஆம் ஆண்டு குடாரப்புத் தரையிறக்க நடவடிக்கையின்போது இந்தப் பிரதேச மக்கள் இடப்பெயர்ந்தனர். பின்னர் ஏற்பட்ட போரால் இந்த வைத்தியசாலை மோசமாகச் சேதமடைந்தது. அதுபின்னர் 'மேர்சி மலேசியா' நிறுவனத்தால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர்கள் பிரிவு, மகப்பேற்றுப் பிரிவு, வைத்திய அதிகாரி விடுதி, மருந்தகம் போன்ற கட்டடங்களே 27 மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டன. (த-319)

# புதிய நூல்களின் கண்காட்சி பொதுநூலகத்தில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஒக்.22

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் ஏற்பாடு செய்திருந்த 'புதிய நூல்களின் கண்காட்சி' என்னும் தொனிப் பொருளில மைந்த கண்காட்சி நேற்று யாழ். நூலக வாசிப்பு மண்டபத் தில் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆரம்பித்து வைத்தார்.

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த 200 இற்கும் மேற்பட்ட புதிய நூல்கள் இதில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவற்றிலே சமயம், சட்டவியல், சிறுவர் நூல்கள், தமிழ் இலக்கிய நூல்கள் என பல தரப்பட்ட நூல்களும் ஆங்கில நூல்களும் அடங்கியிருந்தன.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ, யாழ். பல்கலைக்கழகப் பிரதம நூலகர் எஸ்.அருளானந்தம், யாழ். பொது நூலகத்தின் முன்னாள் பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம், யாழ். பொது நூலக உறுப்பினர்கள், யாழ். மாநகர சபை உறுப்பினர்கள், வாசகர் கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

புதிய நூல்களின் கண்காட்சி இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரைநடைபெறும். (து-311)

# இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.22

தலைக் கவசம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபர் ஒருவர் வல்வெட்டித்துறை பிரதான வீதியில் வீதிக் கண்காணிப்பு நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த வல் வெட்டித்துறை பொலிஸாரால் கைது [illegible]ய்யபபளட்டார்.

இதேவேளை, உரிய பதிவுகளை மேற்கொள்ளாமல் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற அல்வாயைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரும் வல்வெட்டித்துறைப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர்கள் பின்னர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் தலைக் கவசம் இன்றி வாகனத்தைச் செலுத்தியவருக்கு 1000 ரூபா அபராதமும், பதிவு செய்யாமல் வாகனத்தைச் செலுத்தியவருக்கு 2, 500 ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார். (த-311)

# இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை மலேசியா அரசு தொடர்ந்து வழங்கும்

## வைத்தியசாலைத் திறப்பு விழாவில் மலேசியத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஒக் 22

மலேசியா - இலங்கை இடையிலான நட்புறவின் அடையாளமாக இந்த வைத்தியசாலையைப் புனரமைக்கும் திட்டத்தை மேற்கொண்டோம். இலங்கைக்கான மனிதாபிமான உதவிகளை மலேசிய அரசு தொடர்ந்தும் வழங்கும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான மலேசியத் தூதுவர் அஷ்மி ஷனுதீன்.

மலேசியா அரசின் ஒத்துழைப்புடன் 'மேர்சி மலேசியா' நிறுவனத்தினரால் புனர்நிர்மானம் செய்யப்பட்ட அம்பன் பிரதேச வைத்தியசாலை திறப்பு விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கை - மலேசிய நாடுகளுக்கு இடையில் புரிந்துணர்வை மேம்படுத்தும் வகையில் பல்வேறு மனிதாபிமான உதவிகள் மலேசிய அரசால் வழங்கப்பட்டுவருகின்றன.

அந்த வகையில் நாம் உலக நாடுகளுக்கு மனிதாபிமான உதவிகளை மூன்று வகையாக வழங்கி வருகின்றோம்.

செட்டிகுளம் மனிக்பாம் முகாமிலும் இந்த நிறுவனம் உதவித் திட்டங்களை மேற்கொண்டது. மலேசிய நிதியம் என்ற அமைப்பு ஆசிய நாடுகளில் அனர்த்தங்கள் ஏற்படுகின்றபோது உதவிகளை வழங்குகின்றது.

அவ்வாறு 'மேர்சி மலேசியா' நிறுவனத்தால் இந்த வைத்தியசாலை புனரமைக்கப்பட்டுளது. இந்த வைத்தியசாலை மக்களுக்கு ஆரம்ப சுகாதார சேவைகளை சிறப்பாக வழங்கும் என நம்புகின்றேன். இரண்டு நாட்டு அரசுகளுக்குமான உதவிகள், அரச- அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான உதவிகள், மக்களுக்கான உதவிகள் என்ற அடிப்படையிலேயே நாம் வழங்கி வருகின்றோம்.

அந்த வகையில் கடந்த எட்டு வருடங்களாக 'மேர்சி மலேசியா' நிறுவனம் மட்டக்களப்பு, அம்பாறை ,வன்னி போன்ற பகுதிகளில் பல்வேறு மனிதாபிமான வேலைத்திட் டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை - மலேசியா நாடுகளுக்கிடையான நட்புறவின் சின்னமாக இந்த வைத்தியசாலையை புணரமைக்கும் திட்டத்தை மேற்கொண்டோம் - என்றார். (த-319)

# வெள்ளத்தில் மிதக்கும் தனியார் பஸ் நிலையம்

## மழை தொடர்ந்தால் நிலைமை மோசம்



யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள தனியார் பஸ் தரிப்பு நிலையத்தின் சுற்றாடலில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு நிலவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இருவாரங்களுக்கு முன்னர் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இந்தப் பகுதியைச் [illegible]ன்று பார்வையிட்டனர்.

இப்பகுதியில் வெள்ளம் தேங்காமல் உரிய நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டு தருவதாகக் கூறிவிட்டுப் பறந்தனர் அவர்கள்.

இருவாரங்கள் கடந்தும் இந்தப் பகுதியில் தேங்கியுள்ள வெள்ளத்தை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் யாழ்.மாநகர சபையால் மேற்கொள்ளப்படவில்லையெனத் தனியார் பஸ் உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தற்போது மாரி மழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில் இந்தப் பகுதியில் வெள்ளம் தொடர்ந்து தேங்குமானால் தனியார் பஸ் சாரதிகள், பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் அவசர கவனம் செலுத்தி இப்பகுதியில் வெள்ளம் தேங்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-26)

# கோப்பாய் கல்விக் கோட்டத்தின் அடைவு மட்டம் பெரும் வீழ்ச்சி

## அதனை உயர்த்த விசேட ஏற்பாடு

அச்சுவேலி, ஒக்.22

கோப்பாய் கல்விக் கோட்டத்தின் கல்வி அடைவு மட்டத்தை மேல் நிலைப்படுத்துவதற்கு விசேட செயற்றிட்டங்களை முன்னெடுக்க யாழ். கல்வி வலய மட்டத்தில் ஏற் பாடுகள் செய்யப்பட்டு வரு கின்றன.

யாழ். கல்வி வலயத்தில் உள்ள மூன்று கல்விக் கோட்டங்களிலும் கோப்பாய்க் கோட்டத்தின் கல்வி அடைவு மட்டம் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது. அண்மையில் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புலமைப் பரிசில் பெறுவதற்குத் தகுதி பெற்றோ [illegible] தரம், ஜி.சி.ஈ. உயர்தரம் ஆகிய பரீட்சைப் பெறு பேறுகளும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளன.

புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் ஆரம்பப் பாடசாலைகள், இடைநிலைப் பாடசாலைகள், குறிப்பிடத்தக்களவு பெறுபேற்றைப் பெற்று முன்னிலையில் இருக்கும் அதே வேளை வளவசதி படைத்த 1ஏ, பி தரப்பாடசாலைகள் மற்றும் 1சீ தரப்பாடசாலைகளின் அடைவு மட்டம் தாழ்ந்த நிலையில் இருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். கல்விக் கோட்டம், நல்லூர் கல்விக் கோட்டம் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் பரீட்சைப் பெறுபேறுகள் மடங்கு கணக்கில் குறைந்து காணப்படுவதோடு கோப்பாய் கல்விக் கோட்டத்தின் பெறுபேறுகள் யாழ். கல்வி வலயத்தை வீதாசாரத்தில் பின்தங்கச் செய்து விடுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கோப்பாய் கல்விக் கோட்டத்தின் மாணவர்களின் கல்வி அடைவு மட்ட வீழ்ச்சியை கணிசமான அளவு மேல்நிலை படுத்துவதற்கு விசேட ஏற்பாடுகளை யாழ். கல்வி வலயம் மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் தனித்தனியாகப் பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடி அதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்படவுள்ளன. (த-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளை வளர்க்க முடியாது என்றால் எம்மிடம் கொண்டுவந்து ஒப்படையுங்கள்

## நன்னடத்தை மற்றும் சிறுவர் நல திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.22

இன்று பல்வேறு காரணங்களுக்காக தமது குழந்தைகளைக் கைவிட்டுச்செல்லும் அல்லது கொலைசெய்யும் தாய்மார் சமூகத்தில் அதிகரித்து வருகின்றனர்.

பெற்றோர் தாம் செய்யும் தவறுகளுக்காக தமது பிள்ளைகளைத் தண்டிப்பதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்திருக்கும் நன்னடத்தை மற்றும் சிறுவர் நல திணைக்களம், அவ்வாறான பிள்ளைகளை திணைக்களத்திடம் ஒப்படைக்கும்படி அறிவித்துள்ளது.

குழந்தை ஒன்றைத் தத்தெடுப்பது வெட்கமான காரியம் என்று இலங்கையில் கருதப்படுகிறது. மக்கள் பிள்ளைகளைத் தத்தெடுப்பதை வெளிப்படையாகச் செய்ய முன்வர வேண்டும். ஒரு பிள்ளைக்கு எதிர்காலத்தில் நல்ல வாழ்க் கை ஒன்றைப் பெற்றுக்கொடுக்க இது வழியமைக்கும் என்று திணைக்களத்தின் அதிகாரி நிர்மலி பெரேரா தெரிவித்தார்.

திருமணமாகாது குழந்தை பிறந்த காரணத்தினாலும், வறுமையினாலும் மற்றும் பெற்றோருக்கிடையிலான முரண்பாடுகள் காரணமாகவும் பிள்ளைகளைக் கைவிடும் அல்லது கொலை செய்யும் முடிவைப் பெற்றோர் எடுக்கின்றனர். எனினும், இவர்கள் தமக்கு மாற்று ஏற்பாடு ஒன்று உள்ளது என்பதை அறியாமலேயே உள்ளனர் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

இலங்கையில் நன்னடத்தை மற்றும் சிறுவர்நல திணைக்கள மாகாண ஆணையாளரூடாக, 14 வயதுக்குட்பட்ட ஒரு பிள்ளையைத் தத்தெடுப்பதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

அவ்வாறு விண்ணப்பித்தவரின் தகுதி, பொருத்தப்பாடு ஆராயப்பட்டு அவருக்கு குழந்தை ஒன்றைத் தத்துக் கொடுப்பதற்கான பதிவு மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட (UNDP) நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கான பிரஜாவுரிமைப் பத்திரங்களை வழங்குவதற்கான நடமாடும் சேவையில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கான பிரஜாவுரிமை சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்றது. பிரஜாவுரிமைச் சான்றிதழ்களுடன் சிறார்கள் நிற்கின்றனர்.

# ஜனநாயக உரிமைகளை மக்கள் இழந்தால் நாட்டில் நிலமானிய முறை உருவாகும்

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.22

இறைமை மக்களிடமும் சட்டத்திலும் உள்ளது. இந்த நிலையில் வாக்குரிமையை ஒழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அத்துடன் ஜனநாயக உரிமைகளை மக்கள் இழந்துவிட்டால் நிலமானிய முறையே இந்தநாட்டில் உருவாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விளைநிலங்களில் குத்தகை அடிப்படையில் செய்கை பண்ணும் கமத்தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான கமநல அபிவிருத்தி திருத்தச்சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதானவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.தெற்காசியா நாடுகளைத் தவிர ஆசிய வலயத்திலுள்ள ஏனைய நாடுகளிலும், ஐரோப்பாவிலும் நிலமானிய முறைமை ஒழிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த நிலமானிய முறைமை ஒழிக்கப்பட வேண்டும். நிலமானிய முறைமையின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் குறித்து நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். எமது நாட்டைப் பொறுத்தவரை குத்தகை விவசாய முறைமை இன்றும் உள்ளது. குத்தகை விவசாயம் பாதிக்கப்பட்டால் காணி உரித்தாளர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும். அத்துடன் குத்தகை விவசாய முறைமை முழுமையாக நீக்கப்படவேண்டும் என்றால் காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

குத்தகை விவசாயம் கிழக்காசிய, கம்யூனிஸ்ட் முதலாளித்துவ நாடுகளில் இல்லை. இந்த நிலையில், மக்களின் ஜனநாயக் வாக்குரிமையை ஒழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது நாட்டில் இறைமை மக்களிடமும் சட்டத்திலும் உள்ளது. மக்கள் ஜனநாயக உரிமைகளை இழந்தால் நிலமானிய

# ஐ.நா.சபையின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.22

ஐக்கிய நாடுகள் சபை தாபிக்கப்பட்டதன் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்.மாவட்டத்திலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தில் சகல ஐ.நா பணியாளர்களும் ஒன்று கூடி ஐ.நா. கொடியை முற்பகல் 10 மணிக்கு ஏற்றவுள்ளனர். இதன்பின்பு நாவாந்துறையில் உள்ள சிறுவர் அரங்கைதுப்புரவு செய்து அழகுபடுத்தும் பணியில் ஐ.நா. பணியாளர்கள் ஈடுபடவுள்ளனர்.

அன்றையதினம் மாலை அந்தச் சமூகத்தினருடனான பொழுதுபோக்கு நிகழ்வுகளிலும் ஈடுபடவுள்ளனர்-என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-15)

# மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளராக கௌரிசங்கர்

யாழ்ப்பாணம், ஒக்.22



இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளராக சிதம்பரப்பிள்ளை கௌரி சங்கர் அண்மையில் புதிதாகப் பதவியேற்றுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் 34 வருட அனுபவத்தைக் கொண்ட கௌரிசங்கர் பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றியுள்ளார். இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களம், வங்கித் தொழில் திணைக்களம், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், புள்ளிவிவரத் திணைக்களம் மற்றும் தொடர்பூட்டல் திணைக்களம் ஆகியவற்றிலேயே கடமையாற்றியுள்ளார்.

மத்திய வங்கியின் வடபிராந்தியக்கிளை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கடமையாற்றிய இ.சிறீதரன் மேற்படிப்புகளுக்காக அமெரிக்கா சென்றதைத் தொடர்ந்து கௌரிசங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(வ-15)








## திருமண சேவை

* 80 இல் பிறந்த 2இல் செவ்வாய் உள்ள 51 பாவம் உடைய லண்டனில் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு லண்டனில் அல்லது ஊரில் மணமகள் தேவை. உயரம் 5அடி 2அங்குலமாக இருக்க வேண்டும்.
* 76 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 22½ பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்ற மண மகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 78 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 33½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற எக்க வுண்டனாகபணி புரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 1இல் செவ்வாய் 24¼பாவமுடைய சொப்வயர் இஞ்சினியருக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
* 75 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 44½ பாவமுடைய BSc சைவ போசன ஆசிரியருக்கு சைவ போசனமுள்ள பட்டதாரி மணமகள் தேவை.
* 76 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 15¾ பாவமுடைய அபுதாபியில் எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)
* 68 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 33½ பாவமுடைய சுயதொழில் புரியும் முதுசமுள்ள மண மகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
* 75 இல் பிறந்த 1இல் செவ்வாய் உள்ள 23¾ பாவ முடைய விவாகரத்து பெற்ற தொழில் நுட்ப வியலாளருக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)
* 79 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 15 பாவமுடைய ஆஸ்திரேலியாவில் சொப்வயர் இஞ்சினியருக்கு C.I.M,A.B.Com இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த 2இல் செவ்வாய் உள்ள 54¼ பாவமுடைய சிவில் இஞ்சினியருக்கு பட்டதாரி மண மகள் தேவை.
* 84 இல் பிறந்த 8இல் செவ்வாய் 50¼ பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்ற மணமகளுக்கு கனடா விலோ ஊரிலோ படித்த மணமகன் தேவை.

தொடர்பு :-
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.171/1, மனோன்மணி அம்மன் கோவிலடி, நல்லூர்.
T.P: 0776070862.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி வேட்பாளர் பொன்சேகாவின் தெளிவற்ற பொருளாதாரக் கொள்கை

## அமெ. தூதரகச் செய்தியை கசியவிட்டது விக்கிலீக்ஸ்

கொழும்பு,ஒக்.22

ஜெனரல் பொன்சேகாவை ஆதரிப்பதன் மூலம் ஐ.தே.க. ஒரு பயங்கரமான விளையாட்டில் ஈடுபட்டுள்ளது. ஏனெனில், இலங்கை ஜனாதிபதி அதீத சக்தி படைத்தவர். பொன்சேகா ஜனாதிபதியானால், எத்தகைய பொருளாதாரக் கொள்கைகளை ஆதரிப்பார் என்பதில் எத்தகைய தெளிவும் இல்லை.

இவ்வாறு குறிப்பிட்டு கொழும் பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வாஷிங்டனுக்கு அனுப்பிய இரகசிய கேபிள் கடிதம் 'விக்கிலீக்ஸ்' இல் வெளியாகியுள்ளது.

பொன்சேகாவின் ஊழல் பின்னணி தொடர்பான வாக்குவாதம் சம்பந்தமான தகவல்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

2010 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அமெரிக்கத் தூதுவர் பெற்றீஷியா ஏ. புடினிஸால் இந்தக் கேபிள் கடிதம் எழுதப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் பொன்சேகா ஓர் இராணுவ நபர். பொருளாதார விவகாரங்களில் தமக்குப் போதிய அறிவு கிடையாது என்றும், சொற்ப ஞானமே உண்டு என்றும் பகிரங்கமாக ஒப்புக்கொண்டவர். ஊழலைச் சாடும் நிலைப்பாட்டைத் தவிர, அவரிடம் வெளிப்படையான எத்தகைய பொருளாதாரத் திட்டமும் கிடையாது.

முரண்பாடில்லாத பொருளாதாரக் கொள்கையை நோக்கிப் பயணிப்பது, அவரைப் பொறுத்த மட்டில் பகீரதப் பிரயத்தனமான ஒரு கடினமான செயலாக அமையும். அவரை ஆதரிக்கும் எதிரணிக் கட்சிகள், பொருளாதார நோக்கத்துக்கும் கொள்கைக்கும் குறுக்கீடுகள் செய்யக்கூடும். பொன்சேகா ஊழல் விவகாரங்களைப் புட்டுவைக்கத் திட்டமிட்டுள்ளவர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்த இடத்தில் பலவீனமானவராக இருக்கிறார் என்பதை நோக்குவதிலும், ஊழலைச் சாடுவதிலும் வாக்காளர்களுக்காக அரசு வீண் விரயம் செய்வதையும் அவதானிக்கும் ஒருவராகவே பொன்சேகா உள்ளார்.

அதிக வாக்காளர்கள் பொருளாதாரத்துக்கே முன்னுரிமை வழங்குகிறார்கள். இந்தத் தருணத்தில் இருசாராரும் பிரசித்திபெற்ற குணாதிசயங்களையும், கடந்த காலத்தில் நிறைவேற்றிய செயல்களையுமே தூக்கிப்பிடித்து வருகிறார்கள். இவ்விரு சாராரும் எதிர்காலத்துக்கான காத்திரமான பொருளாதாரக் கொள்கையையோ, அரசியல் மேடையையோ குறிப்பிடவில்லை -இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-சி)

# கட்சியில் ஒற்றுமை தேவை என்ற செய்தியை மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வழங்கினர்

## ரவி கருணாநாயக்க எம்.பி.கூறுகிறார்



கொழும்பு,ஒக்.22

கட்சி மீண்டும் ஒன்றுபட வேண்டும் என்ற செய்தியை கொழும்பு மாநகர மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வழங்கியுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட செயற்பாட்டாளர்களின் சந்திப்பு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சியில் உள்ள சகலரும் அனைத்துப் பகுதிகளிலும் தமது ஒற்றுமையை வெளிக்காட்ட வேண்டும். கட்சியின் முன்னேற்றத்திற்கு ஒழுக்கம் அவசியம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் அனைவரையும் இணைத்துக்கொண்டு தற்போதைய அரசை தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையே கொழும்பு மக்கள் தேர்தல் வெற்றியின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளனர் - என்றார். (ச-சி)

# அரசுடைமையான தென்னங்காணி அபகரிப்பு

கொழும்பு,ஒக்.22

புத்தளம் மாவட்டத்தில் கடமை புரியும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் அந்த மாவட் டத்தில் அரசுக்குச் சொந்தமான இரண்டு கோடி ரூபா பெறுமதியான தென்னந் தோப்பு ஒன்றை அபகரித்துள்ளார் என்று காணி அபிவிருத்தி அமைச்சரான ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி பிரதேசத்தில் கண்டக்குளி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள அரசுக்குச் சொந்தமான தென்னங் காணியையே அவர் இவ்வாறு கைப்பற்றியுள்ளார் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-சி)



பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் இலங்கை விமானப் பயிற்சிக் கல்லூரியை நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்துவைத்துள்ளார்.

## ஊழியர் சேமலாப நிதியத்தின் இரு பிரிவுகள் இடமாற்றம்

கொழும்பு, ஒக். 22

இலங்கை மத்தியவங்கி செலிங்கோ கட்டடத்தில் இயங்கிவந்த ஊழியர் சேமலாப நிதியத்தின் இரண்டு பிரிவுகள் கடந்த புதன்கிழமை தொடக்கம் அதே கட்டடத்திற்கு அண்மையிலுள்ள லொயிட்ஸ் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன என்று மத்திய வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-சி)

# தேயிலைக் காணிகள் பறிபோகும் அபாயம்; உரிமைகளைக் காக்க ஓரணியில் திரளுங்கள்

## அமைச்சர் தொண்டமான் அறைகூவல்

கொழும்பு,ஒக்.22

தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ஓரணியில் நிற்கவேண்டும். கண்டி, மாத்தளை போன்ற மாவட்டங்களில் தேயிலைக்காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. மத்துரட்ட பிளான்டேஷன், மஸ்கெலிய பிளான் டேஷன் ஆகிய கம்பனிகளுக்கு உட்பட்ட தோட்டங்கள் பறிபோகும் அபாய நிலவி வருகின்றது.

- இவ்வாறு முன்னெச்சரிக்கை விடுத்திருக்கிறார் அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஆறுமுகன் தொண்டமான்.

காங்கிரஸின் அமைப்பாளர்களை ஹற்றனில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்கான ஒரு இயக்கத்தைக் கட்டியெழுப்பி வழிநடத்துவதற்குத் தகுதியானவரை இனங்கண்டு தெரிவுசெய்து தகுந்த பதவிகளில் அமர்த்தி எமது ஸ்தாபனத்தையும் சமூகத்தையும் கட்டியெழுப்புவதே இ.தொ.காவின் இலட்சிய நோக்கம்.

சமூக மேம்பாட்டுக்கு ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளையும் சலுகைகளையும் வென்றெடுக்கலாம்.

மலையகத்திலுள்ள எமது அங்கத்தவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கான பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் இ.தொ.கா. விரிவான திட்டங்களை வகுத்து இவற்றை நடைமுறைப்படுத்தும் பணிகள் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்றார். (ச-சி)

# வன்னியில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட விவசாயக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## சபையில் செல்வம் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,ஒக்.22

வன்னியில் இராணுவத்தினரால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ள விவசாயக் காணிகளும், விவசாயிகளின் டிரக்டர் மற்றும் இயந்திரங்களும் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் - என்று வன்னி மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கமநல சேவைகள் அபிவிருத்தி திருத்தச் சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று நாட்டின் பல பாகங்களிலும் உள்ள விவசாயிகள் பல்வேறு விதமான பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக வன்னி மாவட்ட மக்கள் சுயமாக விவசாயம் செய்து வந்தவர்கள். முப்பது வருட யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகளினால் எல்லாவற்றையும் இழந்து நிற்கின்றனர்.

வன்னி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்ந்த விவசாயிகள் நாளாந்தம் உழவு இயந்திரம் மற்றும் விவசாயக் கருவிகள் என சொந்தமாக வைத்திருந்தனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்ற இடப்பெயர்வின்போது தமது வாகனங்கள், விவசாய உழவு இயந்திரங்கள் எல்லாவற்றையும் அவர்கள் முள்ளிவாய்க்காலில் விட்டுச் சென்றனர்.

ஆனால், எமது மக்களர் சொந்த உடைமைகளை மீண்டும் பெற இராணுவம் தடைவிதித்துள்ளது. அதேபோல் எமது மக்களின் சொந்தமான வாகனங்கள் தென் பகுதிக்குக் கடத்திவரப்பட்டு இரும்புக்காக விற்கப்படுகின்றன. இதனை உடனடியாக நிறுத்தவும், எமது மக்கள் தங்கள் உடைய வாகனங்களையும், இயந்திரங்களையும் மீளவும் எடுத்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மீள்குடியேற்றப்பட்டுள்ள எமது விவசாயிகளுக்குச் சொந்தமாக வீடுகளும் இல்லை, தமது விவசாய காணிகளில் விவசாயம் செய்ய அனுமதியும் இல்லை. விவசாயிகளின் காணிகளும் கமநல சேவைகள் திணைக் களத்திற்குச் சொந்தமான காணிகளும் இராணுவத்தினர் அனுபவிக்கின்றனர். இவை விடுவிக் கப்பட வேண்டும்.



எனவே, அரசு நெல்லுக்கு உத்தரவாத விலையை நிர்ணயிக்க வேண்டும். அப்போது தான் விவசாயிகள் நன்மை அடைய முடியும்.

அரச விவசாயத் திணைக்களம் பெயரளவில் சிறு தொகை நெல்லை மட்டுமே கொள்வனவு செய்கின்றது. மிகுதி நெல்லை தனியார்கள் மிகவும் குறைந்த விலைக்கே வாங்குகின்றனர். இந்த நிலை மாறவேண்டும்.

இடைத் தரகர்களினால் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைகின்றனர். எத்தனை சட்டங்களை இங்கே நிறைவேற்றினாலும் பயன் இல்லை. அவர்களின் உற்பத்திகளுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் - என்றார். (ச-சி)

# நீண்ட தூர சேவைக்கு 400 பஸ்கள் இறக்குமதி

கொழும்பு,ஒக்.22

நீண்ட போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுவதற்காக 400 பஸ்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இந்த பஸ்கள் அடுத்த மாதம் இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் எம்.டீ.பந்து சேன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் 400 பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பஸ்களை நீண்டதூர போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கடற்படுகையில் எண்ணெய் வளம்



மன்னார் கடற்படுகையில், எரிவாயு வளம் இருப்பதைக் கெய்ன் இந்தியா நிறுவனம் உறுதிப்படுத்தியிருப்பதாக கண்டியில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்த செய்தி உலகிலுள்ள ஏராளமான ஊடகங்களில் செய்தியாகியுள்ளது.

போர் பற்றியும் அதற்குப் பின்னர் போர்க்குற்றங்கள், மனித உரிமைகள் தொடர்பாகவுமே இலங்கையில் இருந்து செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்த நிலையில் - இந்தச் செய்தி இலங்கையை வேறொரு கோணத்தில் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

அதனால் தான் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்ட செய்தியை பெரும்பாலான ஊடகங்கள் முக்கியமாக உற்று நோக்கியுள்ளன.

அதேவேளை, சர்வதேச அளவில் இந்தச் செய்தி பரபரப்பாக வெளிவந்து கொண்டிருக்க, இலங்கையில் இதுபற்றிய சந்தேகங்களும் கிளம்பவே செய்துள்ளது.ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்த பின்னர் தான் கெய்ன் இந்தியா நிறுவனம் தாம் தோண்டுகின்ற எண்ணெய்க் கிணற்றில் இருந்து எரிவாயு கண்டறியப்பட்டது பற்றிய செய்தியை வெளியிட்டுள்ளது.

மன்னார் கடற்படுகையில் எண்ணெய் வளம் இருப்பதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட பகுதியை அரசு எட்டுத் துண்டுகளாப் பிரித்து வைத்துள்ளது.இவற்றில் ஒன்று கெய்ன் இந்தியா நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனையவற்றில் ஒன்று சீனாவுக்கும் மற்றொன்று இந்தியாவுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் ஐந்து துண்டங்கள் யாருக்கும் வழங்கப்படாமல் உள்ளன.

கெய்ன் இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட துண்டில் தான் கடந்த ஒகஸ்ட் மாதம் பரீட்சார்த்தமாக எண்ணெய்க் கிணறு ஒன்றைத் துளையிடும் பணி தொடங்கப்பட்டது.

CLPL-Dorado-91H/1z என்று பெயரிடப்பட்ட இந்தக் கிணற்றில் இருந்தே இயற்கை எரிவாயு கண்டறியப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளது.

கெய்ன் இந்தியா நிறுவனம் இதனை உறுதி செய்திருக்கின்ற போதும், இது வணிக ரீதியான உற்பத்திக்கு ஏற்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள மேலும் துளையிட வேண்டும் என்று கூறியுள்ளது.





அதற்கிடையில் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டதை ஒரு தரப்பினர் பெருமையாகக் கூறிக் கொள்ள இன்னொரு தரப்பு இதெல்லாம் வெறும் தேர்தல் விளையாட்டு என்று மறுத்தாடத் தொடங்கியது.

கண்டியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த அறிவிப்பை வெளியிட்டது ஒரு தேர்தல் நோக்கம் கருதிய கூட்டத்தில் தான். அவர் மீண்டும் கண்டிக்கு வந்து போகம்பரையில் பெற்றோல் கிடைத்துள்ளதாக கூறினாலும் ஆச்சரியமில்லை என்று ரணில் விக்கிரமசிங்க கூறினார். ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு எரிவாயு விவகாரத்தை சர்ச்சையாக்கியுள்ளதற்கும் காரணங்கள் உள்ளன.

முன்னர் சிறிமாவோ பண்டாரநாயக்க பேசாலையில் பெற்றோல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவித்ததாகவும், சந்திரிகா குமாரதுங்க மன்னாரில் பெற்றோலிய வளம் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறியதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அது போலவே இதுவும் இருக்கலாம் என்பது அவரது சந்தேகம். அதனால் தான் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது பற்றிய அறிவிப்பை நாடாளுமன்றத்தில் அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும் என்று சவால் விடுத்துள்ளார். இதனை அரசும் நிறைவேற்றுமா என்று தெரியவில்லை.

அதேவேளை அமைச்சர்கள் சிலர் எரிவாயு வந்து விட்டதால், இனிமேல் இலங்கை அபிவிருத்தி அடைந்து விடும் என்பது போல குதிக்கிறார்கள். இப்போது கண்டுபிடிக்கப்பட்டது வெறும் இயற்கை எரிவாயு தான்.



இது திரவ எரிவாயு அல்ல. திரவ எரிவாயுவாக இதனை மாற்றினால் தான் அதனை சமையல் தேவைக்கோ அல்லது வேறு தேவைகளுக்கோ பயன்படுத்த முடியும்.

அதற்கு இந்த எரிவாயுவை கடல் மட்டத்துக்கு கொண்டு வந்து சுத்திகரிக்க வேண்டும். அதற்கானதொழில்நுட்பங்களுக்கு பெருமளவில் செலவிட வேண்டும்.

அதைக் கெய்ன் இந்திய நிறுவனம் பார்த்துக் கொள்ளும் என்றாலும், அதனைக் கடல் மட்டத்துக்கு கொண்டு வந்து சுத்திகரிக்க- வணிக ரீதியாக உற்பத்தி செய்யும் அளவுக்கு போதுமான எரிவாயு மன்னாரில் உள்ளதா என்ற கேள்வியே முக்கியமானது.

பல ஆயிரம் கோடி ரூபாவைச் செலவழித்து தொழில்நுட்ப சாதனங்களைப் பொருத்தி கிணறுகளை அமைத்த பின்னர், போதிய எரிவாயு இல்லையென்று அதனை மூடுவதால் பெரும் நட்டம் தான் ஏற்படும்.

*(தொடரும்)*


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
10 - 10 - 1936

ஆண்டவன் அடியில்
31 - 10 - 2010



**அமரர் இளையகுட்டி சிவகுரு**

திதி: (22.10.2011) சனிக்கிழமை

ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நினைவு மட்டும் மாறாது
ஓராண்டு ஓடி மறைந்தனவே உங்கள்
நினைவுகள் மறப்பதற்குரியதுவோ
நாம் வாழும் காலம் வரை
உங்கள் நினைவும் எம்முடன் வாழும்
உமது ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.


## ஐ.சி.டி.எல். சான்றிதழ்கள்

கிளிநொச்சி, ஒக்.22

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்து ஸ்ரீ சோபித தொழிற்பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் கிளி நொச்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி வலயக் கல்வி அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவில் இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியுமென கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-405)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
01 ★ 05 ★ 1973



விண்ணில்
22 ★ 10 ★ 2008

**சண்முகம் ஸ்ரீதரன்**

ஆண்டுகள் மூன்று சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம்மை விட்டுப்பிரியாது.

சுதுமலை தெற்கு,
ஐங்கரன் வீதி, மானிப்பாய்

குடும்பத்தினர்.

### விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் சிங்கர் குளிர்சாதனப் பெட்டி ஒன்றும்(Double door) மின்சார அடுப்பு (நான்கு அடுப்பு சேர்ந்தது) ஒன்றும் சிறிய பழுதுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- 0750416010

### German, Swiss மொழிகள்

German Embassy இல் கேட்கப்படும் Certificate க்கு ஏற்றவாறு . A1-A2 வகுப்புக்கள் ஆரம்பமாகிறது. Audo Book விளக்கத்துடன்

No.10, Palaly Road, Jaffna.
T.P- 0771604823.

### கிறிஸ்தவ திருமண சேவை

மணமகன் கனடா நாட்டு குடியுரிமையுடையவர் யாழ்.கௌரவ றோமன் கத்தோலிக்க குடும்பம் 1979, ரோஹிணி, இடபராசி,7 ல் செவ்வாய் 6 அடி G.C.E.A/L தனியார் கம்பனியில் பணிபுரிபவர். RC கௌரவ குடும்பம் 1971 திருவோணம், மகரராசி, 2ல் செவ்வாய் 5'10" G.C.E.A/L முகாமைத்துவ உதவியாளர் அரசபணி வகிக்கும் மணமகன்களுக்கு படித்த அழகான, பணியில் உள்ள மணமகள் தேவை.

எஸ்.கே.சிவகரன் (அமைப்பாளர்)
சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
இராமலிங்கம் வீதி, (பூங்கனிச்சோலை அருகில்), திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
0750741451, 0779694009

### வீடு விற்பனைக்கு

15/3 கடற்கரை வீதி ஈச்சமோட்டையில் 1½ பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0750700166

### வீடு வாடகைக்கு

இரத்தினபுரம், கிளிநொச்சி A9 வீதியிலிருந்து 750 M இல் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0772405165
0212285562

### வீடு, வளவு விற்பனைக்குண்டு

மானிப்பாய் - இணுவில் வீதியில்
மானிப்பாயில் இருந்து 500 M தூரத்தில்
இணுவில் வீதிக்கு அருகில் 2¼ பரப்பில்
புதிதாக கட்டப்பட்ட வீடு நல்ல
தண்ணீர்க் கிணற்றுடன்
விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0776569911

### கட்டடம் விற்பனைக்கு

சாவகச்சேரி டச்சுவீதியில் (நவீன சந்தைக்கு முன்பாக) குறுவழி பாதைகள் கொண்ட, இரண்டு பரப்புக்காணியில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0213201176
0776934120


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயமாகத் தொழில் செய்ய முடியாத நிலையில் முடக்கப்பட்டுள்ள கொக்கிளாய் மீனவர்கள்

முல்லைத்தீவு,ஒக்.22

முல்லைத்தீவு முகத்து வாரம், கொக்கிளாய் ஆற்றுப் பகுதி ஆகியவற்றில் தமிழ் கடற்றொழிலாளர்கள் எவரும் சுயமாகத் தொழில் செய்ய முடியாதுள்ளதாக இவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கொக்கிளாய் சுற்றுப் பகுதியில் புளியமுனை, இலந்தை முனை, கொக்கிளாய் மேற்கு, கொக்கிளாய் கிழக்கு ஆகிய பகுதிகளில் உள்ள இவர்கள் கடந்த 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிறுகடற்றொழிலை மேற்கொண்டு வந்தனர்.

இதன் பின்னர் ஏற்பட்ட இடப்பெயர்வையடுத்து தற்போது இந்த ஆற்றுப் பகுதியில் தொழில் நடவடிக்கைகள் எவற்றிலும் தமிழ் பேசும் கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடமுடியாத நிலை காணப்பட்டது.

தற்போது இந்தப் பகுதியில் மீளக்குடியேறியுள்ள இந்த மக்கள் கடற்றொழிலில் ஈடுபடமுடியாதுள்ளதாக கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் தாங்கள்தான் இவ்வாற்றுப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டு வந்ததாகவும் அதற்கு ஏற்ற வகையில் யாப்பு ஒன்றும் அனுமதிப் பத்திரங்களும் உள்ளது எனவும் அதனை மீறியே தற்போது தமது தொழில் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாகத் தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதாவது 1972 இல் முல்லைத்தீவு மாவட்டத்தின் முதலாவது கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமாக கொக்கிளாய் கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டது.

அதன் பின்னர் 1982 ஆம் ஆண்டு கொக்கிளாய் ஆற்றில் தடை செய்யப்பட்ட வலைகள், எரிபொருள் வெளியிணைப்பு இயந்திரங்கள் எவையும் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டு அதனடிப்படையில் யாப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு அதன்படி ஆற்றின் இயற்கை வளங்களையும் பாதுகாத்து கடற்றொழிலில் ஈடுபடக்கூடிய வகையில் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால் தற்போது வெளி இணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகள் தடைசெய்யப்பட்ட வலைகள் என்பவற்றைப் பயன் படுத்திச் சிங்களக் கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் பேசும் தொழிலாளர்கள் எவரும் கடலுக்குள் இறங்க முடியாத நிலை காணப்படுகின்றது. தற்போது தமது வீட்டு முற்றத்துக்கு அருகில் உள்ள கடலில் தொழில் செய்ய முடியாது உள்ளதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தாம் பிறந்து வளர்ந்தது தொடக்கம் இந்த ஆற்றிலே சுதந்திரமான முறையில் மீன்பிடித்து வந்ததை நினைவு கூரும் இவர்கள் தற்போது தமது உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டுள்ளதாகக் கூறிக் கவலைப்படுகின்றனர்.

(க-6)

# இளைஞர் குழுவால் தாக்கப்பட்டவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதி

வவுனியா,ஒக்.22

வவுனியா குருமண்காட்டுப் பகுதியில் உள்ள அரசியல் கட்சியொன்றின் அலுவலகத்துக்கு அருகில் அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் இருவர் இளைஞர் குழுவொன்றினால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் அலுவலகக் கடமைகளை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மேற்படி உத்தியோகத்தர்கள் இருவரும் அவ்வீதியில் வீழ்ந்து கிடந்த ஒருவரைத் தூக்கி விட முற்பட்டனர். இந்த சந்தர்ப்பத்தில் அந்த இடத்துக்கு மது போதையில் வந்த இளைஞர் ஒருவர் மேற்படி உத்தியோகத்தர்களிடம் முரண்பட்டுள்ளார்.

பின்னர் முரண்பட்ட இளைஞர் தனது நண்பர்களை அவ்விடத்துக்கு வரவழைத்து அவர்களின் உதவியுடன் அரச சார்பற்ற உத்தியோகத்தர்களைத் தடிகளால் அடித்து காயப்படுத்தியுள்ளனர்.

தலையில் காயமடைந்த இருவரும் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் கொலைக் குற்றம் தொடர்பாகச் சிறையில் அடைக்கப்பட்டு அண்மையில் விடுதலையானவர் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வரும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி

முல்லைத்தீவு, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி பல்வேறு பௌதிக மற்றும் ஆளணி வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதாகப் பல்வேறு தரப்புக்களாலும் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகக் காணப்படும் வித்தியானந்தாக் கல்லூரியில் சுமார் 1300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இதில் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய உயர்தர வகுப்புக்களில் சுமார் 400 மாணவர்கள் உள்ளனர். ஆய்வுகூட வசதிகள், இலத்திரனியல் சாதன வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் இன்றி இயங்கும் இந்தப் பாடசாலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# கை கழுவும் தினம்

மல்லாவி,ஒக்.22

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் அனிஞ்சியன்குளம் அ.த.க.பாடசாலையில் சர்வதேச கைகழுவும் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 14 ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணியொன்றும் இடம் பெற்றது.

பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. சுந்தரமூர்த்தி, மல்லாவி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி, பொது சுகாதாரப் பரிசோதகர் செ. அரவிந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

(க-425)

## நல்ல உதயம்...




நூலுக்கு விருது: மன்னாரில் இடம்பெற்ற வட மாகாண இலக்கியப் பெருவிழாவில் பேசாலையைச் சேர்ந்த ஆசிரியர் எஸ்.ஏ.உதயன் அமைச்சர் றிசாத் பதியுதீன், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரால் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார். (601)

# நெடுங்கேணியில் இரு பெரும் விழாக்கள்

கிளிநொச்சி,ஒக்.22

வவுனியா நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தில் கலை இலக்கியக் கலாசார விழாவும் சிறுவர் முதியோர் கௌரவிப்பும் இடம்பெற்றுள்ளன.

நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் 20 ஆம் திகதி காலை மேற்படி நிகழ்வானது பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் கலந்து கொண்டார். விருந்தினர்களாக வவுனியா நகரசபையின் முன்னாள் உறுப்பினர் லிங்கநாதன் வவுனியா செயலகர் கணக்காளர் செல்வராசா நெடுங்கேணிப் பொலிஸ் அதிகாரி மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் கனகராயன்குளம் ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைவர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் முதியவர்களை முதன்மைப்படுத்திக் கௌரவிக்கும் முகமாக முதியவர்களுக்கான நிகழ்வுகளும் சிறுவர்களை முதன்மைப்படுத்தி அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. அத்துடன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சிறார்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.(க-426)

# வீடுகளும் இல்லை; மின்சாரமும் இல்லை; திரிசங்குநிலையில் துணுக்காய் மக்கள்

மல்லாவி, ஒக்.22

துணுக்காய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்கள் மீள் குடியமர்ந்து இரண்டு வருடம் கடந்த நிலையிலும் தற்காலிகமாக நிறுவனங்களால் வழங்கப்பட்ட வீடுகளில் வசிப்பதால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிறுவனங்களால் சப்பு மரங்களைக் கொண்டு ஆறுமாதங்கள் வசிக்கத்தக்க வகையில் தகரம், கிடுகு என்பவற்றைப் பயன்படுத்திக் கட்டிக் கொடுக்கப்பட்ட தற்காலிக வீடுகள் கறையான் போன்றவற்றால் அரிப்பு ஏற்பட்டுப் பல வீடுகள் உடைந்து விழுந்துள்ளன. இனி வரப் போகும் மழைக்குத் தாம் என்ன செய்வது என மக்கள் கலக்கமடைந்துள்ளனர். துணுக்காய்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குப் புதிதாக வீட்டுத் திட்டங்கள் கொடுக்கப்பட்ட போதும் அது முழுமையாகத் தற்காலிக வீடுகளில் வாழ்பவர்களுக்கு வழங்கப்படவில்லை. சில கிராமங்களுக்கு முற்றாகவே வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை. குறிப்பாக யோகபுரம் மத்திக் கிராமத்தில் வறுமைக்குட்பட்டதும் மிக அவசரமாக வீடு தேவைப்பட்டவர்களுமான பதினொரு குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆறு மாதங்கள் கடந்தும் இதுவரை அவர்களுக்கு வீடுகள் கிடைக்காது தினமும் சிரமத்தை எதிர்கொள்கின்றார்கள்.

மேலும் துணுக்காய்ப் பிரதேச மக்களுக்கு மின்சாரமும் எட்டாக் கனியாகவே உள்ளது. கிராமங்களுக்கு மின்சாரம் என அரசு கூறுகின்றபோதும் துணுக்காய்ப் பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்கள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள்குடியமர்த்தப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் மின்சாரம் துணுக்காய்ப் பிரதேச மக்களின் வீடுகளைச் சென்றடையமுடியாமல் இடைநடுவில் நிற்கின்றது.

குறிப்பாக உயிலங்குளம், தென்னியன்குளம் போன்ற கிராமங்களில் மின்சாரம் தொடர்பான வேலைகள் பூர்த்தியடைந்தபோதும் மக்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை.

இதுபோன்று துணுக்காய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்கள் தொகை அதிகமாகவுள்ள யோகபுரம் மத்தி, திருநகர், வளநகர் போன்ற கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்ப கட்ட சிறு சிறு வேலைகள் முற்றுப்பெறாத நிலையில் இதுவும் ஒருவருடமாகக் காத்துக் கிடக்கின்றது. இதிலும் யோகபுரம் மத்திக் கிராமத்தில் வீடுகளுக்கு மின்மானிகள் பொருத்தப்பட்டுள்ளன. மின் சாரம் என்பது இவர்களுக்குக் கனவாகவே மட்டும் இருக்கின்றது. இதனை விட துணுக்காய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மல்லாவி வடக்கு, தேறாங் கண்டல், ஐயன்கன் குளம் புதுக் [illegible] கிராமங்களில் ஆரம்பவேலை கூட நடைபெறவில்லை. இது இவ்வாறிருக்க தமது மின்சாரத்துக்கான விண்ணப்பங்களை கிளிநொச்சி அலுவலகத்திலும் முல்லைத்தீவு அலுவலகத்திலும் கொடுத்தவர்கள் நீண்டகாலம் மின் சார சபையினர் வராததால் நேரடியாகக் கிளிநொச்சி அலுவலகத்தில் சென்றுகேட்டபோது உங்கள் படிவத்தைக் காணவில்லை எனக் கை விரிக்கும் அதிகாரிகள் புதிய விண்ணப்பத்தை நிரப்பி வாருங்கள் எனக் கொடுத்து அனுப்பி வைக்கிறார்கள். துணுக் காய், பாண்டியன் குளம் என இரண்டு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் விண்ணப்பப் படிவங்களைக் கையளிக்க கிளிநொச்சிக்கே போக வேண்டிய நிலை.

இதனை விட முல்லைத்தீவா, கிளிநொச் சியா தமது மின்சார தேவைக்காகப் போக வேண்டிய இடம் என்பதில் மக்களுக்குக் குழப்பமான நிலை நிலவுகின்றது. இந்த இடங்களுக்குச் சென்று வருவதற்கு ஒரு நாளைச் செலவிடுவதுடன் பணமும் விரயமாவதால் தற்காலிகமாக கிழமையில் ஒருநாள் இயங்கக் கூடியவாறாகவேனும் துணுக்காய் பிரதேசத்தில் ஓர் அலுவலகத்தை அமைக்க வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இதனைவிட பல ஆயிரம் ரூபா செலவு செய்து தாம் வீடுகளுக்கு மின் இணைப்புக்கான வேலைகளைப் பூர்த்தி செய்தும் அது பயன்பாடுகளற்று வருடக் கணக்கில் காத்துக்கிடப்பதால் அந்த மின் உபகரணங்களுக்கான பாவனைக்காலம் வீணாகிச் செல்வதுடன் தமது பணமும் முடக்கப்பட்டு இப்போதும் குப்பி விளக்குடன் வாழ்வது இவர்களின் மனதில் 'கிராமத்துக்கு மின்சாரம்'என்பதைக் கேள்விக் குள்ளாகியுள்ளது.

வடக்கின் வசந்தம் தம் குடிசைகளிலும் வீசுமா? என்பது இந்த மக்களின் எதிர்பார்ப்பாகும்.

(க-425)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி ஜோசியம்

(சென்றவாரத் தொடர்ச்சி)



''உங்கள் கைரேகைப் படி பார்த்தால், உங்கள் குருவுக்கு இதுவரை கல்யாணம் நடக்கவில்லை. இனியும் நடப்பதற்கு அறிகுறி இல்லை. உங்கள் குரு நேர்மையிலும் குணத்திலும் நல்லவர். பிறரைச் சாபமிடுதலில் வரத்தில் வல்லவர்,'' என்று ஜோசியர் புகழாரம் பாட ஆரம்பித்தார்.

அப்போது சண்டன் எழுந்து, ''ஜோசியரே! எங்கள் குருவுக்கு யானை கிடைக்குமா?'' என்பதைப் பற்றி சொல்லுங்கள் என்றான். "உங்கள் குருவுக்கு சகடை நடைபெறுகிறது. அதனால் வருகிற பங்குனி 15 ஆம் திகதி போனால் தான் சொல்ல முடியும். சகடையில் எந்த நல்ல காரியம் செய்தாலும் விருத்தியடையாது. நான் சொல்வதை மீறி நீங்கள் ஏதாவது செய்தீர்கள் என்றால் அது உங்கள் குருவின் உயிருக்கே ஆபத்தாக முடியும். அதனால் நீங்கள் யானை வாங்க வருகின்ற பங்குனி மாதம் வரை பொறுத்திருக்க வேண்டும்,'' என்று தன் பேச்சை முடித்தார்.

''சரி சீடர்களே! சீக்கிரம் ஜாதகம் பாருங்கள். நேரமாகின்றது; வயிறு பசிக்கிறது. பொழுது இருட்டுவதற்குள் ஆசிரமம் திரும்ப வேண்டும்'' என்று பாவாடை பதைத்தான். பாவாடை சொன்னதைக் கேட்ட முண்டன், ''மடையா! ஜாதகம் பார்க்க நம் குருவுடைய ஜாதகம் வேண்டும். அது கருப்பா, சிவப்பா என்று கூட எமக்குத் தெரியாது! நாம் அதைக் கொண்டு வரவும் இல்லை... என்றான்.

''சீடர்களே! உங்களுக்குள் சண்டை வேண்டாம். உங்கள் குருவின் ஜாதகமே என்னிடம் இருக்கிறது. உங்கள் குரு சின்ன வயதில் என்னிடம் ஜாதகம் பார்க்க வந்தார். அப்போது மறந்து விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். அதை நான் பத்திரமாக எடுத்துப் பாதுகாத்து வைத்திருக்கிறேன். நீங்கள் பார்க்க வேண்டும் என்று சம்மதித்தால், அதை எடுத்து வந்து காட்டுவேன்,'' என்றார்.

சீடர்கள் உடனே ஐம்பது ரூபாவைத் தட்சணையாக வைத்து, தங்கள் குருவின் ஜாதகத்தைப் பார்க்க ஆவலாய் இருந்தனர். பரணியில் மடித்து வைக்கப்பட்ட ஓர் ஏட்டை எடுத்துக் காட்டினார். அதில் அவரது பேரன் ஒரு சில ஊர்களை மட்டும் எழுதி வண்ணமையினால் கட்டம் கட்டமாகத் தீட்டியிருந்தான்.

(தொடரும்)

# கலிலியோ கலிலி



இவர் இத்தாலியில் பீசா நகரில் 1564 இல் பிறந்தார். பீசா பல்கலைக்கழகத்தில் வைத்தியம் கணிதத் துறைகளைக் கற்றார். பீசா பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் பாதுவா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மத்திய நிலையம் ஒன்றையும் ஆரம்பித்தார். சமநிலையில்லாத இரு பொருள்களை உயரத்தில் நின்று போடும்போது வெவ்வேறு நேரங்களில் புவியை வந்தடையும் என்ற அரிஸ்ரோட்டிலின் கருத்தினை நிராகரித்து பீசா கோபுரத்தில் ஏறி சமநிறையில்லாத பொருள்களைப் போட்டு நிரூபித்தார். தொலை நோக்கியைக் கண்டு பிடித்து சந்திரனில் மலைகளும் பெரும் குழிகளும் உள்ளதென்றும் கண்டுபிடித்தார். இவரது விஞ்ஞான செயற்பாட்டின் காரணமாக செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை எனவும் போற்றப்பட்டார்.

**பஞ்சலிங்கம் யதுஷன்,** தரம் 6 பி
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.

# இந்தியா




தெற்கு ஆசியாவிலுள்ள ஒரு குடியரசு நாடு இந்தியா. ஆசியா பெரும்பகுதியை இந்தியா தன்னில் அடக்கியுள்ளது. அதன் தலைநகரம் புதுடில்லியாகும். இந்தியாவைப் பாரதம் என்றும் குறிப்பிடப்பிடுவர்.


இந்தியா என்ற பெயர் சிந்து நதியின் பெயரில் இருந்து பெறப்பட்டதாகும். பரப்பளவில் ஏழாவது இடத்தில் உள்ள இந்தியாவின் கடற்கரை மொத்தம் 7 . ஆயிரம் கி.மீ. நீளம் கொண்டுள்ளது. நிலப்பரப்பில் பங்களாதேஷ், மியன்மார், சீனா, பூட்டான், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. இலங்கையும் மாலைதீவும் இந்தியக் கரைக்கு அப்பால் இந்தியப் பெருங் கடலில் உள்ளன.

இந்தியா ஒரு பில்லியன் மக்களைக் கொண்ட உலகின் இரண்டாவது சனத்தொகை மிக்க நாடாகும். பண்டைய நாகரிகங்கள் பல இந்தியாவிலே தோன்றின. அவற்றில் சிந்துவெளி நாகரிகம், ஹரப்பா, மொஹஞ்சதாரோ நாகரிகங்களை குறிப்பிடலாம்.

இந்து சமயம், புத்தம், சமணம், சீக்கியம் ஆகிய முக்கிய மதங்கள் இந்தியாவிலே தோற்றம் பெற்றன.

**சா. ஜிந்துஜா**
கோண்டாவில்.

# கதிரவன்



காலையிலே சிரிக்கின்றாய்
மாலையிலே மறைகின்றாய்
நீ சிரிக்கும் போது எல்லாப் பூக்களையும்
சிரிக்க வைக்கின்றாய்

நீ மறைகின்ற போது பச்சை வலைக்குள்
மிதக்கின்ற செந்தாமரை மலர்களை
சோரவைக்கின்றாய்
இதுவா உன் அற்புதம்?

**வி.பிரசாத்,** தரம் 8 ஏ, யா/
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.



அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழாவின் போது இடம்பெற்ற இசையும் அசைவும் நிகழ்வும் விநோத உடை நிகழ்வும். (135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஹலியகொடை இரட்டைக்கொலை வழக்கு; தாய், மகனுடன் மூவருக்கு மரணதண்டனை

எஹலியகொடை, ஒக்.22

ஐந்து வருடங்களுக்கு முன்பு எஹலியகொடை - அம்பலம்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைக்கொலை தொடர்பான வழக்கில் எதிராளிகளான தாய், மகன், நண்பன் ஆகிய மூவருக்கும் அவிசாவளை நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

2006 ஒக்ரோபர் 26 ஆம் திகதி இந்த மூவரும் அம்பலம்பிட்டியப் பிரதேசவாசிகளான டீ.ஏ.சுசந்த பிரியலால் (25), ஸ்வர்ண ஜெயந்தி (23) என்ற இருவரையும் கோரமாக வெட்டிக் கொலை செய்தனர் என்று இவர்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

காணித்தகராறு காரணமாகவே இந்த இரட்டைக் கொலை நடந்துள்ளது. சந்தேக நபர்கள் எஹலியகொட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர். எதிராளிகளின் தாயாரான பீ.டபிள்யூ.பொடிநோனா, மகனான ரொமேஷ் சமீர, நண்பனான சுரேஷ் நந்தன என்ற மூவருக்குமே மரணதண்டனை விதிக்கப்பட்டது. (ச)

# பதுளை மாநகர சபைக்குத் தெரிவான ஐ.தே.க.உறுப்பினர்கள் பதவியேற்கத் தடை

பதுளை, ஒக்.22

பதுளை மாநகரசபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஐ.தே.க. உறுப்பினர்கள் ஐந்து பேரும் எதிர்வரும் முதலாம் திகதி வரை பதவியேற்கக் கூடாதென இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பதுளை மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவொன்றைப் பரிசீலித்த நீதிபதி பியசீலி விக்ரமசிங்க மத்துரட்ட இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஐ.ம.சு. மு. வேட்பாளர்கள் சிலர் இந்த மனுவைத் தாக்கல்செய்திருந்தனர். பதுளை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி, மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர், சட்டமா அதிபர், பதுளை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.க. உறுப்பினர்கள் என்று 20 பேர் மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ச)

# முதல்வர் பதவியேற்பு நிகழ்வில் குருமாருக்கு உரிய இடமில்லை

## கல்முனை தேரர் அதிருப்தி

கல்முனை, ஒக்.22

கல்முனை மாநகரசபையின் புதிய மேயரின் பதவியேற்பு நிகழ்வில் மதகுருமாருக்கு உரிய இடமும், மரியாதையும் வழங்கப்படவில்லை என்று கல்முனை சுமத்ராராம விகாராதிபதி சங்கைக்குரிய சங்கரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகரசபையின் புதிய மேயர் மீராசாஹிப் சிராஸ் தனது கடமைகளை கடந்த புதன்கிழமை மேயர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக்கொண்டபோது இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதிய முதல்வர் பதவியேற்பு வைபவத்தின் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்துகொண்டு தேசியக்கொடியை ஏற்றிக்கொண்டிருந்தவேளை, கம்பத்திலிருந்து தேசியக்கொடி கீழே விழுந்தமையானது அங்கிருந்தவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

புதிய முதல்வரின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்கான எழுத்து மூல முறையான அழைப்புகள் எவையும் ஊடகவியலாளர்கள் எவருக்கும் மாநகரசபை நிர்வாகத்தினரால் விடுக்கப்படவில்லை என்று அந்தப் பிரதேச ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களிலும் கல்முனை மாநகரசபையின் முக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் பொருட்டு ஊடகவியலாளர்களுக்கு முறையாக அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் அப்பிரதேச ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ச)




மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை சாதுலியா வித்தியாலயத்தைச் சூழவுள்ள பகுதிகளிலுள்ள சிலர் ஒழுக்கமற்ற முறையிலும் சட்டவிரோதமான செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் கண்டனப் பேரணியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஈடுபட்டனர்.

# போரின் பின்னர் மட்டக்களப்பில் புதிய 'பார்' திறக்கப்படவில்லை

## மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் கூறுகிறார்

மட்டக்களப்பு, ஒக்.22

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மதுபானசாலை கூடப் புதிதாகத் திறக்கப்படவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட மதுவரி திணைக்கள அத்தியட்சகர் நடராஜா சுசாதரன் தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 85 மதுபான நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாவட்டத்தில் இதுவரை 53 மதுபானசாலைகளுக்கான அனுமதிகளே வழங்கப்பட்டுள்ளன. அவைகள் அனைத்தும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் வழங்கப்பட்டவை ஆகும்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாசிக்குடா மற்றும் களுவாஞ்சிக்குடி பகுதிகளில் சுற்றுலா விடுதிகளில் மது பான விற்பனைக்கான அனுமதி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன- என்றார். (ச)

# நுளம்பு பெருக்க காரணமானோர் கைது

மட்டக்களப்பு, ஒக்.22

டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்குக் காரணமாக இருந்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள முக்கிய விருந்தினர் விடுதி உரிமையாளர்கள் இருவர் உட்பட ஆறு பேர் மட்டக்களப்பு சூழல் பாதுகாப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சூழல் பாதுகாப்புப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் புஸ்பகுமார தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். சூழல் பாதுகாப்புப் பிரிவினர் டெங்கு பெருக்கம் தொடர்பில்பல்வேறு தேடுதல்களை சுகாதாரப் பொதுப் பரிசோதகர்களுடன் பல்வேறு இடங்களுக்கும் சென்று மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக்கு யோகராஜன் எம்.பி.நிதி ஒதுக்கீடு

நுவரெலியா, ஒக்.22

நுவரெலியா மாவட்டத்தின் தோட்டப் பகுதிகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக 48 லட்சம் ரூபாவை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதன்மூலம் நுவரெலியா, நானுஓயா, ராகலை, அக்கரப்பத்தனை, ஹற்றன், பொகவந்தலாவை, மஸ்கெலியா, சாமிமலை, நோர்வூட் பகுதி தோட்டங்களுக்கு குடிதண்ணீர் வழங்குதல், மலசலகூடம் அமைத்தல், வீதிகள், கோயில்கள் புனரமைத்தல், கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல், கூரைத் தகடுகள் வழங்குதல் உட்பட பல வேலைத்திட்டங்கள் முன்னெக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களை நுவரெலியா பிரதேச சபையினூடாக செயற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோட்டங்களை கம்பனிகள் பொறுப்பேற்ற பின்னர் எந்தவிதமான அபிவிருத்தித் திட்டங்களையும் செயல்படுத்தவில்லை. தோட்ட நிர்வாகங்களும், கம்பனிகளும் லாபத்தை ஈட்டுவதிலேயே குறியாக இருக்கின்றன. தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளிகளை அடிமைகளைப் போல நடத்துவதையும் உழைப்பைச் சுரண்டுவதையும் அனுமதிக்கமுடியாது.

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 40 லட்சம் ரூபா நிதி போதுமானதல்ல என்றாலும், நுவரெலியா மாவட்டத்தில் அதிகமான தோட்டங்களுக்கு எனது சேவை தொடர்ந்து முன்னெடுக்கப்படும். அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்களும் எமக்கு உதவியாகச் செயல்படவேண்டியது கட்டாயமாகும் - என்றார். (ச)

# தேயிலை மோசடியில் ஈடுபட்ட நால்வர் கைது

பிலிமத்தலாவை, ஒக்.22

தரம்குறைந்த தேயிலையை கவர்ச்சியான பெட்டிக்குள் அடைத்துவைத்து மோசடியாக விற்பனைசெய்தனர் என்ற சந்தேகத்தில் பிலிமத்தலாவை பிரதேசத்தில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடை ஒன்றின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் பேரிலேயே இந்த நால்வரும் கைதுசெய்யப்பட்டனர். தனக்குத் தெரியாமல் இவர்கள் இந்த மோசடியைச் செய்துள்ளனர்.

அதனால், தனக்கு பல லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். கண்டி விசேட நடவடிக்கைப் பிரிவின் பொறுப்பதிகாரி எச்.எம்.குணரத்ன பண்டா தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன.

# விபத்தில் இருவர் பலி

கண்டி, ஒக்.22

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் 25ஆம் கட்டைப் பகுதி பாக்கட் சந்தியில் கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த கொள்கலன் ஒன்று வீதியை விட்டு விலகி அண்மையிலிருந்த வீட்டின்மீது மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் பலியாகினர். மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். (ச-சி)

# தனியார் பஸ் ஊழியர் வேலைநிறுத்தம்

கண்டி, ஒக்.22

ஹற்றன் - பொகவந்தலாவை, ஹற்றன் - பலாங்கொடை ஆகிய வீதிகளில் கடமையில் ஈடுபட்டுள்ள 705 இலக்க தனியார் பஸ் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மத்திய மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபைத் தலைவரின் கட்டளைப்படி புதிய பஸ் ஒன்றை போக்குவரத்தில் ஈடுபடுத்தியுள்ளமையைக் கண்டித்தே இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேற்குலக நாடகத்தின் ஒரு சுருக்கமான வரலாறு

கலாபூஷணம் அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளை

**ஹென்றிக் இப்சன் நாடகங்கள் (கி.பி 1828-1906)**

மகாகவி ஷேக்ஸ்பியருக்குப் பின்பு நாடக வானில் தோன்றிய மாபெரும் நட்சத்திரம் நோர்வேஜியரான ஹென்றிக் இப்சன் ஆவார். அவர் நீண்ட காலமாக மன்னர்களையும் பிரபுக்களையும் வைத்து நாடகம் எழுதிக் கொண்டிருந்தார். ஞானோதயம் வந்தவர் போலத் திடீரென்று ''இந்த நாடகங்களுக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் தொடர்பில்லை. நாடகம் என்பது மக்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்க வேண்டும். அத்தகைய நாடகங்களால் தான் நாடகம் சிறக்கும்; மக்களும் அதிக பயன் பெறுவார்கள்'' என்று கூறி, ஒரு புதிய வகை நாடகம் எழுதத் தொடங்கினார். அந்த நாடகத்தில் அவர் செய்த புதுமைகளைச் சுருக்கமாகக் கூறலாம்.

* அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் விடை கொடுத்து அனுப்பிவிட்டு, சமகாலச் சாதாரண மனிதர்களையே நாடகப் பாத்திரங்களாக்கினார்.
* மக்களது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளே நாடகங்களில் அலசப்பட்டன.
* கவிதை நடையை முற்றாகக் கைவிட்டு, மக்களது சாதாரண பேச்சு வழக்கிலேயே பாத்திரங்களை உரையாட வைத்தார்.
* சமூக சீர்திருத்தத்துக்குத் தேவையான ஆழமான கருத்துக்களைத் துணிந்து ஆணித்தரமாகக் கூறி, ஐரோப்பாக் கண்டத்தையே சிந்திக்க வைத்தார்.
* முதன் முதலாக உளவியல் கருத்துக்கள் நாடகத்தில் புகுத்தப்பட்டன.
* அடிதடிகளுக்கும் போர்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பாத்திரங்களை அவற்றுக்கு வேண்டிய கருத்துக்களை ஆராய வைத்தார்.
* அரங்கச் செயற்பாடுகளிலும் யதார்த்தப் பண்புகளைப் புகுத்தினார்.

இவையே நவீன நாடகத்தின் பண்புகளும் ஆகும்.இப்சன் செய்தது ஒரு புரட்சி. அதன் மூலம் நாடகத்துக்குப் புத்துயிர் அளித்ததுடன், மக்களையும் அவற்றில் இருந்து உச்சப் பயன்பாடடையச் செய்தார். அதனால்தான் அவர் **'நவீன நாடகத்தின் வெளிச்ச வீடு'** என்று பாராட்டப்படுகிறார்!.

அவரது நாடக வகைக்கும் அவர் கூறிய கருத்துக்களுக்கும் ஐரோப்பாக் கண்டத்தில் பெரியளவில் எதிர்ப்புக்கள் கிளம்பின. கண்டனங்களைக் கண்டு அவர் கலங்கவில்லை. தான் சரி என்று கண்ட வழியிலேயே தொடர்ந்து நாடகங்களை எழுதி அரங்கேற்றினர். ஐரோப்பாதான் மெல்ல மெல்ல அவரது வழிக்கு வந்தது!

''ஒரு பொம்மையின் வீடு'', ''பொது மக்களின் எதிரி'', ''சமுதாயத்தின் தூண்கள்'' உட்பட அவர் எழுதி அரங்கேற்றியவை எல்லாம் பெரிய நாடகங்களே. அவற்றை ஒரு நாவலைப் போல வாசித்து இன்புறலாம். அந்த நாடகங்களில் பலவற்றை நான் பல முறை வாசித்தேன், யாழ்.நூலகத்தில், அது எரிக்கப்படுவதற்கு முன்பு.

அதன் பின்பு, லியோடாஸ்ஸ்டாய், அன்ரன் செக்காஷ், மாக்சிம் காரக்கி, பெர்நாட்ஷா, யோன்கஸ் வோதி உட்பட பெரிய நாடகாசிரியர்கள் எல்லோரும் இப்சன் காட்டிய வழியிலேயே நாடகங்களை எழுதி அரங்கேற்றினர்.

அவர்களில் பெர்நாட்ஷா ஒருபடி மேலே போய் ''நான் இப்சனது Decille'' அவரைப் பின்பற்றி நாடகம் எழுதுபவன் என்று வெளிப்படையாகவே சொல்லிக் கொண்டார். இப்சனது நாடகங்களைப் பாராட்டி பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதினார். அவரது நாடக முறைகளையும் கொள்கைகளையும் விளக்கி ''இப்சனது கொள்கைகளின் சாராம்சம்'' என்று ஒரு நூல் எழுதி வெளியிட்டார்.

நோர்வே அப்பொழுது அறுபது லட்சம் மக்களை மட்டுமே கொண்ட ஒரு சிறிய வட ஐரோப்பிய நாடு. அவரது நாடகங்களின் செல்வாக்கு மெல்ல மெல்லத்தான் ஐரோப்பாக் கண்டத்தில் பரவியது. பெர்நாட்ஷா செய்த பிரசாரமே இப்சனை உடனடியாகவே உலகப் புகழ் பெற வைத்தது!

இப்சன் செய்தது ஒரு புரட்சி, அவருக்குப் பின்பு ஐரோப்பாக் கண்டத்தில் நாடகம் ஒரு புது வழியில் செல்லத் தொடங்கியது. இன்று உலகம் முழுவதிலும் அவர் தந்த நாடக வகையே சிறந்த நாடக வகையாகக் கருதப்படுகிறது.

இந்தப் பெரிய நாடக மேதைக்கு நோபல் பரிசு வழங்கப்படவில்லை என்றால் வியப்பாக இல்லையா? காரணம் பொறாமைதான். நோபல் பரிசை வழங்குபவர்கள் சுவீடன் நாட்டவர்கள்.

(தொடரும்)

நாட்டி

# நினைவுக்குரிய நிகழ்வுகள்

வி.சிவசுப்பிரமணியம்

**வீதிகள்**

**கஸ்தூரியார் வீதி**

யாழ்.நாவலர் வீதி-அரசடி வீதியைத் தொடுப்பதே இந்த வீதியாகும். தற்போது ''உதயன்'' நிறுவனம் இயங்கும் இடத்திலே புகழ்பூத்த பரம்பரை ஆயுள் வேத வைத்தியர் முத்துக்குமாரு அவர்களின் வைத்தியசாலை இயங்கியது. கஸ்தூரி, கோரோசனைக் குளிசைகள் அவரிடம் சிறப்பு வாய்ந்தன. அவரின் பின் அவரது மகன் கதிரவேலுப் பரியாரியார் நாற்பது, ஐம்பதுகளில் அந்த இடத்தில் சிறந்த வைத்தியராகப் பெரும் புகழ் பெற்றிருந்தார். வைத்தியசாலைத் திண்ணையில் விரித்த புற்பாயில் காலையில் நோயாளர் நிறைந்திருப்பர். அந்நேரத்தில் பிரபல சித்தரான சிவயோக சுவாமிகள் அடிக்கடி அங்கு வந்து, மக்களுக்கு ஆன்மிக ஆசியையும், வைத்திய நிவாரணத் தையும் ஒருங்கே, வழங்கியதால் அந்த இடம் என்றும் தெய்வீக மணம் கமழ்ந்த படி இருப்பதைக் காணலாம். முத்துக்குமாருப் பரியாரியாரின் மூத்த மருமகன் அந்த நாள் வட பிராந்திய சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வி.ரி பசுபதி என்பதும், இளைய மருமகன் அந்நாள் யாழ்.அரச அதிபரும், நிரந் தரக் காரியதரிசியாயிருந்த ம.ஸ்ரீகாந்தா என்பதும் நினைவுக்குரியது. கஸ்தூரியார் வீதி என்றும் அந்த வைத்தியப் பரம்பரையை நினைவு கூர்ந்து நிற்கும்.

**மார்ட்டின் வீதி**

இந்த வீதி தற்போதைய புகையிரத வீதியைத் தொடர்ந்து பிரதான வீதியை இணைக்கின்றது. இந்த வீதி ஹென்றி மார்ட்டின் (Henry Martin) (1811-1861) நினைவாக 1862 இல் அவரது வீட்டுக்கு அருகில் பெயரிடப்பட்டது. Batticotta Seminary) யில் கல்வி கற்று முதல் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற குழுவின் ஒருவராய், பதினொரு வருடம் நல்லாசிரியராக அங்கேயே பணிபுரிந்தார். யாழ.நக்ரைச் சேர்ந்த இவர் பிரபல கல்விமான், கணிதவியலாளர், ஆய்வாளர், தமிழ் ஆங்கில கட்டுரை கவிதை புனைவதில் வல்லவர், இலக்கண-இலக்கிய மேதையும் கூட நாட்டின் முதல் ஊடகவியலாளரும் மற்றையோர் ஆங்கிலேயர் முதற் படப்பிடிப்பாளரும், கைக்கடிகாரத் திருத்தலில் நிபுணராகவும் விளங்கினார். 1814 தையில் ஆரம்பமாகி மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் பதிப்பித்து மாதமிருமுறை இரு மொழியில் வெளியான முதற் பத்திரிகையான (மற்றையன கொழும்பு வெளியீடுகள்) உதயதாரகையின் முதற் பத்திராதிபராக, உடுவிலைச் சேர்ந்த போதகர் செத்பேய்சன் உடனிணைந்து பிரசுரித்த பெருமை இவருக்குண்டு. இந்தப் பத்திரிகை 1856 முதல் மாதாந்த மலராகி தமிழில் உதய தாரகையாகவும், ஆங்கிலத்தில் Morning Star எனவும் மலர்ந்தது. இவர் 1843 இல் கல்விச் சேவையைத் துறந்து, அரச சேவையில் அரச பிரதம களஞ்சியப் பொறுப் பாளராக நியமனம்பெற்று (1843-1860) பதினேழு வருடம் சேவையாற் றினார். இவரது அரச நியமனம் கல்வியுலகுக்குப் பேரிழப்பெனவும், அவர் பொருந்தாத துறையில் சேர்ந்ததாகவும் யாழ்.மக்கள் கருதினர்.

இவரது பொறுப்பின் போது உப்பின் வருமான வீழ்ச்சி காரணமாக இவரே நஷ்டஈடு செய்ய வேண்டுமென 1860 இல் பணி இடைநிறுத்தம் செய்யப் பட்டார். தான் நிராபராதியென லண்டனுக்கு மனுச் செய்ததோடு, சென்னைக்கு நேரில் கூறச் சென்று 1861 மார்ச் மாதம் யாழ்திரும்பியவுடன் நோய்வாய்ப்பட்டு 31 மார்ச் உயிர் நீத்தார். இந்தவேளையில் விசாரணையின் முடிவாக இவர் சுற்றவாளியெனவும் பணியில் அமர்த்த வேண்டும் என்ற செய்தி அரச அதிபர் Dyke அவர்களுக்கு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதன் விளைவாக, இந்தப் பெயரின் கண்ணியமான சேவையின் நினைவாக இவர் வீட்டுக்கு அருகிலுள்ள வீதிக்கு Martin Road என 1862 இல் பெயர் சூட்டினார்.


இவரது மூத்தமகன் James Henry Martin சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியராகவும் 1876இல் ஆரம்பித்த Catholic Guardian பத்திரிகையின் முதற் பத்திராபதிபராகவும் விளங்கினார். இவரது பேரன் John Henty Martin "Notes on Jaffna"என்ற வரலாற்றுப் பொக்கிஷத்தை 1923 இல் பதிப்பித்து வெளியிட்டுப் பெருமை பெற்றார். இதில் போர்த்துக்கேய ஒல்லாந்தர் காலப் பதிவுகளோடு, 1796 முதல் 1922 வரையிலான பிரித்தானியர் காலப் பதிவுகள் யாவும் விரிவாக கால ஒழுங்குமுறையில் பதியப் பெற்றிருப்பது யாழ். வரலாற்றுக்கான அதிசிறந்த நுழைவாயில் ஆவணமாகவுள்ளது யாவராலும் பாராட்டுக்குரியதாகும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அவனருளின்றி அவனடி தாழ்தல் அரிது



பெரிய மகான்கள் பல சக்திமையங்களால் கவர்ந்து இழுக்கப்பட்டார்கள். எமது நாயன்மார்கள் பலர் சிதம்பரம் சென்று தில்லைக்கூத்தனைத் தரிசிக்க வேண்டுமென்று மனம் உருகியதாகப் பெரிய புராணம் கூறுகின்றது. ரமணமகரிஷிக்கு அண்ணாமலை என்ற பெயரைக் கேட்டவுடனேயே அங்கு செல்லவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டதாம். ''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்'' என்று மனம் உருகுகின்ற மகானின் தரிசனம் என்போன்ற ஐவருக்கு ஏற்பட்டமை பூர்வஜென்ம பாக்கியம் என்றே கருதுகின்றேன். இதன் பலனாக இமாலயத்தலங்களைத் தரிசிப்பதற்கு முன்னோடியாக, நினைத்தாலே முத்தி தரும் திருத்தலமாக விளங்கும் மிகவும் பழைமை பெற்ற திருவண்ணா மலையில் வீற்றிருக்கும் அருணாசலேஸ்வரரைத் தரிசிக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்தது.

முன்னொரு காலத்தில் பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் ஏற்பட்ட போட்டியைத்தீர்த்து வைப்பதற்காகத் தோன்றிய சிவபிரான் அவர்களுடைய விருப்பத்தின் பிரகாரம் ஒரு போட்டியை ஏற்படுத்தினார் அதன் மூலம் யார் வெற்றி அடைகின்றார் என்பதைத் தீர்மானிப்பதற்காக எம்பிரான் அக்கினிப்பிழம்பாக உருமாறிப்பின் மலை உருவில் குறுகி பொங்கழல் உருவனாக இருந்த இறைவனே அண்ணாமலையான் எனக் கூறப்படுகின்றது.

செல்வத்தால் செய்ய முடியாத காரியம் எதுவும் இல்லை என்ற செருக்குடைய செல்வந்தர், அறிவால் அறிய முடியாத செயல் எதுவும் இருக்கமாட்டாது என்ற கர்வமுடைய அறிஞர் ஆகிய இருவராலுமே இறைவனைக் காண இயலாது என்பதைப் பிரமா,விஷ்ணு அடிமுடிதேடிய கதை எமக்கு எடுத்தியம்புகின்றது. அதாவது கர்வமும், செருக்கும் உள்ள உள்ளத்தால் இறைவனைக் காணஇயலாது என்ற உண்மையையே அண்ணாமலையான் கதை விளக்குகின்றது.

ஆனால் அந்த இறைவன் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் பக்தர்களுக்குத் தனது உருவைக் காட்டுகின்றான்.இதனாற் போலும் மாணிக்கவாசக சுவாமிகளும் அண்ணா மலையானைக் கண்டபோது ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி'' என்று ஆரம்பித்து திருவெம்பாவை பாடியுள்ளார். அதன் மூலம் எம்பிரான் காண்பவர்களுக்கு [illegible]னாகி விடுகின்றார்.

இதனாற் போலும் திருவெம்பாவை இருபதாம் பாடலில் ஆதியாம் பாதமலர், அந்தமாம் செந்தளிர்கள் என்று பாடியுள்ளார். அதாவது பிரம்மாவும் விஷ்ணுவும் காணமுடியாத அடிமுடியைக் கண்டுவிடுகின்றார். ''விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளக்கொளியாய் எண்ணிறந்து எல்லை இலாதானாக'' இந்தத் திருவெண்ணாமலை அடிவாரத்திலேயே வீற்றிருக்கிறார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்தத் தலம் தமிழ்நாட்டில் உள்ள பெரிய ஆலயங்களுள் ஒன்றாகும். இது பஞ்சபூதத்தலங்களில் அக்கினித்தலமாக விளங்குகின்றது.

இருபத்தி நான்கு ஏக்கரில் அமைந்துள்ள இந்த ஸ்தலத்தில் 8 பிரகாரங்கள் அமைந்துள்ளன. ஆலயத்தின் உட்பகுதியில் பிரம்ம தீர்த்தம், சிவகங்கைத்தீர்த்தம் என்ற இரண்டு தடாகங்கள் உள்ளன. இந்த ஆலயத்தின் ராஜகோபுரத்தின் உயரம் 217 அடி ஆகும்.

இந்தக் கோபுரத்தையும் சேர்த்து இந்தக்கோயிலில் மொத்தம் ஒன்பது(9) கோபுரங்கள் இருக்கின்றன. இங்குள்ள ராஜகோபுரம் தமிழ்நாட்டிலுள்ள உயரமான கோபுரங்களில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது.

இவற்றைவிட வருடாவருடம் திருக்கார்த்திகைத் தினத்தில் 2668 அடி உயரமான மலையின் மேல் ஒளி ஏற்றிவைக்கப்படுகின்ற கார்த்திகைத் தீபமானது மிகவும் பிரசித்தி பெற்றது. இந்தத் தீபத்தை திரிசிப்பதற்காக அத்தினத்தில் பதினைந்து(15) இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் அங்கே கூடுவதாகப் பலரும் கூறுகின்றார்கள்.

எம்பெருமான் இம்மலைமீது ஒளி வடிவமாகக் காட்சியளித்த தினமே திருக்கார்த்திகைத் தீப விழா என்றும் கூறுகிறார்கள்.

(தொடரும்)

# டியத்தில் (ன்) இசை



அரங்கேற்று காதையில் நாட்டிய அரங்கேற்றத்துக் குரிய இசை ஆசிரியர் தன்மையையும் குழலோன், யாழ் ஆசிரியன், பாடல்புனைபவன் போன் றோர்கள் எத்தகைய இசை ஆற்றலுடன் இருக்க வேண்டும் என்பதைக் கூறியிருப்பதைக் காணலாம். இவை நாட் டிய இசைத் தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

''பாடுபவன் பாடல் பரவலட பழிச்சுதல்
ஆடுபவர் ஆடலமர்ந்த சீர்ப்பணி'' என்பது பரிபாடல்வரி. அதாவது ஆடலும் பாடலும் அதற்குப் பொருத்தமான தாளத்துடன் ஆடப்பட்டது என்பதைக் கூறுகின்றது. அதுபோல் ஆச்சாரமும் சுரபிரஸ்தார விவரமும் திரிஸ்தாயிக்குரிய தாளலய ஞானமும் சமய பேதங்களுக்கு ஏற்றபடி பாடும் தன்மையும் கற்பனை சுரஞானமும் மேளகர்த்தாக்களைப் பற்றிய தன்மையும் அறிவும் மனோ ஞானத்தோடு கூடிய ஈஸ்வர பக்தியும் உடையவன் பாடகன் ஆவான் என்று மகாபாரத சூடாமணி கூறுகிறது. நாட்டியக்கலை கீதம், வாத்தியம், திருத்தம் இவை இணைந்த ஒரு கூட்டுக்கலையாகும். எனவே நாட்டியமும் இசையும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதவையாகும்.

இராகம் என்பது தமிழ் இலக்கண வரலாற்றில் பண் என்று அழைக்கபட்ட பழைமை வாய்மை இராகத்தினுடைய பயன்பாடும் தேவையையும், அறிவும் நாட்டியத்தில் உண்டு. நாட்டியத்தினுடைய அபிநயப் பகுதியை எடுத்துக் கொண்டால் நாட்டியப் பாத்திரத்துக் குரிய பொருத்தமான பாடலை தெரிவு செய்வதில் நாட்டிய ஆசிரியர் கவனம் செலுத்துவதுடன் பாத்திரத் தி[illegible]ய தன்மை அது வெளிப் [illegible] குறிப்பிட்ட இரசத்துக்குப் பொருத்தமான இராகப் பிரயோகம் என்பனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டி இருக்கிறது. உதாரணமாக நவரசங்களுக்கும் ஏற்ப குறிப் பிட்ட சில ராகங்கள் நாட்டிய இசை உலகில் பேசப்படு கின்றன. இவற்றை அறிந்தும் அத்துடன் பாடல் சந்தர்ப்பங் களுக் கேற்ற இராகப் பிரயோகங்களை பயன்படுத்து வதும் நாட்டிய அரசனிடம் வேண்டப்படு கிறது. இவற்றுக்கு நாட்டிய ஆசிரியர் ஒருவர் இசை அறிவு உடையவராக இருப்பது நன்று. இது இவ்வாறு இருக்க நாட்டியத்துக்கு இசை பாடுபவர் சாதாரண இசைக் கச்சேரி பாடுவதை விட நாட்டியக் கச் சேரிக்குப் பாடுவதில் அதிக கவனம் எடுக்க வேண்டி இருக்கிறது. அதாவது நாட்டியத்தில் நேரடிக்கை, சஞ்சாலிக்கை என்று பயன்படும் போது ஒரு பாடல் சாகித்தியத்தை பல தடவைகள் பாட வேண்டியுள்ளது. அத்துடன் அந்த சந்தர்ப்பத்துக்கேற்ப அர்க்க பாவத்தையும் குரலில் உணர்ச்சியையும் வெளிப் படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறான இசை ஆசிரியன் அர்ப்பணிப்பான பணி நாட்டி யத்தில் பெரு வெற்றிக்கு வழி வகுக்கிறது.

இசையின் காலப் பிரமாணத்தை நிர்ணயிப்பது, அதை நிலைப்படுத்துவது தாளம் ஆகும். பல இசைக் கருவிகள் ஒன்று சேர்ந்து இசைக்கும்போது அவை அனைத்தையும் கட்டுப்படுத்தி ஒன்றுபோல இசைக்கச் செய்வது தாளம் ஆகும். "இசைக்குத் தாளம் உயிர் போன்றது. இசையின் கால அளவுகளை நான்முகன் படைத்தவராகவும் அவற்றை ஒழுங்குற அமையச் செய்தது திருமால் என்றும் அவற்றை சிவன் அணிந்து கொண்டு ஆடினார்'' என்றும் பஞ்சமரபு கூறு கிறது. தாளம் என்பது இசைக்கும் நாட்டியத்துக்குப் பொதுவானதாகும்.

காலப்பிரமாணத்தைச் சீராகக் கொண்டு செல்வதற் குத் தாளம் துணைபுரிகிறது. தாளத்தினைச் சீராகப் பின்பற்றியும் தாளத்தினுடைய கால நுட்பங்களை நு ணு கி ஆராய்ந்து செயற்படுத்தவும் தாளங்கள் பற்றிய முழுமையான அறிவு வேண்டப்படுகிறது. சப்த தாளம், 35 தாளம், 175 தாளங்கள் எனத் தாளங்கள் பலவிதம். அத்தகைய தாளங்களையும் தாளக் கோர்வைகளையும் கால வேறுபாடுகளையும் அறிந்து பயிற்சி பெறுவதும் ஆற்றுகையின் போது பின்பற்றுவதும் நாட்டியத்தில் மிகவும் வேண்டப்படுகிறது. எனவே நாட்டிய நர்த்தகியின் தாள அளவுக்கு இசையின் தேடல் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. அதுமட்டுமன்றி அர்த்த புஸ்மி உள்ள பாடல்களை புனைகின்ற கவிதை ஆற்றலும் அமையப் பெறுவது நாட்டியத்துக்கு மேலும் சிறப்பைக் கொடுக்கும். எனவே இயல் இசை நாட்டியம் எனும் முத்தமிழும் ஒன்று சேரப்பெற்ற ஒருவர் இன்ப நிலையை அடைந்தவர் என்பது திண்ணம். எனவே தொகுத்து நோக்கிப் பார்க்கின்ற போது பரத நாட்டியத்தின் பெரு வெற்றிக்கு சிறப்பிற்கு இந்தக் கலை முக்கிய பங்கு வகிக்கின்றது என்பது உண்மை.

(முற்றும்) *

அ.உமாமகேஸ்வரி (B.F.A)
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டாட்டம்

தீபாவளிக் கொண்டாட்டத்துக்கான தயார்ப்படுத்தல்கள் ஆரம்பித்து விட்டன. பெரும் வியாபாரத்தை எதிர்பார்த்துக் கடைமுதலாளிகள் தமது வாடிக்கையாளர்களைக் கவர புதிது புதி தாக ஆடை, ஆபரணங்கள், உபகரணங்களை அறிமுகப்படுத்த ஆரம்பித்துள்ளனர். கடைகளில் குவிந்திருக்கும் கூட்டம் தீபாவளி வியாபாரத்தின் சூட்டை எடுத்துக் காட்டுகிறது.

எமக்கென எந்த உற்பத்தியும் இல்லாத நிலையில் தீபாவளிக்கென ஒவ்வொரு கடைகளிலும் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகள் தொடர்பாக அறியும் ஆவலில் யாழ். நகர்க் கடை வீதிகளை ஒரு தடவை சுற்றினேன்.


படங்கள்: இனியன்

கடைகளில் சுற்றியதில் தீபாவளிக்குப் பெண்களுக்குத்தான் அதிகம் கிடைக்கிறது என்று புரிகிறது. யாழ். நகரில் இந்த முறை 'சல்வார்' தான் சிறப்பு. அளவான விலைக்கு நாகரிகமாகக் கிடைக்கிறது. சேலை விலை அதிகம். 'கொட்டன்' சேலைகள் சில மட்டும் 800 ரூபாவுக்குப் புதிதாக அறிமுகமாகி இருக்கின்றன.

பாவம் ஆண்கள் இந்த தீபாவளிக்கென அவர்களுக்கான புதிய வரவுகள் அவ்வளவாக இல்லை. 'மங்காத்தா' சேர்ட் மட்டும் வந்திருக்கிறது. விதியை நொந்துகொண்டு பழைய ஸ்டைலிலேயே அவர்கள் திரிய வேண்டியது தான்.

பெண்களுக்கான ஆடைகள் தாராளம். எல்லாவற்றுக்கும் ஏதாவது ஒரு சினிமாப் பெயரைச் சொல்கிறார்கள்.

ஏன் என்று கேட்டால் ''கடைக்கு வருபவர்கள் சினிமாப் பெயரில்தான் கேட்கிறார்கள்'' என்று விளக்கம் தருகிறார் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர். குடாநாட்டில் இப்போது 'பாஷன்' சீகுயின்ஸ் சாறிகள் தானாம். கல்வைத்து வேலைப்பாடுகள் செய்யப்பட்ட சேலைகள் 1,500 ரூபாவிலிருந்து விரும்பிய விலைக்கேற்றாற்போல் கிடைக்கிறது. தீபாவளிக்கான 'ஸ்பெஷல்' சேலையின் விலை 4,500 ரூபா. அதிகமான பெண்களின் இந்த வருட வாக்கு இதற்குத்தானாம். கணவன்மார் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் இது.





வேலைக்குப் போகும் பெண்கள் விரும்பும் கொட்டன் சாறியும் 600 ரூபாவிலிருந்து விரும்பிய விலைக்கு ஏற்றாற் போல் கிடைக்கிறது. இருந்தும் அதிகமான பெண்கள் கல் வைத்த சாறியைத்தான் விரும்பி வாங்குகிறார்களாம். அதற்குப் பெயர் 'அம்பிகா' சீக்குயின்ஸ் சாறி.

பஞ்சாபி பெஷல் (சல்வார்) வசந்தரா (2,200), அனார்க்கலி (2,800), நான்சி (2,000), டபுல்கலர் சீக்குயின்ஸ் சல்வார் (1,700), கொட்டன் சல்வார் (1,000) இவற்றில் அதிகமானோரின் சொய்ஸ் வசந்தரா சல்வாரைத்தான் விரும்பி வாங்குகிறார்கள்.

ஆண்களுக்கு எப்போதும் அதிரடியாக வேண்டும் என்பதால் வந்திருக்கிறது 'மங்காத்தா'. மங்காத்தா சேட் 2,500 ரூபாவுக்கும் 3/4 பொட்டம் 1,650 ரூபாவுக்கும் கிடைக்கிறது. வேறு எதனையும் புதிதாகக் காணமுடியவில்லை.

### நிஸா

யாழ். நகரில் உள்ள பிரபலமான கடைகளில் தீபாவளிக்கென இந்தியா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து தாராளமாக ஆடைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. பல கடைகளில் தீபாவளிக்கென 10 வீதம் தள்ளுபடியும் வழங்குகிறார்கள். என்ன.... காசை மூட்டையில் கட்டி கணவன் கையில் கொடுத்து விட்டு கடைக்குள் நுழைந்தால் சரி.



## காணிப்பதிவை நிறுத்த முடியாதாம் இது குறித்து என்ன சொல்லுகிறீர்கள்

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் காணிப்பதிவை உடனடியாக நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்திவரும் நிலையில், இல்லை, இல்லை பதிவை நிறுத்த மாட்டோம், நடவடிக்கை தொடரும் என ஆணித்தரமாக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அரசியல்வாதிகள் சிலர் கூறிய கருத்துகள்.

## இது மக்களின் நன்மைக்காக

### அமைச்சர் வாசுதேவ

காணிப்பதிவு நடவடிக்கையில் பிரச்சினையுள்ளது என ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதால் அது தீர்ந்துவிடப்போவதில்லை.

குறைநிறை ஏதாவது இருந்தால், அதனை சுட்டிக்காட்டி எழுத்து மூலம் அறிவியுங்கள். அப்பொழுது தான் பிரச்சினைகளை ஆராய்ந்து அரசு அதற்கேற்ப நடவடிக்கைகளை முன்னெடுக்க இலகுவாக இருக்கும்.

காணிப் பதிவில் வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு உடன்பாடு இல்லாவிட்டால் அல்லது பிரச்சினைகள் ஏதும் இருந்தால் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் வடக்கு, கிழக்கிலுள்ள எம்.பிக்களோ அல்லது மாகாண சபை உறுப்பினர்களோ அல்லது உள்ளூராட்சி சபை உறுப்பினர்களோ அவற்றை அரசின் கவனத்துக்குக் கொண்டுவர முடியும். அதற்கு அவர்களுக்கு உரிமையுள்ளது.

அவ்வாறு செய்யாமல் வெறுமனே அறிக்கை விடுவதால் என்ன பயன்? காணிப்பதிவு என்பது வடக்கு, கிழக்கு மட்டும் விதிவிலக்கல்ல என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இது ஓர் உள்நிர்வாக ஏற்பாடு. மக்களின் நன்மைக்காகச் செய்யப்படும் ஒரு நடவடிக்கை - என்றார். தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

## எமது நிலைப்பாட்டிலும் மாற்றமில்லை

### வினோநோகராதலிங்கம்

இலங்கை அரசுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுகளில் நம்பிக்கையில்லாததன் காரணமாகவே நாம் சாத்வீக வழியில் போராடத் தீர்மானித்தோம்.

வடக்கு, கிழக்கில் அரசு முன்னெடுத்துள்ள காணிப்பதிவை நிறுத்துமாறும் நாம் சாத்வீக வழியில் போராடத் தீர்மானித்தோம்.

வடக்கு, கிழக்கில் அரசு முன்னெடுத்துள்ள காணிப்பதிவை நிறுத்துமாறும் ஏனைய சில கோரிக்கைகளை முன்வைத்தும் நாம் வவுனியாவில் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இதன்போது, இலங்கை அரசு காணிப்பதிவை நிறுத்தாவிட்டால் மாவட்ட ரீதியில் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுப்போம் எனத் தெளிவாகக் கூறினோம்.

ஆனால், காணிப்பதிவை நிறுத்தமாட்டோம் என அரசு அறிவித்துள்ளது. எமது நிலைப்பாட்டிலும் மாற்றமில்லை என்பதை ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம் - என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம்.

## அரசின் இலட்சணம் உலகுக்குப் புரியும்

### திருநாவுக்கரசு

தமிழ் மக்களின் நலன் கருதியே காணிப்பதிவை அரசு முன்னெடுக்கின்றது என காணி அமைச்சர் கூறுவதானது 'ஆடு நனைகின்றது என ஓநாய் அழுத கதை போல்' உள்ளது.

இந்தக் காணிப்பதிவு நடவடிக்கையில் ஏதோ உள்நோக்கம் உள்ளது. அரசு அதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எம் மக்கள் இன்னும் முழுமையாக மீண்டுவிடவில்லை. அதற்கு முன்னர் ஏன் இந்த அவசரம். தமிழர் தாயகப் பிரதேசங்களிலுள்ள நிலங்களை அபகரிப்பதில் நீங்கள் கண்ட சுகம் தான் என்ன?

பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கலாம் என கூட்டமைப்புக்கு அரசு அழைப்பு விடுக்கின்றது. இந்த அரசின் இலட்சணம் உலகுக்கு நன்கு புரியுமே - என்றார் நவசமசமாஜக் கட்சியின் அரசியல் உறுப்பினர் திருநாவுக்கரசு.

## தவறான செயல்

### ஹசன் அலி

மக்களின் பங்களிப்பு இன்றி அதிகார மட்டத்தில் காணிப்பதிவு நடவடிக்கையை முன்னெடுத்தால் அது ஒரு தவறான செயல் என்றே சொல்லலாம்.

வடக்கு மாகாணத்தில் நிலவும் காணிப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு காணிக் கச்சேரியொன்றை அமைத்து அதனூடாக பக்கச்சார்பின்றி நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

1986ஆம் ஆண்டு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் இவ்வாறானதொரு பிரச்சினை ஏற்பட்டது. அதன் பின்னர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தோம். உடன் அரசியல் எல்லைகள் வகுக்கப்படும்போது மக்களின் பங்களிப்பு என்பது இன்றியமையாததாகும் - என்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி.

## அறியாமையின் வெளிப்பாடு

### சிறிதுங்க ஜயசூரிய

'வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு' என்று சொன்ன கதை போலவே காணி அமைச்சரின் கூற்று உள்ளது. தெற்கிலுள்ள காணிப் பிரச்சினை என்பது வேறு. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிப் பிரச்சினை என்பது வேறு. இதைக் கூட காணி அமைச்சரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளுடன் பின்னிப்பிணையப்பட்டதே காணி விவகாரம். அதனைப் புரிந்து அரசு மக்களுக்கேற்றவாறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். கூட்டமைப்பினரின் கேள்விகளுக்கு அனைத்துப் பிரதேசங்களிலும் காணிப்பதிவு இடம்பெறுகின்றது என்ற தொனியிலேயே அமைச்சரின் பதில் உள்ளது. இது அவரின் அறியாமையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது - என்றார் தேசிய சோசலிஷக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். குடும்பத்தினர் விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சக ஊழியர்கள் விடுமுறையால், கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். உறவினர் ஒருவர் உங்களின் கோபத்தைத் தூண்டும் வகையில் நடக்கலாம். தாய் வழியில், எதிர்பாராத சிரமங்கள் நேரிடலாம்.

**இடபம்:**
குடும்பப் பெரியவர்களின் யோசனை கேட்டு நடப்பீர்கள். மற்றவர்களுக்காக சில நல்ல காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். தேவையற்ற செலவுகளைக் குறைத்து சிக்கனத்தை அதிகரிப்பீர்கள். அதிகச் செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று, குறைந்த செலவில் முடிவுக்கு வரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்:**
சிலரிடம் பண உதவி, கடன் உதவியைப் பெறலாம். நினைத்த ஒரு காரியத்தை முடிக்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். வெளியூரில் இருக் கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

**கடகம்:**
நண்பர்கள் சிலர் மூலம் நல்ல செய்திகளைக் கேட்கலாம். பணிபுரிவோர் உயர் அதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்க நேரிடலாம். கவனக்குறைவாகச் செயற் படுவதன் மூலம் கை, கால்களில் அடிபடலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

**சிங்கம்:**
சகோதரர்கள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். குடும்பப் பெரியவர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். குறுக்கு வழிச் சிந்தனைகளைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வாத உணவு வகைகளை அதிக அளவில் சாப்பிட்டு, உபாதைகளுக்கு ஆளாகலாம். சிறிய பிரச்சினை ஒன்று, பெரிய அளவில் தொந்தரவு கொடுக்கலாம்.

**கன்னி:**
முயற்சிகளில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும் நாள். தடைப்பட்ட பணவரவுகள் தாராளமாக வந்து சேரும். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். வியாபாரிகள் தொழில் விஸ்தரிப்பு விடயங்களில், நாட்டம் கொள்வர். பழைய கடன் மிகுதி ஒன்றை தீர்ப்பீர்கள். சொல்வாக்கும், செல்வாக்கும் அதிகரிக்கும்.

**துலாம்:**
தம்பதியரிடையே ஒற்றுமை அதிகரிக்கும். நீண்ட நாள்களாக வராத பணவரவு ஒன்று வரலாம். மலைபோல் குவிந்த வேலைகளை அசராமல் செய்து முடிப்பீர்கள். மாற்று மதத்தினர், மாற்று மொழி பேசுவோர் விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். தொழில் ரீதியாக உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள்.

**விருச்சிகம்:**
இரண்டு நாள்களுக்கு முன்னர் நிறுத்தி வைத்த வேலை ஒன்றை, இன்று வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். மற்றவர்களுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். உங்களின் செயற்பாடுகளில் சிலர் சந்தேகம் கொள்ளலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும்.

**தனுசு:**
கடன் மிகுதிகள் வசூலிப்பில் எதிர்பார்த்த பலன் கிடைப்பது கடினம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். வருமானம் இருந்தாலும் அதற்கு முன்னரே, செலவுகள் காத்திருக்கும். எங்காவது வெளியில் செல்லும்போது, வாகனங்கள் பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம்.

**மகரம்:**
தொழில் விடயங்களில் அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனை கேட்டு நடப்பது நன்மை தரும். மனைவி வழி உறவுகள் மூலம் ஆதாயம் பெறலாம். உங்களுக்கு உதவி செய்த ஒருவருக்கு, பதில் உதவி செய்வீர்கள். முன்யோச னையுடன் செயற்படுவதன் மூலம், சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். பிள்ளைகளின் கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:**
தொழில் மந்தநிலைமை மாறி, சுறுசுறுப்பு கூடும் நாள். சுபகாரியங்களுக்காக சில செலவுகளைச் செய்யலாம். தாய் வழி உறவினர்களால் அனுகூலம் பெறலாம். சில வேலலகளை அலைச்சல் இல்லாமல், இருந்த இடத்தில் இருந்தே முடிப்பீர்கள். ஒரு பணவரவை எதிர்பார்க்கையில், மற்றொரு வரவும் சேர்ந்து வரும். இனிய அனுபவம் பெறலாம்.

**மீனம்:**
வெளியிடங்களுக்குச் செல்லும்போது, அங்கு உறவினர் அல்லது நண்பர் ஒருவரைப் பார்க்கலாம். உல்லாசமான செயற்பாடுகளால், செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வெளியூர் பயணம் சென்றவர்கள் மீண்டும், வீடு திரும்பலாம். கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்ப்பீர்கள்.

# புத்தகசாலை

## நூல்: சமூகச்சுடர்
## வெளியீடு: கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்




பன்முக ஆளுமையுடைய ஒரு மனிதரின் சேவைகளால், இனிமையான சுபாவத்தால் மக்கள் மனதில் வாழும் ஒருவரின் ஞாபகங்களைத் தாங்கியதாக வெளிவந்துள்ள நூல் சமூகச்சுடர்.

கைதடி கலைவாணி வித்தியாசாலையின் அதிபராக இருந்து மிக அண்மையில் ஓய்வு பெற்ற ப.செல்லத்துரையின் சேவை நயப்புக்களை இந்த நூல் சுமந்து அவரின் மணி விழா மலராக வெளிவந்துள்ளது.

அவரை நேசிக்கும், அவரால் உயர்வு பெற்ற அன்பர்களும், பொது அமைப்புக்களும் தத்தமது எண்ணங்களை வாழ்த்துக்களாக கட்டுரைகளாக, கவிதைகளாக, ஞாபக இரை மீட்டல்களாக ஆக்கங்களைச் செதுக்கியுள்ளனர்.

அவரின் வாழ்க்கைத் தடத்தில் மைல் கல்லாகக் கூறக் கூடிய சில புகைப்படங்களும் வண்ணம யமாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தராக தனது பயணத்தை ஆரம்பித்து ஆசிரியராக, அதிபராக, கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக, பணிப்பாளராக, லயன்ஸ் கழகத் தலைவராக வலயத் தலைவராக, சமாதான நீதிவானாக, யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினராகத் தனது கிராமத்தின் மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தலைவராக, சனசமூக நிலையத் தலைவராக ஆளுமையின் பரப்பெல்லை விரிந்து செல்கிறது,

புலம் பெயர் நாடுகளில் உள்ள கைதடி உறவுகளின் நிதி உதவிகளைப் பெற்றுச் செய்த அறப்பணிகளும் இந்த நூலில் பதியப்பட்டுள்ளன.

சமூகத்துக்காக உழைக்கும் நல்ல மனிதர்களை ஊக்குவிக்கும் ஏணியாக இந்த நூலை வெளியிட்டுள்ள கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் முயற்சி முன்மாதிரியானது. ப.செல்லத்துரை அவர்களின் நல்வழி சேர்ந்து நடக்க அவை எம்மை தூண்டுமென நம்பலாம் அவர்களின் நல்வழி.

**வே.தபேந்திரன்**

## நூல்: அன்னையின் பாமலர்கள்




அம்பிகையின் அருள் வேண்டி கவிஞர் அன்னை தாசன் அவர்களின் கூட்டுப் பிரார்த்தனைப் பாடற் தொகுப்பாக ''அன்னையின் பாமலர்கள்'' வெளிவந்துள்ளது. களபாவோடை அருள்மிகு வசந்த நாக பூஷணி அம்பிகை அடியார்களின் பக்திப் பாமாலையாக கையடக்க கவித் தொகுப்பாக அழகிய அட்டையுடன் அது காட்சியளிக்கிறது.

அன்னைதாசனின் இசை கலந்த கவிதை நடை கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்களுக்கு இனிமை சேர்க்கின்றது. அன்னையின் பொருள் விளங்கும் பல நிலைகளையும் தமிழ் கலந்த சொற்களில் சுவை மிக ஆக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பாடல்களும் அன்னையின் அன்பை, அருளை ஆட்சியை எமக்களிக்கும் வகை அற்புதமானது அருட்கவியும் அதிபரும் அன்னையின் பக்தருமான க.ஆனந்தராசா அன்னைதாசன் என்ற பெயருக்கேற்ப அன்னைக்கு அன்னையின் குடமுழுக்கு நாளைச் சிறப்பிக்கும் பலத்துடன் நூலை வெளி யிட்டுள்ளார். இதில் கவிச் சிறப்பும் இசைக்கனிவும் கலந்தொலிக்கக் பக்தித் திருவோங்க பஜனை பாட உகந்த கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் நிரம்பவுள்ளன.

அன்னை அடியார்கள் ஒவ்வொருவர் கையிலும் இருந்து அன்னையின் புகழ் பாடி அருள் பெருக்க அரியதோர் நூலாகும்.


இலகு தமிழ் இனிய இசை இயம்பவொண்ணாப் பக்தி மழை பொதிந்திலங்கும் பாடல் தொகுப்பு அன்னையின் அடியார்கள் என்றும் ஆசிக்கும் பிரார்த்தனை மாலை.

நூலின் பெருமைகளையும் ஆசிரியரின் சிறப்பையும் சொல்லும் சைவப் பெரியார்களின் வார்த்தைகளிலிருந்து அன்னைதாசனின் ஆக்கம் அனைவரையும் ஈர்த்தாளும் பண்பை அறியலாம்.

கூட்டுப் பிரார்த்தனையோடு அன்னையின் குன்றாத ஆசிகளையும் பெற இது சிறந்ததோர் பக்தி பெருக்கும் படைப்பாகும்.

**இந்திரன்.**

## நூல்: ஈழத் தமிழரின் சமூக அரசியல் ஆள் கூறுகள்
## ஆசிரியர்: வைத்தியகலாநிதி சி.யமுனானந்தா




ஈழத்தமிழரின் சமூக அரசியல் ஆள் கூறுகள் என்ற தலைப்புடன் வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா அவர்களில் அரிய தோர் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

ஓர் இனத்தின் வரலாறும் அவர் தம் வாழ்வின் வளமும் அழிக்கவியலாப் பதிவுகளுக்குள் உள்ளடக்கப்பட வேண்டியதன் அவசி யத்தை இந்த நூலின் வெளிவருகை வலியுறுத்தி நிற்கின்றது.

மக்களின் வாழ்க்கைச் சுதந்திரத்தை குலைக்கும் சமூகத்தின், அரசின் சுயநலமிகளின் சூழ்ச்சிகளுக்குள் சிக்குண்டு அவற்றிலிருந்து தப்பிப் பிழைத்து வாழத் துடிக்கும் மக்களைச் சிந்திக்க வைக்கும் வகையில் நூலின் உள்ளடக்கம் நிறைவான பல காரணிகளைச் சுட்டி நிற்கின்றன.

உன்னதமான மனித நேயத்தின் பால் ஒவ்வொருவரும் தம்மை எத்துணை பலம் கொண்டவர்களாக இணைத்துக் கொண்டு செயலாற்ற வேண்டும் என்பதை உரத்துச் சொல்லிருக்கும் வகை ஒவ்வொரு அத்தியாத்தையும் வாசிக்கும் தோறும் வாசகனின் உணர்வைத் தொடுகின்றது.

மக்களின் வாழ்வாதாரம் கல்வி போன்றவற்றில் மனிதனின் பிறப்பு, வாழ்வு, இறப்பு என்ற சங்கிலியில் எம்மவர்கள் எத்தகைய ஈடுபாட்டைக் கொண்டுள்ளார்கள் என்பதும் அதன் வழி ஒவ்வொருவரும் மேற்கொள்ள விரும்பும் நல்லமைதி வழிகளுக்காய் வார்தையளவில் திறக்கப்பட்டுள்ள செயலளவில் திறக்கப்பட வேண்டிய வாயில்கள் பற்றியும் நூல் நிரம் பவே கருத்துரைத்துள்ளது.

போருக்குப் பிந்திய வாழ்வில் தமிழர்களும் தமிழர் நிலங்களும் சந்திக்கின்ற குடியேற்றங்கள், கடத்தல்கள், கொலைகள், படையினரின் அட்டூழியங்கள் பற்றியும் மீள் குடியேற்றம் வாழ்வாதாரப் பாதிப்புக்கள், நிவாரணங் கள் புனரமைப்புகள், குடும்ப உறவுகளின் இழப்புக்கள் எனப் பலநிலை பரந்தும் பல திசை விரிந்தும் ஆய்ந்து சிந்தித்து எழுதப்பட்டுள்ள இந்நூல் ஈழத் தமிழரின் வரலாற்றுடன் அவர்கள் முன்னெடுக்க வேண்டிய நற்பணிகள் பற்றியும் சிந்திக்கத் தூண்டுகின்றது.

ஒவ்வொரு ஈழத் தமிழினும் வாசிக்க வேண்டிய சிறந்ததோர் கருத்துப் பகிர்வு நூல். நாம் கடந்து வந்த சோகங்களுக்கு மருந்திடும் வகையில் எமது சிந்தனைக்கும் செயலுக்கும் தெளிவூட்டும் நூலாக அழகிய அச்சில் இது வெளிவந்துள்ளது. வைத்திய கலாநிதி அவர்கள் இந் நூலை ஆக்கவும் வெளியிடவும் எடுத்துக் கொண்ட முயற்சி தமிழ் மக்களின் இன்றைய துயரப் பகிர்வுக்குத் துணை செய்வதோடு தமிழர் தம் உரிமைக் குரலுக்கு உரம் சேர்க்க உதவும் என நம்பலாம்.

**மகேஷ்.**

புத்தகசாலைப் பகுதிக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்பி வைத்தால் அவை தொடர்பான விவரம் இப்பகுதியில் பிரசுரிக்கப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2 ஸ்ரீ ×××× தொடரிலக்கமுடைய மைனர் கார் (*Butter Colour*) விற்பனைக்கு உண்டு.
**விவரங்களுக்கு : 077 3248867**

## வீட்டுத் தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு
## *HOME NURSING TRAINING*

*இந்தப் பயிற்சிநெறி சென். ஜோன் அம்புலன்ஸ் ஸ்ரீலங்காவினால் ஜொனிற்றர் ஜேர்மன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக ஆரம்பிக்கப் பட உள்ளது. இந்தப் பயிற்சி 3 மாதங்களுக்கு இடம்பெறும். இந்தப் பயிற்சியைப் பெற விரும்பும் 17 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்ட க.பொ.த. (சாதாரண) பரீட்சையில் 5 பாடங்களில் சாதாரண சித்தியெய்திய ஆண், பெண் இருபாலாரும் 27.10.2011 வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென். ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்துக்கு சமுகம் தரவும்.*

**அவசர அம்புலன்ஸ் சேவைத் தொடர்பிலக்கம்:
021 3214444
மாவட்ட ஆணையாளர், சென். ஜோன் அம்புலன்ஸ்,
யாழ்ப்பாணம்.**

# மருந்துகளை வெளிச் சந்தையில் வாங்க பணிப்பாளருக்கு அதிகாரம்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.22

வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது அவற்றை சந்தையில் (தனியார்) விலைக்கு வாங்குவதற்கான அதிகாரத்தை வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கு சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது.

அதற்கான போதியளவு பணமும் வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் அவற்றை உடனடியாகத் தீர்ப்பதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் மைத்திரி பாலசிறி சேனாவின் பணிப்பின் பேரிலேயே இது நடைமுறைக்கு வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் கையிருப்பில் இல்லாத மருந்துகள் பற்றிய விவரங்களை தாமதமின்றி அமைச்சின் மருந்துகள் விநியோகப் பிரிவுக்கு அறிவித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடுகள் ஏற்படாமல் தடுப்பதற்காக போதியளவு பணம் கையிருப்பில் இருக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் சுகாதார அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார் எனவும் ஜனாதிபதி அதை அங்கீகரித்துள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச-5)

# கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு 25 மாடிக் கட்டடம் அமைக்கத் திட்டம்

கொழும்பு, ஒக்.22

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கென 25 மாடிகள் கொண்ட கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சீன அரசின் உதவியுடன் நிர்மானிக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்துக்கு 972 கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது இயங்கிவரும் வெளிநோயாளர் பிரிவுக்கு பதிலாக புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

ஒரே சமயத்தில் 500 வாகனங்களை நிறுத்தக் கூடிய வாகனத் தரிப்பிடம், வார்டுகள், வைத்தியர்களின் ஓய்வறை, மருந்துச்சாலை, நோய்கள் பரிசோதனைப் பிரிவு போன்றவை இந்தக் கட்டடத்தில் அமையவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் எதிர்வரும் டிசம்பர் மாதம் கட்டட நிர்மாண பணிகள் அங்குரார்ப்பணம் செய்யப்படும் எனவும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, வைத்திய உபகரணங்கள் உட்பட சகல வசதிகளயும் இந்தக் கட்டடம் கொண்டிருக்கும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஸ்ரீராகினி ஸ்ரீரங்கநாதன் (ராகினி)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீராகினி ஸ்ரீரங்கநாதன் 18.10.2011 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் ஸ்ரீரங்கநாதனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- செல்வராணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நிக்கோள் மற்றும் அருச்சுனா, பிருந்தா, ஸ்ரீராமன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீகுமார் (கனடா), ஸ்ரீரஜனி (கனடா), ஸ்ரீறமணி அருள்வேல் (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீரஞ்சன் (கனடா), ஸ்ரீரோகினி (ஆஸ்திரேலியா), ஸ்ரீரவிசங்கர் (கனடா), ஸ்ரீரமேஸ் (கனடா), ஸ்ரீசுரேஸ் (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீரூபினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானசக்தி (கனடா), சிவமூர்த்தி (கனடா), அருள்வேல் (யாழ். பல்கலைக்கழகம்), மலர்ச்செல்வி (கனடா), ராஜேந்திரம் (ஆஸ்திரேலியா), ஜெயபாலினி (கனடா), ரஜனி (கனடா), கலைவாணி (கனடா), ரட்ணாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.10.2011 திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரீபவனம்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.**

**தகவல்:
ஸ்ரீரமணி அருள்வேல்
(சகோதரி)**

### திருமதி இராசையா புவனேஸ்வரியம்மா (செல்லம்மா)



பொலிகண்டி, கந்தவனத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா புவனேஸ்வரியம்மா (செல்லம்மா) 19.10.2011 புதன் கிழமை காலை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனக்குருக்கள் பொன்னம்பலக் குருக்கள் -பாக்கியம் தம்பதியரின் மகளும் வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை இராசையாவின் அன்பு மனைவியும் பொ.கந்தசாமி, பொ.கனகசபாபதி ஆகியோரின் சகோதரியும் இராசையா கணேசமூர்த்தி (கனடா), அ.ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயும் சி.அருட்செல்வன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர்), க.கமலேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் அ.உஷாந்தினி அ.லோஜிதா, அ.வேதினி, அ.யுகேஸ், த.தர்சிகா, க.கர்சினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொலிகண்டி.**

*தகவல்:*
குடும்பத்தினர்

# அங்குரார்ப்பண வைபவத்தை புறக்கணித்த முன்னாள் மேயர்

கொழும்பு, ஒக்.22

இருபது வருடங்களுக்கு மேலாக குருநாகல் நகர சபையின் முதல்வராகப் பணிபுரிந்த நிமல் சந்திரசிறி சில்வா உட்பட ஆளும் கட்சி உறுப்பினர்கள் நால்வர் இம்முறை அச்சபையின் அங்குரார்ப்பண விழாவில் கலந்து கொள்வதை தவிர்த்துள்ளனர்.

இச்சபையின் புதிய முதல்வராக காமினி பெரமுனகே பதவியேற்றதை யடுத்து நேற்று முன்தினம் வைபவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முன்னாள் தலைவர் நிமல் சந்திரசிறி இம்முறை பிரதித் தலைவர் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்தே இந்த நால்வரும் அந்த வைபவத்தை புறக்கணித்தனர் என்று பெரும்பாலானோர் கருத்து தெரிவித்தனர்.

குருநாகல் நகரசபைக்கு இம்முறை 12 உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். அவர்களுள் எட்டு பேர் ஆளும் கட்சியையும் நான்கு பேர் எதிர்க்கட்சியையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-5)

## விற்பனைக்கு

நாம்பன் மாடும் கறவைப்பசுவும் ஆட்டுக்கடாவும் விற்பனைக்கு உண் டு.
**தொடர்பு : 0774592913**

## விற்பனையாளர் தேவை

**பொருள்களை கொண்டுசென்று விற்பனை செய்வதற்கு 18-30 வயதுக்கும் உட்பட்ட ஆண்கள் உடன்தேவை
வேதனம் 18000/= 3 நேர உணவும் தங்குமிடவசதியும் கொடுக்கப்படும்.
அலுவலகம்: கொற்றாவத்தை,
நெல்லியடி பருத்தித்துறை
T.P- 0777167110, 0770242370**

## இறைச்சிக் கோழி விற்பனை

*உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.*
**புறொயிலர் இறைச்சி ரூபா 495/= மட்டுமே
நல்லூர் பாம் சென்ரர்,
இல.19, முருகேசர் லேன், நல்லூர்.**

## தேவை

**சந்தைப்படுத்தல் உதவியாளர் தேவை. கவர்ச்சிகரமான கொடுப்பனவு வழங்கப்படும். பகுதி நேரமாகவும் பணியாற்ற முடியும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு : 0750739635**

## கண்ணீர் அஞ்சலி



எமது மாவடி மெடிக்கல் சென்ரர் ஸ்தாபகரும் ஓய்வுநிலை அதிபரும் *Dr.* ஆ.காந்தநேசன் அவர்களின் பாசமிகு தந்தை

### கதிரவேலு ஆறுமுகம்

இறைபதமெய்தியுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்திடைய பிரார்த்திப்பதோடு அவரது உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வட்டு மெடிக்கல் சென்ரர், ஊழியர்கள்,எ மாவடி, வட்டுக்கோட்டை.**

## நினைவு அஞ்சலி

கமநல அபிவிருத்தித் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் ***சி. திருச்சிற்றம்பலம்*** அவர்களின் பாசமிகு தந்தை

### கதிர்காமர் சிதம்பளரநாதர்

அவர்களின் நினைவு தினத்தையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கமநலசேவைக்குழு, விவசாய சம்மேளனங்கள் உத்தியோகத்தர்கள், கமநல சேவை நிலையம், தொல்புரம்.**

# 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
11 - 09 - 1965



விண்ணில்
05 - 11 - 2007

## அமரர் பூபாலன் கமலாகரன் (பாபு)

திதி : 22.10.2011

அன்புக்கு இனியவனே என்னுயிர் ஆசை அத்தானே பாசம் நிறைந்த எம் அப்பாவே கண்கெட்ட கடவுள் ஏனடா என்னை படைத்தான் படைத்தவன் ஏனடா உனை எனக்கு கொடுத்தான் கொடுத்தவன் ஏனடா வேரோடு பிடுங்கி எடுத்தான். நான் இங்கு சுவாசிக்க முடியாமல் அனுதினமும் என்முச்சை ஏன் இழுத்தான் என்னுயிரே அன்பு எனும் ஊற்றை ஆசை, பாசம், காதல் என்னும் பந்தத்திலிருந்து நான் செய்த பாவம் என்ன? என் தெய்வமே ஏன் எனக்கு இந்த போராட்ட வாழ்க்கை? கடவுள் ஏன் சிலையானான்? கடவுள் இருக்கிறானா? ஏன்னுயிரே! அப்பா நீங்கள் சொன்ன படிப்பை படிக்கிறேன். எல்லாம் உங்கள் ஆசை ஆசியப்பா ஆனால் எமை தைரியம் சொல்ல உன் பிள்ளையை கூட்டிச்சென்றுவிட நீங்கள் இல்லையே அப்பா என் கால்கள் வலிக்குதப்பா. நீங்கள் உச்சிமுகர்ந்து தந்த முத்தமெல்லாம் இன்று கனவாகிறதப்பா நிஜத்தை தேடுகின்றோம். நீங்கள் இல்லாமல் நான்காண்டு.நாங்கள் வாழ்ந்தது நிஜமா அப்பா.

அத்தான் நீ சென்ற இடத்தைவிட்டு மீண்டும் வந்திடடா எம் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி பேசிடவேண்டும். றணமாய் கொள்ளும் என் இதயத்தின் வலிகளை உன் நெஞ்சில் தலைசாய்த்து நான் சொல்லவேண்டும். என்னை ஏமாற்றாதே மீண்டும் வந்திடடா என்னுயிரே. உனக்காக விழித்து விழித்து என் கண்களில் உணர்வுகள் இங்கு உறைகின்றது என்றும் அழியாத இன்பம் தந்தவனே உன் மூச்சு காற்றுக்குள் மறுபடியும் மீண்டும் உறங்க வேண்டும் என்று மறையாத உங்கள் நினைவுகளுடன்;

அன்புக்குரியவர்கள்;
கமலாகரன் மதனிகா(மனைவி)
நம் அன்புச்செல்வங்கள்;
கமலாகரன் அபிஷா
கமலாகரன் சகிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வசந்தம்



வயதாவது வேறு; வளர்வது வேறு. இன்றைக்குப் பலருக்கு வயதாகிறதே ஒழிய வளர்ச்சியே கிடையாது. காந்தி அடிகளுடைய இளமையான புகைப்படங்களைப் பாருங்கள். அழகு இருக்காது. தென்னாபிரிக்காவில் காந்தி என்ற வரலாற்றுப் புகைப்படத்தைக் கூர்ந்து பாருங்கள். அவர் முகத்தில் சோகமும் கண்களில் வருத்தமும் நிம்மதியற்ற நிலையும் தெரியும். ஆனால் பொக்கை வாய்க் காந்தியின் புகைப்படங்களைக் கவனியுங்கள். புன்சிரிப்பில் கூட முழுமையும் ஆனந்தமும் பூத்துக் குலுங்கும். காரணம், காந்திக்கு வயதாக வயதாக வளர்ச்சியும் மலர்ச்சியும் விளைந்தது.

முதுமை என்பது பழுத்தல். அரும்பாகி, மலராகி, காயாகி, கனியாகி படிப்படியாக வளர்ந்து மேன்மையுறுதலே முதுமை. அரும்பும் மலரும் கருகக்கூடாது. காயோ கனியோ வெம்பக் கூடாது. இன்றைய முதியோர் பலர் முத்தோர் அல்லர். கனிந்தோர் அல்லர்.... கருகினவர்... இதுதான் சிக்கலே.

தமது அப்பிராயங்களின் படி தமது குடும்பத்தை உருவாக்கும் ஆளுமை இல்லாத பெற்றோர்கள் வாழ்வில் தோற்பது உறுதி. ஒரு காலம் வரை கட்டாயம். ஆனால் அதையும் தாண்டி தமது மகனுடைய குடும்பத்தையும் ஆள நினைக்கும் மூடத்தனம் உள்ளவர்கள் அவமானப்படுவது உறுதி. வளர்ந்த பிள்ளைகள் வாழ்விலும் மூக்கை நுழைக்கும் முதியோர்கள் மூக்கறுபடுவது தவிர்க்க முடியாதது.

தலையிடாமை, பெருந்தன்மை, பற்றின்மை, விட்டுக் கொடுத்தல், மன்னித்தல் மனதளவில் துறவு முதுமைக்குக் கண்டிப்பாகத் தேவை.

கொஞ்சம் சுவை இல்லாத மருமகள் சமையலைக் கோபித்துக் கொள்ளும் மாமியார்கள் கொஞ்சம் கூட சுவையில்லாத முதியோர் இல்ல சமையலைக் காலமெல்லாம் சகித்துக்கொள்கிறார்களே! இது எப்படி முடிகிறது? மகன் மரியாதை தருவதில்லை என்று முணுமுணுக்கும் கிழவர்கள் மரியாதையே இல்லாத பலருக்கு மத்தியில் வாழ்ந்து சாகிறார்களே...... அதுமட்டும் எப்படி முடிகிறது? இதைத்தான் சொல்கிறேன், பலருக்கு வயதாகிறதே ஒழிய... வளர்ச்சி வரவில்லை. இதுதான் பிரச்சினைக்கு முதல் காரணம். வயதாக வயதாக பார்வை, செவிப்புலன் பழுதடைவது போலவே நாவில் சுவை அரும்புகள் பாதிக்கப்படும். அதுமட்டுமல்ல.... வாத, பித்த சிலேட்டுமம் மாறுபடும். முதுமையில் தாறுமாறாக இருப்பதால் சுவை வேறுபாடு அடிக்கடி மாறும். அதனால் உணவு சம்பந்தமாக ஓயாமல் மருமகளைக் குறை சொல்லக் கூடாது. விரக்தி, இயலாமை, ஏறி இறங்கும் இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை அளவில் குளறுபடி இவை காரணமாக எதிர்த்தரப்பில் தவறில்லாத போதும் தவறுபோலத் தோன்றிவிடும். எனவே எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பு முதியவர்களுக்கு இருக்கிறது. குற்றம் சாட்டும் போக்கிலேயே எப்போதும் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. தவறு தன் பக்கம் இருக்கலாம்; அல்லது அடுத்தவர் பக்கம் இருக்கலாம் அல்லது இருவர் தரப்பிலுமே தவறு இருக்கலாம்... இல்லாமலும் இருக்கலாம்.

இவற்றை உணராமலேயே சண்டை போடுவது, குற்றம் சுமத்துவது, கோபித்துக்கொண்டு வெளியேறுவது, ஊரெல்லாம் போய் மகனையோ மகளையோ மருமகளையோ குறை சொல்லுவது சில பெரியவர்களின் பழக்கமாக இருக்கிறது. கண்டிப்பாக ஏதாவது ஒரு தியானப் பயிற்சியை மேற்கொண்டு, முதியவர்கள் சுயபரிசோதனை செய்ய வேண்டும். தங்கள் மன அழுத்தத்தை மாற்ற இசை கேட்பது, வாய்விட்டுப் பாடுவது, நிறையத் தூரம் நடந்து திரும்புவது, பேரக்குழந்தைகள் என்றாலும் அவற்றோடு விளையாடுவது என்று வாழ்க்கையைத் தாங்களே மகிழ்ச்சியாக்கிக் கொள்ள வேண்டும். முதுமையில் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்காது- நாம்தான் மகிழ்ச்சியாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

பிடிவாதம், அகங்காரம், தங்கள்அபிப்பிராயப்படியே இன்னும் எல்லாம் நடைபெற வேண்டும் என்கிற மூர்க்கம் தனது முக்கியத்துவம் போய்விட்டதோ என்கிற பயம் இவைகளே பெரியவர்கள் அவமானப்படக் காரணங்கள். இதிலிருந்து விலகி ஒரு வெண்மேகத்தைப் போல லேசாகிவிட பெரியவர்கள் பழக வேண்டும்.

இராமாயணத்தில் சீதை யாரோ, அனசூயை யாரோ. ஆனால் நகையிழந்து வனவாசம் வந்த சீதைக்கு தன் நகை முழுவதையும் அணிவிக்கிறாள் அனசூயை. அவள் அல்லவா பெரியவள். அர்த்தம் இல்லாமல் காட்டில் உயிர் வாழ்ந்து கொண்டிருந்த ஜடாயு, காடு வந்த இராமனைப் பார்த்ததும், ''ஆஹா.... உனக்கு உதவுவதன் மூலம் என் எஞ்சிய வாழ்வை அர்த்தப்படுத்துவேன்'' என்று உறுதியளித்து சீதையைக் காக்கும் போராட்டத்தில் உயிர் விட்டார். நோயில் சாகாமல் அடுத்தவருக்கு உதவுவதில் சாகும் முதுமை அதிசயம் அல்லவா? அவர்களே பெரியவர்.

சு.கி. சிவம்

# வாசகர் திருமுகம்

## எண்ணிப் பார்க்க வேண்டும்

புதுமைசெய்ய நினைத்ததுண்டா என்ற வினாவுடன் கடந்த 9.10.2011 பத்திரிகையில் சோ.பத்மநாதன் எழுதிய கட்டுரை பார்த்தேன். இதில் ஓர் உண்மை புதைந்திருப்பதை மிகவும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. அது மட்டுமல்ல இக்கட்டுரையை வாசிக்கும்போது சில மாதங்களுக்கு முன்பு எனது 8 வயது மகன் என்னைக் கேட்ட கேள்வி ஞாபகம் வந்தது.

கண்டுபிடிப்புகள் பற்றி நான் விளங்கப்படுத்தியபோது ஒவ்வொரு கண்டுபிடிப்புக்கும் பெயர் சொல்லி நாட்டைக் குறிப்பிட்டபோது தொடர்ந்து அவதானித்தபின்பு மகன் கேட்டான் இலங்கையில் ஏன் ஒருவரும் கண்டுபிடிப்புக்கள் செய்யவில்லை என்று. அதுமட்டுமல்ல அண்மையில் அவனது பாடசாலையில் நடந்த பரிசு தின விழாவில் கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரும் அவரது துணைவியாரும் கலந்து கொண்டனர். அவர்கள் பற்றியும் அவர்களது பட்டங்கள் பற்றியும் ஒவ்வொருவரும் புகழ்ந்து கூறியிருந்தனர். அவர்கள் பெரிய படிப்புப் படித்தாலும் கெட்டிக்காரர்கள் என்று எல்லோரும் கூறினார்கள். ஏன் அவர்கள் கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவில்லை. மக்களுக்கு பிரயோசனமான எந்த விதமானவையும் கண்டு பிடிக்கவில்லை என்று என் மகன் கேட்டான். அவனது கேள்வியில் சிறுபிள்ளைத்தனம் இருந்தாலும் அதிலும் ஓர் உண்ம ஒளிந்துள்ளதை நாம் காணலாம்.

எமது பிரதேசம் பெரிய கல்விச் சமூகம் எனப் பெயர் பெற்றது. ஆனால்அதனால் எமது சமூகத்துக்கு என்ன கிடைத்தது என்று பார்த்தால் பூச்சியம் தான். கல்விமான்கள் என்பவர்களால் தமது அறிவை வளர்த்துள்ளனரே தவிர அக் கல்வியில் எதுவிதமான ஆக்கபூர்வமான வடிவங்களும் இல்லை. ஆனால் ஒரு விடயம் மட்டும் உண்மை. கல்வி கற்க மட்டுமே இவர்களால் முடிந்தது தவிர செயற்பாடுகள் இல்லை.

ஆனால் ஒரு விடயத்தில் எம்மவர்கள் சளைத்தவர்கள் இல்லை. அடிக்கடி கவிதை, கட்டுரை என்று புத்தகங்கள் எழுதித் தள்ளுவார்கள். அவை புத்தகக் கடைகளில் தேங்கிக் கிடக்கும். ஏன் எனில் ஒரே விடயத்தை மட்டுமே பலர் எழுதி புத்தகம் போடுவார்கள். படித்தால் ஒரே விடயம்தான். ஆனால் வார்த்தைஜாலம் மட்டும் மாறுபட்டிருக்கும்.

அதாவது ஒருவர் முன்னுக்குப் போட்ட விடயத்தை இன்னும் ஒருவர் இடையில் போடுவர். மற்றவர் கடைசியில் போடுவர். இதுதான் வித்தியாசம். இதில் எங்கு இருக்கிறது திறமை. மக்களின் வளர்ச்சிக்கு ஏற்ற விடயங்கள் கண்டு பிடிப்புக்களைச் செய்யுங்கள். நன்றாக இருக்கும். அதன்மூலம் சமுதாயம் முன்னேறும். எதிர்காலமும் முன்னேறும்.

இப்படியானவர்கள் அறிவாளிகளா? அல்லது பழுதடைந்த வாகனங்களுக்கு இருக்கும் பழையதை வைத்துத் தட்டி நிமிர்த்தி போட்டு ஓடவைக்கும் ஒரு சாதாரண மெக்கானிக் கெட்டிக்காரனா? யோசித்துப் பாருங்கள் உண்மை புரியும். யாரையும் இழிவு படுத்த வேண்டும் என்று இதைக் கூறவில்லை. படித்துப் பதவியில் பட்டங்கள் பெறுவதால் அவருக்கு மட்டுமே பெருமை. மற்றவர்களுக்கு அதனால் எத்தனை வீதம் பயனும் இல்லை என்பதைப் பார்த்துப் பின்பு பாராட்டுங்கள்.

பெண்ணுக்குச் சட்டை தேவையா? சாறி தேவையா? என்ற விவாதத்தைவிட்டு எமது கல்வியில் எமது நாட்டுக்கு என்ன பயன் என்று விவாதங்கள் நடத்துங்கள். இளம் கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவியுங்கள், பாராட்டுங்கள், உற்சாகப்படுத்துங்கள்.

ந.ராகுலகரன், இடைக்காடு.

## ஏன் இந்தக் குளறுபடிகள்?

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, மீண்டும் குடியமர வந்திருக்கும் முஸ்லிம்கள், பல இன்னல்களுக்கு உட்படுகிறார்கள். அவர்களுக்குரிய நஷ்டஈடுகள் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதில் பல பிரச்சினைகள் உள்ளன. யாழ்ப்பாணத்துக்கு குடும்பத்தோடு வந்து வாழ்பவர்களுக்கு மட்டுமே எல்லா உதவிகளும் வழங்கப்படும் என்று உதவி அரச அதிபர் கூறினார். அப்படி யானால் நாங்கள் வந்து எங்கு வாழ்வது எங்கள் இருப்பிடங்கள் [illegible] அழிந்துவிட்டன. இதே நேரம் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் கேள்விப்பட்ட அமைச்சர் றிஷாத் பதியுதீன் யாழ்ப்பாணம் வந்து பல அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தினார். அதன்பின் மக்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. அப்போது மக்கள் மத்தியில் பேசிய றிஷாத் பதியுதீன் நோன்புக் காலத்தில் பேரீச்சம்பழமும் இன் னும் சில பொருள்களும் வழங்கப்படும் எனக் கூறிச் சென்றார். அதன்படி வழங்க முற்பட்ட போதுதான் பிரச்சினை ஆரம்பமாகியது. குடும்பத்தோடு வந்து வாழ்பவர்களுக்குத் தான் இந்தப் பொருள்கள் வழங்கப்படும் என்று அரச சார்பற்ற நிறுவனம் கூறியது. நோன்புக் காலத்தில் அமைச்சரால் வழங்கப்படும் பொருள்கள் யாவும் அரசின் நிதி வளங்களைப் பயன்படுத்திவழங்கப்படுவதில்லை. வசதி படைத்தவர்களால் வழங்கப்படும் ''ஏழைவரி'' என்ற திட்டத்தின் கீழ் வழங்கப்படுபவை. இப்பொருள்கள் குறிப்பாக எந்தவித வருமானமும் இல்லாதவர்கள் போதிய வருமானம் இல்லாதவர்களுக்கே வழங்கப்படும்.

ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் முரண்பாடான கருத்துக்களைக் கூறுவது பொருத்தமற்ற செயல். அப்படி யாழ்ப்பாணத்தில் குடும்பத்தோடு வந்து வாழ்பவர்களுக்கு மட்டும் கொடுப்பனவுகளை வழங்குவதென்றால் நாம் எங்கு வந்து இருப்பது.

நான்கு தகரங்களை வழங்கிவிட்டு வந்து குடியேறு எல்லாம் தருகின்றோம் என்கிறார்கள். இவர்கள் வழங்கும் நான்கு தகரங்களைக் கொண்டு ஓர் ஆட்டுக்கொட்டில் மட்டுமே போடமுடியும். மனிதன் வாழமுடியாது. இதை உணரமறுப்பது எதற்காக?

ஏ.நஸீர் மரைக்கார், யாழ்ப்பாணம்.

## அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பாவா?

உயிர் எழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டின்கள் மீதும் தனித்தனியேறி வரும் போது (18x12) 216 உயிர் மெய்யெழுத்துக்கள் உருவாகும் என்பது தமிழ் இலக்கணம் கூறும் விதியாகும்.

இந்தப் பதினெட்டு மெய்யெழுத்துக்களில் ஒன்றான ''ர்'' என்னும் மெய்யெழுத்தின் மீது உயிரெழுத்துக்கள் பன் னிரண்டும் தனித்தனியேறி வரும்போது ''ர'' முதல் ''ரௌ'' வரையான பன்னிரண்டு உயிர்மெய் எழுத்துக்கள் உருவா கின்றன. உதாரணமாக ''ர்+அ= ர எனத் தொடங்கி ''ர்+ஔ=ரௌ'' என முடிவடையும். இந்த ''ர'' எழுத்து வரிசையிலே வருகின்ற ''ரி'' ''ரீ'' ஆகிய எழுத்துக் களை எழுதும் போது ஏம்மிற் பலர் ''ரி'' எனவும் ''ரீ'' எனவும் எழுது கின்றார்கள். ''ர்'' என்னும் எழுத்தை எழுதும் போதும் ''ர்'' எனவே எழுதுகின்றார்கள்.

இந்த ''ர'' என்னும் எழுத்து நெடிலோசை உருவாக உதவும் ஒன்றாகும். இதனை ''அரவு'' என்பர். இந்த எழுத்துக்கும் ''ர'' எழுத்துக்கும் எதுவித உறவும் இல்லை.

அவர்கள் ''ர'' எனும் எழுத்துக்கு விசிறி விட்டு எழுதும் போது ''ரி'' என்னும் எழுத்தின் கால் மறைந்து ''ரி'' ஆகப் பரிணமிக்கின்றது என்றும் விளக்கம் தருகின்றார்கள்.

நெடிலோசை உருவாக உதவும் எழுத்தான ''ா'' என்பதற்கு விசிறிவிட்டால் ''ரி'' என்னும் எழுத்து (ரி எழுத்துக்கு பதிலாக) உருவாகும் என்பது ''அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா'' என்பது போன்றதாகும்.

இவ்விடயம் எனது மூளையில் பல்லாண்டு காலமாகக் கிடந்து குடைந்து கொண்டிருக்கும் விடயமாகும். எனவே இன்று எம்மிடையே இல்லாத மூதறிஞர் சொக்கன் ஐயா அவர்களுடன் இது பற்றி முன்பு ஒருநாள் உரையாடியபோது ''ர'' வுக்கு விசிறியிட்டால் அதன்கால்போகும் என்பது அறியாமை. ''ரி'' என எழுதுவதும் அறிவீனம். ''ரி'' என எழுதுவதே அறிவுடமை'' என்று எனக்குத் தெளிவாக உறுதியிட்டு விளக்கினார். அப்படி ''ா'' என்னும் எழுத்து ''ர'' என்னும் எழுத்தின் ''தரம்'' இருக்குமாயின் ''ரோ'' என எழுதாது ''ரோ'' என்று எழுதலாம் அல்லவா? எழுதத் துணிவார்களா? மேலும் ''ர'' எழுத்து உரு வாக அடிப்படையான ''ர்'' என்னும் எழுத்தை மாற்றி ''ர்'' என எழுதுவதும் அறிவீனம். எனவே இதுவரை எப்படி எழுதினாலும் அவற்றினை விட்டு விட்டு இன்று முதல் ''ரி'' எனவும் ''ரீ'' எனவும் ''ர்'' எனவும் பிழையற எழுதித் தமிழினைக் காத்து வளர்த்துத் தமிழராய் வாழ்ந்திருப்போமாக!

எஸ். முருகையா, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஒன்றியத் தலைவர் மீது தாக்குதல்; கோழைகளின் விஷமத்தனமான செயல்

## பட்டதாரிகள் தொழிற்சங்க செயலாளர் தெரிவிப்பு

அம்பாறை,ஒக்.22

யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் மீதான தாக்குதல் ஜனநாயகத்தை விரும்பாத கோழைகளின் செயலாகும். இத்தகைய செயற்பாட்டுக்கு அரசு முடிவு கட்ட வேண்டும்.

இவ்வாறு இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்ட தாரிகளின் தொழிற்சங்கச் செயலாளர் எம். ஹுசைன் முபாறக் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் யாழ்.கந்தர் மடம், பழம் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது வழிமறிக்கப்பட்டு தாக்குதலுக்குள்ளான சம்பவத்தைக் கண்டித்தே அவர் இருந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: யாழ்.பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கத்தின் மீது ஜனநாயகத்தை விரும்பாத கோழைத்தனமான காடையர்களால் நடத்தப்பட்ட தாக்குதல் மனித சுதந்திரத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

நாட்டின் நற்பெயருக்கு மீண்டும் களங்கத்தை ஏற்படுத்துவதற்கு சில விஷமிகளால் மேற்கொள்ளப்படும் இந்தச் சம்பவம் குறித்து விழிப்புக் கொள்ள வேண்டியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த சிந்தனை இந்த நாட்டில் தேவைப்படாத கலாசாரத்தை இல்லாது ஒழித்திருக்க தடி எடுத்தவர்களெல்லாம் தண்டக்காரர்களாக மாறி வருவது பட்டதாரி மாணவர்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இவ்வாறான காட்டு மிராண்டித்தன செயற்பாடுகளுக்கு அரசு விரைந்து முற்றுப் புள்ளி வைப்பதோடு பட்டதாரி மாணவர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் போதுமான பாதுகாப்பை வழங்க வேண்டும்.

அதே வேளை தேவையற்றவர்களின் தலையீடுகளை இல்லாமல் செய்து சுப்பிர மணியம் தவபாலசிங்கத்தின் மீது தாக்குதல் நடத்திவர்களைக் கைது செய்து நீதி விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்று எமது இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் கோருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-30)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம்,ஒக.22

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுப்பையா கலையரங்கில் பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி செல்வி மகேஸ்வரிதேவி சரவணமுத்து கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வேள்ட் விஷன் நிறுவனத்தின் திட்டமிடல் மீளாய்வு இணைப்பாளர் ஜே.பி.கோல்டன் கொமரா சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் குமாரசாமி சிவானந்தம் ஆகியோர் கலந்துகொள்வர். (ச)

## அறநெறிப் பாடசாலை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக.22

இராமகிருஷ்ண மிசனின் அறநெறிப்பாடசாலை உரும்பிராய் சந்திக்கு அண்மையில் கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு இராமகிருஷ்ண மிசனின் மூத்தவிநாயக ஸ்ரீமத் இராஜேஸ்வரானந்தர் சுவாமியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பாடசாலையில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை அறநெறி வகுப்புக்கள் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த வகுப்பில் தரம் 1-12 வரையான மாணவர்கள் கலந்துகொள்ளலாம். (ச)



நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் நுவரெலியா மற்றும் பதுளை மாநகர சபைகளுக்குத் தெரிவான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிறிகொத்தாவிலுள்ள கட்சித் தலைமையகத்தில் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவிகளைப் பொறுப் பேற்றுக்கொண்டனர்.

## மஞ்சள் கோட்டை விட்டு வேறிடத்தில் வீதியைக் கடந்தோருக்கு அபராதம்

கொழும்பு, ஒக். 22

கொழும்பு நகரில் மஞ்சள் கோடு அல்லாத இடங்களில் வீதிகளைக் கடந்த சுமார் எண்பது பேருக்கு கொழும்பு போக்குவரத்து நீதிமன்ற நீதிவான் ஜெயராம் ட்றொட்ஸ்கி, கடந்த புதன்கிழமை தலா நூறுரூபா வீதம் மொத்தமாக 8,000 ரூபாவை அபராதமாக விதித்துள்ளார்.

கொழும்பு போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரும், முகத்துவாரம் பொலிஸாரும் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர்.

மஞ்சள் கோடுகளைத் தவிர்த்து, ஏனைய இடங்களில் பாதைகளைக் கடப்பவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகுப்பு பொலிஸாரால் நடத்தப்படுகிறது.

அந்த வகுப்புகளுக்கு சமுகமளிக்கத் தவறுபவர்களை மாத்திரம் இனிமேல் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

YMCA
Jaffna
INVITATION
**Talent Search 2011**
*An Evening of Western Song and Instrumental*
*By*
*Children of all ages*
*On*
*Tuesday 25 th, 2011, at 3.30 p.m*
*At*
***THE UDUVIL GIRL'S COLLEGE***
*All are invited!*
*Be there to encourage the young participants!*
*Prizes for participants & Surprise Galore !!*
***Coordinator,***
***Western Music Talent Search 2011*** *(C/5373)*

**பணிப்பெண் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் கீழ் கண்ட வேலைக்கு 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தேவை
1) வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக் கூடியவர்.
சம்பளம் :- ரூபா 12, 000/=
2) ஒவ்வொரு நாளும் போய் வந்து வேலை செய்யக்கூடியவர்.
சம்பளம்:- ரூபா. 10, 000/=
தொடர்பு :- 0771392137
தயவு செய்து வேலைக்குவர விரும்பும் நபர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.11.1918 | 22.09.2011 |

**அமரர் அந்தோனிப்பிள்ளை மரியம்மா**

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"
" இறுதி நாளில் எல்லோரும் உயிர்த்தெழும்போது அவரும் உயிர்த்தெழுவார்"

கடந்த 22.09.2011 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்னையின் ஆத்மசாந்திக்காக 22.10.2011 சனிக்கிழமை முற்பகல்10 மணிக்கு பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பண்டத்தரிப்பு வீதி,*
*பெரியவிளான், இளவாலை.*

*பிரிவால் துயருறும்*
*குடும்பத்தினர்.*




# 4ஆம் ஆண்டு நினைவு



அமரர்

**வேலுப்பிள்ளை சண்முகலிங்கம்**

குடும்பத்தின் ஒளி விளக்கே
கூடுவிட்டுப் போனதுவோ
நேற்று போல் – இருக்கு –எம்
நெஞ்சமெல்லாம் –கனத்திருக்கு
நான்காண்டு திதி நாளில்
உங்களை – நினைத்து
வணங்குகின்றோம் ஐயா

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22.08.1928 | 05.11.2007 |

திருநெல்வேலி கிழக்கு
021 320 6334

*அன்பு மனைவி,(இரத்தினக்கா),*
*பிள்ளைகள், வருண்,திரிஷா,*
*(பேரப்பிள்ளைகள் – பிரான்ஸ்)*

**அறை வாடகைக்கு**
திருநெல்வேலிசந்திக்கு அண்மித்து கலாசாலை வீதியில் முன் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. ஆண்கள் விரும்பத்தக்கது
தொடர்பு: 0772517640,
021 222 0568

**கொள்வனவு செய்யப்படும்**
தரமான திராட்சைப்பழம் (1 கிலோ 180/-), இதரை வாழைக்குலை (இடப்பழம் 1 கிலோ 35/-), பழப்பாக்கு (தனியன் 3/-), சின்னவெங்காயம் (தரத் திற்கேற்ற விலை) போன்ற யாழ்ப்பாண உற்பத்திகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அதே நேரம் நுகர்வோர் வியாபாரிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மேற்கூறிய பொருள்களை கொள்வனவுசெய்திட: அ.தங்கராசா அன்சன்ஸ்
60, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 0778995431, 0750434277

**தேவை**
குறித்த தவணையில் கட்டடத்துக்கு சட்டங்கள் அடித்துக்கொடுக்கப்படும்.
தொடர்பு: 0770204990

# மறைந்தும் மறையாத அம்மாவின்

## ஓராம் ஆண்டு நினைவு தினம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06.12.1932 | 01.11.2010 |

**திருமதி செல்லத்துரை செல்லம்மா**

*திதி நாள் 22.10.2011*

எண்ணியே ஏங்குகின்றோம் என்றுமே இதயமாக
கண்ணிலே நீருங் கூட்டிக் கலங்கியே கருத்திேனாடு
மண்ணிலே வாழுங்காலம் மறுபடி எப்போதென்று
மண்ணுமோர் பணியும் விட்டுப் பதைக்கின்றோம்
- வாரீரம்மா

நெல்லியடி,
கரவெட்டி.

மகள் ந. மனோகரி
மருமகன் சி. நற்குணலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக உள்ளூராட்சித் தேர்தலில் முன்னணியில் நிற்கிறது அ.தி.மு.க.

**இறுதி முடிவுகள் இன்று வெளியாகும்**

சென்னை,ஒக்.22

தமிழ் நாட்டில் இரண்டு கட்டமாக நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வாக்குகள் எண்ணும் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின. வாக்குகளின் நிலவரத்தின் அடிப்படையில் அ.தி. மு.க. தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, சேலம், ஈரோடு, திருப்பூர், தூத்துக் குடி, வேலூர் ஆகிய பத்து மாநகராட்சிகளிலும், பெருவாரியான நகராட்சிகள், பேரூராட்சிகளிலும் அ.தி. மு.க.வே முன்னணியில் உள்ளது.

இதில் தூத்துக்குடி, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பெரும்பாலான மாநகராட்சி மேயர் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர்கள் மிகப் பெரிய வித்தியாசத்தில் முன்னணியில் உள் ளனர்.

வாக்குச் சீட்டு முறையில் நடந்த தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளியாக இன்று மாலை வரை ஆகலாம் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 10 மாநகராட்சிகள் அதற்குட் பட்ட 820 தொகுதிகள், 125 நகராட்சிகள், 3697 நகராட்சி தொகுதிகள், 629 பேரூராட்சிகள், 8303 பேரூராட்சி தொகுதிகள், 31 மாவட்ட ஊராட்சிகள், 655 மாவட்ட ஊராட்சி தொகுதிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 6471 ஒன்றிய தொகுதிகள், 12524 கிராம ஊராட்சிகள், 99333 கிராம ஊராட்சிகளுக்கான தொகுதிகள் ஆகிய 1 லட்சத்து 32 ஆயிரத்து 467 பதவிகளுக்கு 2 கட்டமாக தேர்தல்கள் நடைபெற்றன. இந்த பதவிகளுக்கு மாநிலம் முழுவதும் 4 லட்சத்து 11 ஆயிரத்து 767 பேர் போட்டியிட்டனர்.

உள்ளாட்சித் தேர்தலில் இரண்டு கட்டங் களையும் சேர்த்து பதிவான வாக்குகளின் எண்ணிக்கை 78.5 சதவீதமாகும். முதல் கட்டத் தேர்தலில் நாமக்கல் மாவட்டத்தில் அதிகபட்சமாக 85 சதவீதம் வாக்குகள் பதிவாகின. மாநகராட்சிகளைப் பொறுத் தவரை சென்னை குறைவான அளவாக 51.63 சதவீதம் வாக்குகள் மட்டுமே பதிவாயின. வேலூர் மாநகராட்சியில் தான் அதிகபட்சமாக 71 சதவீதம் வாக்குகள் பதிவாகின.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200 தொகுதிகள் மற்றும் மேயர் தேர்தலுக்கான வாக்குஎண்ணிக்கை 18 நிலையங்களில் நடைபெறுகிறது. பச்சையப்பன் கல்லூரி, லயோலா கல்லூரி, ராணி மேரி கல்லூரி உள்ளிட்ட பல்வேறு வாக்கு எண்ணும் நிலையங்களை மாநில தேர்தல் ஆணையர் சோ. அய்யர் சென்னை மாநகராட்சி ஆணையர் கார்த்திகேயன், மாநகர காவல் துறை ஆணையர் திரிபாதி உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்தனர்.

வாக்கு எண்ணும் நிலையங்களுக்குள் செல்போன், மை பேனா உள்ளிட்ட வற்றைக் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (வ)

# நிபுணர் குழுவை தன்னிச்சையாக நியமித்துள்ளது மத்திய அரசு

**கூடங்குழ போராட்டக் குழுத் தலைவர் தெரிவிப்பு**

ராதாபுரம், ஒக்.22

கூடங்குளம் அணுமின்நிலைய பிரச்சினையில் நிபுணர் குழுவை மத்திய அரசு தன்னிச்சையாக நியமித்துள்ளது என்று போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் அணு உலைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடற்கரையோர கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இடிந்தகரை கிராமத்தில் 3 ஆவது கட்ட போராட்டம் நடைபெற்று வருகிறது.

போராட்டத்தின் 3ஆவது நாளான நேற்று முன்தினம் பெருமணல் கிராமத்தில் உண்ணாவிரதம் இருந்தனர். இதில் 1,500 இற்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் திரளாகக் கலந்து கொண்டனர். இவர்களுடன் கூட்டப்புளி மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாமல் கிராம மக்களுடன் உண்ணாவிரதம் இருந்தனர்.

இதற்கிடையே மத்திய அரசு நியமித்த நிபுணர் குழு குறித்து போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் கூறுகையில்:

மத்திய அரசு நியமித்துள்ள வல்லுநர் குழுவில் மத்திய அரசின் பிரதிநிதிகள் மட் டுமே உள்ளனர். இந்தக் குழுவின் முடிவானது அரசுக்கு சாதகமாகத்தான் இருக்குமே தவிர, பொதுமக்களுக்குச் சாதகமாக இருக்காது.

நிபுணர் குழுவில் மத்திய-மாநில அரசின் பிரதிநிதி கள் மற்றும் போராட்டக் குழுவினர் இடம்பெற்று இருக்க வேண்டும். ஆனால் மத்திய அரசு தன்னிச்சையாக குழுவை நியமித்துள்ளது.


எனவே போராட்டக்குழுவினருடன் நிபுணர் குழு குறித்து கலந்து ஆலோசனை செய்வோம். மத்திய அரசின் நிபுணர் குழுவை வரவேற்பதா, வேண்டாமா.என்பது குறித்தும் முடிவு செய்வோம். இவ்வாறு அவர் கூறினார். (வ)

## கூடங்குளம் விவகாரம் நாடாளுமன்றில் விவாதிக்குமாறு பா.ஜ.க. வலியுறுத்து

கூடங்குளம் அணு மின் நிலையம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று பா.ஜ.க. அகில இந்தியச் செயலாளர் முரளி தர்ராவ் தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்:

கூடங்குளம் அணு மின் நிலையம் குறித்த அந்தப் பகுதி மக்களின் அச்சம் நியாயமா னது. மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டியது மத்திய அரசின் கடமையாகும். ஒரு சில காரணங்களைக் கொண்டு எந்த ஒரு திட்டத்தையும் ஒதுக்கி விட முடியாது. அணுமின் நிலை யம் தொடர்பான பிரச்சினையை ஒரு மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகப்பார்க்காமல் தேசிய பிரச்சினையாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (வ)



பெங்களூர் நகர மக்களின் நீண்ட நாள் கனவான மெட்ரோ ரயில் சேவையை ஆரம்பித்து வைத்த பின்னர், மத்திய அமைச்சர் கமல்நாத், முதல்வர் சதானந்த கவுடா, அமைச்சர் அசோக், அனந்தகுமார் எம்.பி. ஆகியோர் இணைந்து கையசைக்கின்றனர். (வ)

## தனித் தெலுங்கானாவை ஆதரிக்கும் அத்வானிக்கு எதிராகப் போராட்டம்

தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கும் பாரதீய ஜனதா மூத்த தலைவர் அத்வானி எதிராக கடலோர ஆந்திரா ராயலசீமா பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

அத்வானி ஊழலுக்கு எதிராக நாடு முழுவதும் ரத யாத்திரை நடத்தி வருகிறார். அண்மையில் அவர் ஐதராபாத்திற்கு யாத்திரை வந்தபோது, தெலுங்கானா தனி மாநிலம் அமைப் போம் என்றார். அவரது இந்த அறிவிப்புக்கு கடலோர ஆந்திரா ராயலசீமா பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்தநிலையில் அங்குள்ள சித்தூர், திருப்பதி, நெல்லூர், குன்டூர், கிருஷ்ணா, விசாகப்பட்டினம், மேற்கு கோதாவரி, கிழக்கு கோதாவரி, கர்னூல், அனந்தபுரம் உட்பட 13 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். திருப்பதி என்.டி.ஆர். சர்க்கிள் அருகே 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் திரண்டு வந்து அத்வா னியின் உருவப் பொம்மையை எரித்தனர். இதுகுறித்து மாணவர்கள் கூறுகையில்: ஆந்திராவைப் பிரிக்கத் துடிக்கும் அத்வானியை இங்கு யாத் திரை வர அனுமதிக்க மாட்டோம்'' - என்றனர்.

இதேவேளை சித்தூர், நெல்லூர், குண்டூர் போன்ற பகுதிகளில் மாண வர்கள் அத்வானிக்கு எதிராக மனிதச் சங்கிலி போராட்டம், பேரணி நடத்தினர். (வ)

## இந்தியாவின் சகல நதிகளையும் இணைக்க கலாம் வலியுறுத்து

இந்தியா வளம்பெற அனைத்து நதிகளையும் இணைக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான அப்துல் கலாம் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தனது 80 ஆவது பிறந்தநாள் விழாவை கோவையை அடுத்த தண்டங்கரை தடுப்பணைப்பகுதியில் கொண்டாடினார்.

இந்த நிகழ்வில் அப்துல் கலாம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விவசாயி களுடன் கலந்துரையாடினார்.

அதன்பின்னர் அங்கு கூடியிருந்த விவசாயிகளிடையே அவர் பேசுகையில்:

நாடு வளம் பெற, சுற்றுச் சூழல் மேம்பட 100 கோடி மரக்கன்று நட்டு வளர்ப்பது முக்கி யம். இதற்கு நாட்டு மக்கள் ஒவ்வொருவரும், உறுதி மொழி ஏற்க வேண்டும். பசும்பு வரி இயக்கம் முதலாம் ஆண்டில் ஒரு லட்சம் மரக்கன்று நட்டு வளர்க்கும் முயற்சியில் இறங்கி இருப்பதற்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். அதற்கு அனைத்துத் தரப்பினரும் ஆவன செய்ய வேண்டும். அனைத்து விவசாயிகளுக்கும் நீர்ப்பாசனத்துக்குத் தேவையான தண்ணீர் கிடைக்க நதிகளை இணைப்பதே சிறந்த வழி ஆகும். இந்தியா வளம் பெற அனைத்து நதிகளையும் இணைக்க வேண்டும் என்று அப்துல் கலாம் கூறினார். (வ)

## புத்தாண்டுக்குள் தெலுங்கானா கனவை நனவாக்க வேண்டும்

**அத்வானி வலியுறுத்து**

நிஜாமாபாத், ஒக். 22

பிரதமர் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் தலைவர் சோனியாவும் உறுதியான முடிவெடுத்து புத்தாண்டுக்குள் தனித் தெலுங்கானா கனவை நனவாக்க வேண்டும் - என்று பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் அத்வானி வேண்டுகோள் விடுத்தார்.

ரதயாத்திரை மேற் கொண்டுள்ள அத்வானி கடந்த புதன்கிழமை ஆந்திர மாநிலம் நிஜாமாபாத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்:

லோக்சபா தேர்தலின்போது தனித்தெலுங்கானா உருவாக் கப்படும் என்று காங்கிரஸ் கட்சி உறுதியளித்துவிட்டு ஆட்சிக்கு வந்ததும் பின்வாங்கி விட்டது. ஆந்திரா [illegible] ளாமல் மத்திய அரசு உள்ளது.

தனித்தெலுங்கானா அமைய வேண்டும் என்ற இந்தப் பகுதி மக்களின் கனவை புத்தாண்டுக்குள் நனவாக்க வேண்டும். இதற்கு பிரதமர் மன்மோகன்சிங்கும், காங்கிரஸ் தலைவர் சோனியாவும் உறுதியான முடிவு எடுத்து 2012 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குள் தனித் தெலுங்கானா உருவாக வழி வகை காண வேண்டும்.

இதுதொடர்பான பிரேரணையை வரவிருக்கும் நாடாளுமன்றக் குளிர் காலக் கூட்டத்தொடரில் கொண்டு வரவேண்டும். தனித் தெலுங்கானா மாநிலம் அமைப் பதற்கான தீர்மானத்தை ஆந்திர சட்டசபையில் நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை. குளிர்காலக் கூட்டத்தொடருக்குள்ளேயே தனித் தெலுங்கானா அமைப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றில் நிறைவேற்ற முடியும்.

## ஹசாரேயின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு அரசு உத்தரவு

சமூக ஆர்வலர் அன்னா ஹஸாரேயின் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துமாறு மகா ராஷ்டிரா மாநில அரசுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

ஹஸாரே குழுவில் இடம்பெற்றுள்ள பிரசாந்த் பூஷன் மற்றும் அர்விந்த் கெஜ்ரிவால் ஆகியோர் அடுத்தடுத்து, வன்முறை தாக்குதலுக்கு உள்ளாகினர். இதையடுத்து, ராலேகான் சித்தியில் மௌன விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஹஸாரேயின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மறு பரிசீலனை செய்யவும், தேவைப்பட்டால் கூடுதல் பொலிஸாரைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தவும் உள்துறை அமைச்சகம் ஆலோசனை வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
22 ஒக்ரோபர் 2011 சனிக்கிழமை

# குடிசைகளை அழித்து கொழும்பை அழகுபடுத்த எதிர்க்கட்சியினரின் முழு ஒத்துழைப்பும் தேவை

## பிரதமர் டி.எம். ஜயரத்ன

கொழும்பு,ஒக்.22

கொழும்பிலுள்ள பெறுமதியான காணிகளை தொடர்ந்தும் குடிசைகளாகவும் சாக்கடைகளாகவும் வைத்திருப்பது முழு நாட்டுக்கும் கேவலம் எனவே குடிசைகளை அழித்து மாடி வீடுகளாக அமைத்து கொழும்பை அழகுபடுத்த வேண்டும். இதற்கு எதிர்க்கட்சியினது ஒத்துழைப்பும் தேவை.

இவ்வாறு பிரதமர் டி.எம். ஜயரத்ன கூறினார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (திருத்தம்) சட்ட மூலம் மற்றும் மதுவரி கட்டளைச் சட்டத்தின் கட்டளை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் மேலும் கூறியவை வருமாறு:-

காலி முகத்திடலில் இருந்த இராணுவத் தலைமையகத்தினால் எமக்குப் பெரும் செலவுகள் எற்பட்டு வந்தன அதனால் அந்த இடத்தைப் பெரும் இலாபம் ஈட்டும் நோக்குடன் இடமாற்றினோம். அதுமட்டுமின்றி நவலோகவுக்கு முன்பாக இருக்கும் காணி சுமார் 25, 30 வருடங்களாக தரிசு நிலமாக காணப்பட்டது. அதையும் வெறுமையாக வைக்காமல் இலாபம் பெறும் நோக்கில் விற்பனை செய்வோம்.

நாம் பொருளாதாரம், தொழில்நுட்பத்துறைகளில் பின் நிற்கிறோம். எனவே நாமும் உலகுடன் ,இணைந்து செயற்பட வேண்டும். சீனா இன்று அமெரிக்காவுக்கு கடன் வழங்கும் நிலைமையில் உள்ளது. சீனா தன்னிடமிருந்த பெறுமதியான காணிகளை சுவிற்சர்லாந்திற்கு விற்பனை செய்து அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொண்டது. எனவே நாமும் மாறி வரும் உலகுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும்.

அதை விடுத்து இன்று தம்மன பகுதியில் இலை குழைகளை அணிந்து கொண்டு வாழும் வேடர்களைப் போல மாற வேண்டுமா?

முன்பு நாடாளுமன்றுக்கு வருகை தரும் உறுப்பினர்களிடம் புகை பிடிக்கும் பழக்கம் இருந்தது. அன்றிருந்த எம்.பிக்கள் நாடாளுமன்றக் கதவைத் திறந்து வெளியே சென்று புகைத்து விட்டு உள்ளே வருவார்கள். ஆனால் இன்றைய எம்.பிக்கள் அப்படியல்ல. அனைத்தும் மாற்றமடைந்துள்ளது.

இந்த நிலையில் சமூகத்தில் காணப்படும் மது, புகைப்பிடித்தல் கலாசாரத்தை மாற்றியமைக்க மதகுருமார்களின் ஒத்துழைப்பு வேண்டும். அவர்கள் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தேர்தலில் வாக்குறுதிகள் அளிப்பது சகஜமாகும்.

வாக்குறுதி அளிக்காவிட்டால் அது தேர்தலாகாது ஆனால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற முடியாது எனினும் மஹிந்த சிந்தனைத் திட்டத்தை அப்படி எண்ணக் கூடாது அதனை நூறு வீதம் நிறைவேற்ற முயற்சி செய்து வருகிறோம்.

கொழும்பிலுள்ள அனைத்துக் குடிசை வீடுகளும் அழிக்கப்பட வேண்டும் இவற்றுக்கு எதிர்கட்சிகளது ஒத்துழைப்பும் எமக்கு வேண்டும். கொழும்பு நகரம் அவலட்சணமாக காட்சியளித்தால், வெளிநாட்டவர்கள் இந்த நகரத்தை பார்வையிட்டு நாடு திரும்பும் போது மிக கேவலமாகவே விமர்சிப்பர். இது எமது நாட்டுக்கே கேவலம். அதனால் கொழும்பைத் தொடர்ந்தும் அப்படியே வைத்திருக்காமல் மாடி வீடுகளை அமைத்து நகரை அழகுபடுத்த எம்முடன் இணையுங்கள் என்றார். (ஒ-சி)

# தனியார் பஸ்களை நாடிச்செல்லும் பாடசாலை மாணவர்

தென்மராட்சி, ஒக்.22

எழுதுமட்டுவாழ் தெற்கில் அண்மையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு தனியார் பயணிகள் வாகனங்களை நாடவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

769 மார்க்க பாடசாலைச் சேவை தற்போது மிருசுவில் உசன் கந்தசாமி கோவிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் செல்கிறது.

உசன் சந்தியிலிருந்து இரண்டரை கிலோ மீற்றர் தூரத்தில் எழுதுமட்டுவாழ் சந்திஉள்ளதால் பாடசாலைச் சேவையை காலையில் எழுதுமட்டுவாழ் சந்தியிலிருந்து ஆரம்பிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மாணவர் தரப்பில் கோரப்பட்டுள்ளது. (ம-207)

# ரயில் விபத்து விசாரணை அறிக்கை 27 இல் சமர்ப்பிப்பு

கடந்த மாதம் 17 ஆம் திகதி பிரெஞ்சுப் பிரஜையொருவர் உட்பட மூவரைப் பலியாக்கியதுடன் மேலும் 15 பேருக்கு காயம் ஏற்படுத்திய அளவ்வ ரயில் விபத்து சம்பந்தமாக விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை எதிர்வரும் 27 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் நிமல் திசாநாயக்க, ஆர்தர் சீ.கிளார்க், மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஜகத் பனாவெல்ல போக்குவரத்து அமைச்சின் பாதுகாப்பு ஆலோசகரும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான சரத் பெரேரா ஆகியோர் அடங்கிய குழுவே விசாரணைகளை மேற்கொண்டது எனவும் விசாரணை சுமார் ஒரு மாத காலம் நீடித்தது எனவும் ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்தை நேரில் கண்ட சாட்சிகள் உட்படப் பல்வேறு தரப்பினரிடமிருந்து பெற்ற வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதென முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சரத் பெரேரா தெரிவித்தள்ளார். (ச-5)

# அமைச்சரவை தீர்மானங்கள்

* குருநாகலில் மருந்துப்பொருள்களை உற்பத்தி செய்வதற்கான கைத்தொழில்பேட்டை ஒன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 48 ஏக்கர் நிலத்தில் நிறுவப்படவுள்ள இந்தக் கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்ய பத்து மருந்துப் பொருள்கள் உற்பத்தி நிறுவனங்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளன என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

* மாலைதீவு நாட்டுடன் சர்வதேச உறவுகளை ஏற்படுத்துவதற்கான வசதிகளைச் செய்வதற்கு வெளிவிவகார அமைச்சுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

* மாவட்ட நிதி வளங்களைப் பலப்படுத்தி அரசு அபிவிருத்தித் திட்டங்களைத் துரிதபடுத்தும் நோக்கில் மாவட்ட செயலாளர்களின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கு அமைச்சரவை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

* விசர்நாய்க் கடிக்கான மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை சுகாதார அமைச்சுக்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான கேள்வி அறிவித்தலை சுகாதார அமைச்சு விடுக்கும்.

* இலங்கை முழுவதும் 210 இரும்புப் பாலங்களை அமைப்பதற்கு அமைச்சரவை ஜனாதிபதிக்கு அனுமதி வழங்கியது.

இந்தப் பாலங்களை அமைப்பதற்கான யோசனையை ஜனாதிபதி நிதி அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்த அந்த யோசனைகளுக்கே அனுமதி வழங்கப்பட்டது.

இதற்காக எச்.எஸ். பி.சி. வங்கியிடமிருந்து 28,220. 757 பவுண்களும், மக்கள் வங்கியிடமிருந்து 6,779.243 பவுண்களும் கடனாகப் பெறப்படும்.

* கல்வித்துறையில் பல அபிவிருத்திகளை மேற்கொள்ளும் நோக்கில் உலக வங்கியிடமிருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெறுவதற்கு அமைச்சரவை ஜனாதிபதிக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 4 ஆயிரம் ஆரம்ப பாடசாலைகள் அமைக்கப்படும். 320 இரண்டாம் நிலை பாடசாலைகளும், 1,200 பாலர் பாடசாலைகளும் 2012 இல் அபிவிருத்தி செய்யப்படும்.

ஏலவிற்பனை அறிவித்தல்

தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 30.09.2010 அன்று அல்லது அதற்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏல விற்பனைத் திகதி:
05.11.2011 [சனிக்கிழமை] காலை 8.30 மணி.

| கிளையின் பெயர்: | ஏல விற்பனை நடைபெறும் இடம்: |
| --- | --- |
| யாழ்ப்பாணம்,<br>யாழ்ப்பாணம், 2ஆம் கிளை,<br>சாவகச்சேரி,<br>சுன்னாகம்,<br>மானிப்பாய்,<br>காரைநகர்,<br>திருநெல்வேலி<br>சங்கானை,<br>ஊர்காவற்றுறை | யாழ்ப்பாண கிளை<br>இல. 496, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே.இல.: 021 222 2696 |

ஏல விற்பனையை இரத்துச் செய்யும் / ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

NSB National Savings Bank
உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,கொழும்பு-03.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டாரா?






சிர்டி, ஒக். 22

**கடந்த 1969ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 42 ஆண்டுகள் வரையில் லிபியாவின் ஜனாதிபதியாகப் பதவி வகித்த கடாபி புரட்சிப்படையினரால் கொடூரமாகச் சுட்டுக்கொல்லப்பட்டார்.**

**பதுங்குகுழியில் பதுங்கியிருந்த இவரை உயிருடன் பிடித்த கிளர்ச்சியாளர்கள், பின்னர் கொடூரமாகக் கொலை செய்தனர் எனத் தெரிகிறது. இதற்கு ஆதாரமாக சில வீடியோ காட்சிகள் வெளியிடப்பட்டுள்ளன.**

வீடியோ காட்சி வெளியீடு:

கடாபி தன்னுடைய சொந்த ஊரில் தங்கியிருக்கிறார் என நேசப்படைகளுக்குத் தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் சிர்டி நகரில் தாக்குதல் நடத்திய நேசப்படையினரின் ஒரு பகுதியினர் கடாபியைத் தேடும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

அப்போது நகரின் சாக்கடை குழாய் ஒன்றில் கடாபி பதுங்கியிருப்பதைக் கண்டறிந்தனர்.

தொடர்ந்து அவர் சாக்கடை குழாயிலிருந்து வெளியே அழைத்து வரப்பட்டார். அப்போது அவர் காக்கி உடை அணிந்திருந்தார்.

புரட்சிப் படையினர் அவரை சாக்கடை குழாயிலிருந்து வெளியே அழைத்து வந்த போது சரணடைந்து விடுவதாகவும் சுட்டுக் கொல்ல வேண்டாம் என கெஞ்சுவதும் வீடியோவில் பதிவானது.

கடாபியின் வேண்டுகோளை ஏற்க மறுத்த புரட்சிக்காரர்கள் அவர் மீது தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் நிலை குலைந்த அவர் கீழே விழுந்தார். இதில் பலத்த காயமடைந்த அவரை வைத்தியசாலைக்கு அழைத்து சென்றனர். ஆனால் வழியிலேயே அவரது உயிர் பிரிந்தது.

எப்படி இறந்தார்?

கடாபி பிடிபட்டபோது அவருடைய இடது தலைப்புறத்தில் காயம் இருந்ததும் அதிலிருந்து இரத்தம் வழிவதும் அப்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது. அவர் நடந்து செல்லும் அளவுக்கு இருந்ததாகவும் வீடியோ காட்சிகள் கூறுகின்றன.

அப்படி இருக்கையில் அவர் எப்படி இறந்தார்? அவர் பிடிபட்டதும் தப்பி ஓட முயன்றாரா அல்லது கிளர்ச்சியாளர்கள் அவரைச் சுட்டுக் கொன்றனரா? அவருடைய உடலை பிரேத பரிசோதனை செய்த வைத்தியர்கள், கடாபியின் தலையில் குண்டு காயம் இருந்தது எனக் கூறுகின்றனர்.

ஆனால், அந்த காயத்தால்தான் அவர் மரணமடைந்தாரா அல்லது அவரை கிளர்ச்சியாளர்கள் கொடூரமாக அடித்துக் கொலை செய்த பின்னர் தலையில் சுடப்பட்டாரா என்பது தெளிவாகவில்லை.

குழப்ப நிலை

ஜனாதிபதி கடாபியை உயிருடன் பிடிபட்டபோது அவருடன் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் இருந்தனர் என்றும், அதுமட்டுமல்லாமல் அவருக்கு நெருக்கமானவர்களும் உடன் இருந்தனர் என்றும் பல்வேறு தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

அவருடன் இருந்தவர்கள் குறித்து குழப்ப நிலை நீடித்து வருகிறது. மேலும் கடாபியுடன் அவரது ஆலோசகர் அகமது இப்ராஹிம், உடனிருந்தார் என புரட்சிப்படையினர் தெரிவித்துள்ளனர். மேலும் முன்னாள் இராணுவ அமைச்சர் அபூபக்கர் யூனிஸ் கடாபி பதுங்கியிருந்த பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டார் எனக் கூறப்பட்டது. (ந)

# கடும் காயங்களுடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றவேளை கடாபி மரணம்

சிர்டி, ஒக். 22

கடாபியின் சொந்த ஊரான சிர்டியில் வியாழக்கிழமை நடந்த கடும் சண்டையில் கடாபியின் அமைச்சரவையில் இராணுவ அமைச்சராகவிருந்த அபூபக்கர் யூனுஸ் பலியானார். அதைத்தொடர்ந்து, பலத்த காயங்களுடன் கடாபி பிடிபட்டார்.

உடனடியாக அவர் ஒரு வாகனத்தில் அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும், வழியிலேயே அவர் மரணமடைந்தார் எனக் கூறப்படுகிறது.



பிடிபட்டபோது கடாபி காக்கி நிறச் சீருடை அணிந்திருந்தார். அவரது இரண்டு கால்களும் பலத்த காயமடைந்திருந்தன என கிளர்ச்சிப் படையினர் தெரிவித்தனர். இந்தச் சண்டையில் கடாபியின் உடலில் ஏராளமான குண்டுகள் பாய்ந்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

சிர்டியில் நடந்த சண்டையில் கிளர்ச்சியாளர்கள் தரப்பிலும் ஏராளமானவர்கள் பலியாகியுள்ளனர்.

கடாபி கொல்லப்பட்டதும் அவரது ஆதரவாளர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். அவர்களை வீடு வீடாகத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்கள் கொண்டாட்டம்

கடாபி பலியான செய்தியைக் கேட்டு கிளர்ச்சியாளர்கள் நாடு முழுவதும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடாபியின் பச்சை நிறக் கொடியை எரித்து, புதிய தேசியக் கொடியை விளக்குக் கம்பங்களில் பறக்க விட்டுள்ளனர். வாகனங்களில் செல்லும் அனைவரும் வெற்றிச் சின்னத்தை காட்டி கோஷ மிட்டவாறு சென்றனர்.

கடாபி படையுடன் சண்டையிட்ட கிளர்ச்சிப் படையினர் தங்கள் துப்பாக்கியில் குண்டுகள் தீரும் வரை வானத்தை நோக்கிச் சுட்டு தங்கள் வெற்றியின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தலைநகர் திரிபோலியில் மக்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சியைக் கொண்டாடி வருகின்றனர்.

கிளர்ச்சிப் படையின் சார்பில் தற்போது இடைக்கால பிரதமராக மஹ்மூத் ஜிப்ரில் உள்ளார். நாடு விடுதலையடைந்து விட்டது என இடைக்கால சபையின் உயரதிகாரி அப்துல் ஜலீல் தெரிவித்துள்ளார். எட்டு மாதங்களுக்குள் லிபியாவில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் எனவும் ஜலீல் குறிப்பிட்டுள்ளார். (ந)

# கடாபியின் வரலாறு

லிபியாவில் 42 ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்த கடாபி ஓர் சர்வாதிகாரி. இவரது முழுப்பெயர் மும்மர் அபு மின்யர் அல் கடாபி. 1942, ஜூன் 7இல், இத்தாலியின் கட்டுப்பாட்டில் லிபியா இருந்தபோது பிறந்தார்.

இவரது பாடசாலைப் பருவத்தில், உலகில் இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராகப் புரட்சி நடைபெற்று வந்தது. 1952இல் எகிப்து புரட்சியின்போது காமல் அப்துல் நாசர் என்பவர் ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றினார். இவரது போராட்டத்தால் கடாபி ஈர்க்கப்பட்டார். 1956இல் இத்தாலிக்கு எதிரான போராட்டத்தில் கடாபி பங்கேற்றார். 1961இல் பெங்காசியிலுள்ள லிபிய இராணுவ அகடமியில் சேர்ந்தார். 1966இல் படிப்பை முடித்தார். மேற்படிப்பை ஐரோப்பியாவில் முடித்தார். பின், லிபிய இராணுவத்தில் சேர்ந்தார்.

1969, செப்டெம்பர் 1இல் இளம் இராணுவ அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை தனது தலைமையில் திரட்டினார். அப்போது லிபிய மன்னராக இருந்த இத்ரிஸ், மருத்துவ சிகிச்சைக்காகத் துருக்கியில் இருந்தார். அவருக்குப் பதிலாக அவரது மருமகன் பொறுப்பில் இருந்தார். கடாபி தலைமையிலான இராணுவக் குழு, அவரை வீட்டுக்காவலில் அடைத்து ஆட்சியை பிடித்தது. கடாபி, லிபியாவின் முதல் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். பதவியேற்றவுடன், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் இராணுவச் சிப்பாய்களுக்கு லிபியாவில் தடைவிதித்தார்.

1970இல், இத்தாலியிலிருந்து குடியேறியவர்களை கடாபி வெளியேற்றினார். 1972இல், இஸ்ரேலுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்கு, பலஸ்தீனத்துக்கு நிதியையும், இராணுவ உதவியையும் வழங்கினார். 1995இல் இஸ்ரேலிய - பலஸ்தீன அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, லிபியாவில் இருந்த 30 ஆயிரம் பலஸ்தீனியர்களை அவர்கள் நாட்டுக்கே திருப்பினார். சீன உதவியுடன் அணு ஆயுதங்களையும், இராணுவ ஆயுதங்களையும் பெருக்கத் திட்டமிட்டார். 2011, பெப்ரவரி 17இல் கடாபியை ஜனாதிபதி பதவியிலிருந்து விலக வலியுறுத்தி இலட்சக்கணக்கான மக்கள் போராட்டத்தில் இறங்கினர்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினரும், லிபிய இராணுவத்துக்கு எதிராக குண்டு மழை பொழிந்தனர். இதில் கடாபியின் ஏழாவது புதல்வர் சமீபத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார். ஆறு மாதங்களாக தொடர்ந்த நேட்டோ படைத் தாக்குதலில் கடாபி சுட்டுக்கொல்லப்பட்டார். இவருக்கு இரண்டு மனைவிகள், ஏழு புதல்வர்கள், இரண்டு புதல்விகள் உள்ளனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னொளியில் கரப்பந்தாட்ட இறுதியாட்டம்

# ஆவரங்கால் மத்தி - இந்து இளைஞர் மோதல்



வலி.வடக்கு, ஒக்.22

மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே இரண்டாவது ஆண்டாக நடத்தும் அமரர் ஜெகநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. மூன்றாம் இடத்துக்கான போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (த-86)

# தாச்சிப் போட்டியில் கழகங்கள் அதிக ஆர்வம்

கைதடி, ஒக்.22

தென்மராட்சி மேற்குப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக பாரம்பரிய விளையாட்டான தாச்சி விளையாட்டில் பல கழகங்கள் ஆர்வமாக ஈடுபட்டு வருவதுடன் போட்டிகளையும் நடத்தி வருவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

முன்னைய காலங்களில் இந்த விளையாட்டு இந்தப் பகுதியில் பல கழகங்களினாலும் விளையாடப்பட்டு வந்த போதும் நாட்டின் சூழ்நிலை மற்றும் கிரிக்கெட்டின் மீதான ஆர்வம் காரணமாக அது குறைவடைந்து வந்தது.

கடந்த சில மாதங்களாக கைதடி, நாவற்குழி, மறவன்புலோ மற்றும் மட்டுவில் ஆகிய பகுதிகளில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் இந்த விளையாட்டை மீண்டும் ஆர்வத்துடன் விளையாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கைதடிப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு கழகங்கள் அண்மையில் மின்னொளியில் இரவு நேரத்தில் இந்தப் போட்டியை நடத்தியிருந்தன.

இந்தப் போட்டியில் பல கழகங்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியதுடன் ஆயிரக்கணக்கான தாச்சி ரசிகர்கள் இந்தப் போட்டியை இரசித்ததனையும் அவதானிக்க முடிந்தது.

தற்போது தாச்சி விளையாட்டை முன்னேற்றும் நோக்குடன் யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கமும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-288)

# சென். ஜோன்ஸுக்கு இரு பதக்கம்



யாழ்ப்பாணம், ஒக்.22

தேசிய மட்டத்தில் இடம் பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் இருவர் பதக்கம் வென்றுள்ளனர்.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் பி.பானுப்பிரியன் 41:04 மீற்றர் தூரத்தை எறிந்து வெண்கலப்பதக்கத்தைப் பெற்றார்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் ஜி. ஏபிரகாம் அனோஷன் 47.17 மீற்றர் தூரத்தை எறிந்து பதக்கத்தைப் பெற்றார்.

இவர்கள் இருவருக்கும் வர்ண விருது வழங்கப்பட்டது.

பயிற்றுநர் தி.அஜந்தன், கல்லூரி அதிபர் அருட்திரு ஞானப் பொன்ராஜா ஆகியோருடன் வீரர்கள் காணப்படுகின்றனர்.

(த-23)

# "சுப்பர் சிக்ஸ்ரீன்" கிரிக்கெட் கொழும்பில் இன்று ஆரம்பம்

வலி-வடக்கு, ஒக்.22

கொழும்பு சாஹிராக் கல்லூரி அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் ''சுப்பர் சிக்ஸ்ரீன்'' கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை கொழும்பு சாஹிராக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

07 பேர் பங்குபற்றும் இந்தப் போட்டியில் தென்னிந்தியாவில் இருந்து வரும் பாடசாலை அணியுடன் வடமாகாணத்தைச் சேர்ந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி, மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி ஆகியன உட்பட 16 பாடசாலைகள் கலந்து கொள்ள வுள்ளன.

மானிப்பாய் இந்துக்கல்லூரி,மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணிகள் நேற்றுமுன்தினம் கொழும்பை சென்றடைந்துள்ளன.

19 வயதுப் பிரிவினருக்கு இடையே இந்தப் போட்டி நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-86)

# மன்னாரில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

மன்னார் சின்னக்கடை கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், போட்டிகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(த-23)

# கலைமதி, சென்.சேவியர் அணிகள் இறுதியாட்டத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக்.22

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம், சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகம், ஆசியன வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றன.

முதலில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் நெடிய காடு இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துக் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் கலைமளதி விளையாட்டுக்கழக அணி 5:0 கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

(த-23)

# யாழ். மாவட்ட அணி வெற்றி

வலி.வடக்கு, ஒக்.22

இலங்கைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அகில இலங்கை ரீதியில் இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையே மாவட்ட ரீதியில் நடத்தும் கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட ஆண்கள் அணி வெற்றிபெற்றுள்ளது.

கொழும்பு மஹரகம தேசிய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி நிறைவடையும் வரை யாழ். மாவட்ட அணியின் கைகளே மைதானத்தில் மேலோங்கிக் காணப்பட்டன.

யாழ். மாவட்ட அணி மிகவும் இலகுவாக வெற்றி வாய்ப்பைத் தனதாக்கி 57:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் திருகோணமலை மாவட்ட அணியை வெற்றி கொண்டு காலிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதிபெற்றது.

(த-86)

# கிரிக்கெட் போட்டி

தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையில் 523 ஆவது படையணியினரால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.12.00 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டுமைதானத்தில் நடைபெறும்.

இந்தப்போட்டிக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் எம். ஹத்துருசிங்க கலந்த கொள்வார்.

(த-207)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதும். (த-23)

# இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.22

மன்னார் உப்புக்குளம் அல்பத்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் 10 ஓவர்கள் கொண்ட மென்பந்துச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை உப்புக்குளம் அல்பத்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் உப்புக்குளம் அல்பத்தா விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து தாழ்வுபாடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிரதம விருந்தினராகக் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் கலந்து கொள்வார்.

(த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திரிமன்னே ஆட்டமிழக்கையில்


சதமடித்த சங்கா


டில்ஷான் ஆட்டமிழக்கையில்

# தோல்வியைத் தவிர்க்குமா இலங்கை?

இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி ஆட்ட நேர முடிவில் 298 ஓட்டங்களுக்கு 5 இலக்கினை பறிகொடுத்துள்ளது. சங்ககார ஆட்டமிழக்காமல் 161 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். முதலாவது டெஸ்ட் ஆட்டம் பெரும்பாலும் சமநிலையை நோக்கியே சென்றுகொண்டுள்ளது. இலங்கை அணி 16 ஓட்டங்கள் பின்தங்கியுள்ள போதும் கைவசம் 5 இலக்குகளை வைத்துக் கொண்டுள்ளது.

முன்னதாகத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி தனது முதலாவது இன்னிங்ஸிற்காக 511 ஓட்டங்களை 6 இலக்குகளை மாத்திரம் இழந்து பெற்றுக் கொண்டது. இதன் மூலம் இலங்கை அணியைவிட 314 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் அபுதாபியில் 18 ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஷ்பா உல் ஹக் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கடும் போராட்டத்தின் மூலம் 197 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மஹேல ஜெயவர்தன 28 ஓட்டங்களையும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பரண விதாரன 37, திரிமன்னே 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் மித வேகப் பந்து வீச்சாளரான யுனைட் கான் 5 இலக்குகளைச் சரித்தார். உமர்குல், சயிட் அஜ்மல் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணி ரபீக் உமரின் அசத்தலான இரட்டைச் சதத்தின் உதவியுடன் 511 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் சார்பில் ரபீக் உமர் 236, மொஹமட் ஹபீஸ் 75, அஷார் அலி 70 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

இறுதியில் 174.4 பந்து பரிமாற்றங்களில் 511 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்த நிலையில் தமது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொள்வதாக பாகிஸ்தான் அணி அறிவித்தது. பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் ஹேரத் 3 இலக்குகளையும், வெலகெதர 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இதன் மூலம் இலங்கை தனது முதலாவது இன்னிங்ஸிற்காக பெற்றுக் கொண்ட ஓட்ட எண்ணிக்கையை விட 314 ஓட்டங்களால் பாகிஸ்தான் முன்னிலை பெற்றது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை நேற்று முன்தினம் தொடங்கிய இலங்கை அணிக்கு அதிர்ச்சியளித்தது பாகிஸ்தான். ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய பரணவிதாரன இரண்டாவது இன்னிங்ஸின் முதலாவது பந்தை உமர் குல் வீச ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து வெளியேறினார். இருப்பினும் தொடர்ந்து நுழைந்த சங்ககார மற்றும் திரிமன்னே இருவரும் நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவு வரை சிறப்பாக ஆடினர். நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி 11 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 47 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினை இழந்துள்ளது. திரிமன்னே 20, சங்ககார 27 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர்.

நேற்றைய நாள் ஆட்டம் ஆரம்பமாகியதிலிருந்து இலங்கை நிதானமாக துடுப்பெடுத்தாடியது. மதியபோசனம் வரை திரிமன்னே, சங்ககார இருவரும் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். இரண்டாவது இலக்குக்காக 153 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் திரிமன்னே 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் இலங்கையின் சரிவு மீண்டும் ஆரம்பமானது. மஹேல ஜெயவர்தன 4, டில்ஷான் 9, மத்தியூஸ் 22 என்று சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினர். இருப்பினும் ஒரு முனையில் தனித்து நின்று சங்ககார அபாரமாக துடுப்பெடுத்தாடினார். இறுதியில் நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸிற்காக 5 இலக்குகளை இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. சங்ககார 161 ஓட்டங்களுடனும், பிரசன்ன ஜெயவர்தன 25 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் பெற்ற ஓட்ட எண்ணிக்கையை விட இலங்கை 16 ஓட்டங்களால் பின் தங்கியுள்ளது. இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும். (15)

# பலமான நிலையில் பங்களாதேஷ்

*பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது நாள் முடிவில் பங்களாதேஷ் அணி 4 இலக்குகளை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.*

*பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி 'ரி-20', ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடியது. 'ரி-20' ஆட்டத்தை பங்களாதேஷ் அணியும், ஒரு நாள் ஆட்டத்தை மேற்கிந்தியத்தீவுகள் அணியும் வெற்றி பெற்ற நிலையிலேயே முதலாவது டெஸ்ட் ஆட்டம் சிட்டகொங்கில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.*

*ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரமிம் இக்பால், இம்ரு கைல்ஸ் களமிறங்கினர். இம்ரு கைல்ஸ் 10 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஆடிய ரமிம் இக்பால் 52 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். ஷாரியா நவீஸ் 21 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் காயம் காரணமாக இடைநடுவில் வெளியேறினார். ரகிபுல் ஹசன் 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த அணித்தலைவர் ரகிம் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். அவருடன் இணைந்து சகிப் அல் ஹசன் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர். 79 ஓட்டங்களை 4 ஆவது இலக்குக்காக பகிர்ந்த நிலையில் சகிப் அல் ஹசன் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.*

*நேற்றைய நாள் ஆட்ட நேர முடிவில் பங்களாதேஷ் அணி 4 இலக்குகளை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அணித்தலைவர் ரகிம் 68, நயீம் இஸ்லாம் 8 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளனர்.*

*பந்து வீச்சில் சாமுவேல்ஸ் 2 இலக்குகளை கைப்பற்றியுள்ளார். இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாளாகும். (15)*



# நியூசிலாந்து அபார வெற்றி

சிம்பாப்வேக்கு எதிரான முதல் ஒருநாள் ஆட்டத்தில் 9 இலக்குகள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்தின் தொடக்க ஆட்டக்காரர் ராப் நிக்கோல் அறிமுக ஆட்டத்திலேயே சதமடித்து ஆட்டநாயகன் விருதைத் தட்டிச் சென்றார். இதே போல் அந்த அணியின் மற்றொரு அறிமுக வீரர் பிரேஸ்வெல் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

சிம்பாப்வேயின் ஹ்ராரே நகரில் வியாழக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 50 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகள் இழப்புக்கு 231 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் ஆடிய நியூசிலாந்து 43.3 பந்து பரிமாற்றங்களில் ஒரு இலக்கு இழப்புக்கு 232 ஓட்டங்கள் எடுத்து வெற்றி கண்டது.



முன்னதாக சிம்பாப்வே அணியில் முன்னணி வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினாலும், அணித்தலைவர் ரெய்லர் ஆட்டமிழக்காமல் 5 ஆறு ஓட்டங்கள், 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 128 ஓட்டங்கள் குவித்தார். இதேபோல் பின்வரிசையில் முடிஸ்வா ஒரு ஆறு ஓட்டம், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 69 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் அந்த அணி 6 இலக்குகள் இழப்புக்கு 231 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் ஆடிய நியூசிலாந்து அணியில் நிகோலும், குப்திலும் முதல் இலக்குக்கு 153 ஓட்டங்கள் சேர்த்தனர். குப்தில் 74 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதையடுத்து மெக்கலம் களம் புகுந்தார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய அறிமுக வீரரான நிகோல் சதம் கண்டார். இறுதியில் அந்த அணி 43.3 பந்து பரிமாற்றங்களில் 1 இலக்கு இழப்புக்கு 232 ஓட்டங்கள் குவித்து வெற்றி பெற்றது. நிகோல் 108 ஓட்டங்களுடனும், மெக்கலம் 39 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது நியூசிலாந்து. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கி ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கல்வி ஊக்குவிப்புத் திட்ட விழா

யாழ்ப்பாணம், ஒக்.22

வடமாகாண வங்கி ஊழியர்களின துும், வங்கி ஓய்வூதியர்களினதும் பிள்ளைகளுக்கான ஊக்குவிப்பு பரிசில் திட்ட கௌரவிப்பு விழாவை வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரி சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கு வசதியாக தரம் 5 புலமைப் பரீட்சையில் 2010, 2011 ஆண்டுகளில் சித்தியெய்திய மாணவர்கள், ஜீ.சீ.ஈ சாரணதரப் பரீட்சையில் 2010 ஆம் ஆண்டில் ஒரே அமர்வில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள், ஜீ.சீ.ஈ உயர்தரம் பரீட்சையில் 2010 ஆம் ஆண்டில் ஒரே அமர்வில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர் கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

மேலும் வங்கியாளர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பட்ட வங்கியியல் பட்டப் படிப்பு பரீட்சையில் சித்தி அடைந்த வங்கி உத்தியோகத்தர்களும் கௌரவிக்கப்படவுள்ளதால் மேற்கூறப்பட்ட மாணவர்கள் மற்றும் வங்கியாளர்களில் தகுதியுடையோர் தமது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்துடன், அத்தாட்சிப்படுத்திய பெறுபேற்றுப் பிரதிகளுடன் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ஒ-323)

# ஈழத்தமிழர் ஐவருக்கு நெதர்லாந்தில் சிறை

நெதர்லாந்தில் டென்ஹாக் நகரத்தில் விடுதலைப்புலிச் சந்தேகநபர்களாகக் கூறப்பட்ட ஈழத்தமிழர் ஐந்து பேருக்கு நெதர்லாந்து நீதிமன்றம் ஐந்து தொடக்கம் இரண்டு வருடங்கள்வரை சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

நெதர்லாந்தில் வாழும் புலம் பெயர் தமிழர்களை மிரட்டிப் பணம் பறித்ததாகவும், சிறார்களுக்குக் குண்டுகளையும், கைக்குண்டுகளையும் வரையக் கற்றுக் கொடுத்து அவர்களை மூளை சலவை செய்ததாகவும் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

ஆனால் கைதானவர்கள் சார்பில் வாதாடிய வழக்கறிஞர்கள் இந்த ஐந்து பேரும் மிகக் கொடூரமான இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசுக்கு எதிரான விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று வாதிட்டனர்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி இவர்கள் மீது பயங்கவாதக் குற்றங்களுக்காகத் தண்டனை விதிக்கவில்லை. ஆனால் கிரிமினல் அமைப்புடன் தொடர்பு கொண்டிருந்தமைக்காக தண்டனை வழங்குவதாகக் கூறினார்.

இவர்கள் தீவிரவாத அமைப்பு இல்லை எனவும் நெதர்லாந்தில் தமிழர் விளையாட்டுப் போட்டிகள், பாடசாலைகள் மற்றும் தேசிய நினைவு எழுச்சி நாள்கள் ஆகிய அனைத்து நிகழ்வுகளிலும் தடையின்றி கலந்து கொள்ளலாம் எனவும் கூறப்பட்டது,

நேற்றைய தீர்ப்பை நீக்குமாறு கோரி இவர்களின் சட்டத்தரணிகள் மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு குறித்து நெதர்லாந்தின் அரசு வழக்குத் தொடுநர் அலுவலகத்தின் அதிகாரியான விம் தி பிரிம் தகவல் தருகையில் தண்டிக்கப்பட்டவர்களில் ஒருவர் 132 மில்லியன் யூரோக்கள் வரை உலகெங்கும் நிதி சேகரித்ததாகத் தெரிவித்துள்ளார்.2003 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு கைது செய்யப்படும் வரை இவர் கள் இவ்வாறான நிதி சேகரிப்பில் ஈடுபட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(10)

# இழக்க இனி எதுவுமே இல்லை வடக்கிலுள்ள மீனவர்கள் கதறல்

## இந்திய மீனவர் ஆக்கிரமிப்பை நிறுத்தக்கோரி அவர்கள் மனு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னங்கள் அழிக்கப்படுவதுடன் மீனவர்களின் வாழ்வாதாரமும் அழிக்கப்படுகிறது என்று கதறும் மீனவர்கள் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பால் தம்மால் வடமராட்சிக் கடலில் தொழிலே செய்ய முடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்தனர்.

''இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பால் இனிமேல் நாம் இழப்பதற்கு உயிர் மட்டும்தான் எஞ்சியிருக்கிறது'' என்று தமது மனுவில் மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினை குறித்து இரு நாட்டு அதிகாரிகளும் இடைக்கிடை கலந்துரையாடல் களை நடத்தியபோதும் தீர்வு ஏதும் கிடைக் கவில்லை என்றும் மீனவர்கள் கவலை தெரி விக்கின்றனர். அதேபோன்று மீனவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட சந்திப்புகளாலும்கூட எந்தப் பயனும் ஏற்படவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

''2004ஆம் ஆண்டு கொழும்பில் இந்திய - இலங்கை மீனவர்கள் இடையே பேச்சு நடந்தது. 2010இல் இந்தியா சென்று கரையோரமுள்ள இந்திய மீனவர்களைச் சந்தித்துப் பேசினோம். பின்னர் பறங்கிமலையில் மூன்று நாள்கள் மாநாடு நடத்தினோம். இறுதியில் இரு நாட்டு அரசுகளுக்கும் மனுக்கள் வழங்கினோம். 2011இல் கடல்தொழில் அமைச்சின் அலுவலகத்தில் இந்திய மீனவர்களைச் சந்தித்துப் பேசினோம். இரு அரசுகளும் பேசி நல்ல முடிவைத் தாருங்கள் என்று கேட்டோம். எதனாலும் பயன் ஏதும் கிட்டவில்லை'' என்று இந்தியத் துணைத் தூதரிடம் வழங்கப்பட்ட மனுவில் மீனவர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகலிங்கம் பொன்னம்மா



கதிர்காம கோயிலடி,வதிரி,கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் பொன்னம்மா நேற்று முன்தினம் (20.10.2011) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- நாகம்மா தம்பதியரின் மருமகளும் Dr.ஆ.நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராசா, நாகம்மா மற்றும் கந்தசாமி,சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிருந்தாதேவி , ஓம்காரரூபன்(அபுதாபி), கமலரூபன்(ஜேர்மனி), கெங்காதேவி,யமுனாதேவி ஆகியோரின் அன்புத்தாயும் மிதிலாவின் அன்புமாமியும் மயூரா,மகிமா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.10.2011) வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிருந்தாவனம்,
கதிர்காம கோயிலடி,
வதிரி,கரவெட்டி

தகவல்:
Dr.ஆ.நாகலிங்கம் (கணவர்)

## சிமியோன் சின்னப்பு



பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிமியோன் சின்னப்பு நேற்று (21.10.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிமியோன் - கத்தோ தம்பதியரின் அன்பு மகனும், அருளம்மாவின் அன்புக் கணவரும், றோஸ்மேரி, எமிலியானுஸ்பிள்ளை, வீனஸ் (பெப்பி), வின்சலஸ், மாகிறேற், அருள்தாசன், யோசேப்பு, குணசீலன், காலஞ்சென்றவர்களான இயூனுஸ்ஜெயசீலன், யூட் ஜெயசீலன், செல்வஜோதினி, ஜெபசீலன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.10.2011) சனிக்கிழமை பி.ப.3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புனித காணிக்கை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அவைரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தவசிகுளம், மிருசுவில். மனைவி, பிள்ளைகள்.

Spoken English veta®

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் பயிற்சிமையம்.

Experts in English Training



புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | நெல்லியடி |
| --- | --- | --- |
| Sat, Sun 9.00 a.m. | Sat, Sun 8.00 a.m. | Sat, Sun 1.30 p.m. |
| Mon, Wed, fri 8.30. a.m. | Wed, Fri 9.30 a.m. | Tue,Thu 6.30 a.m. |
| Sat, Sun 3.30 p.m. | | Tue,Thu 8.30 a.m. |

UK Student Visa , Settlement Visa மூலம் U.K செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று. ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும் City & Guilds

DMI COMPUTER EDUCATION

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470 | சாவகச்சேரி. Tel.:021-227 0243

# இந்தியா கொன்றவர்களுக்கு நேற்று அஞ்சலி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியாகம் செய்தனர். 1987இல் போர் நடந்துகொண்டிருந்தபோது பலர் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக வந்துகொண்டிருந்தனர். அவர்களுக்கு எதுவும் நடந்துவிடக்கூடாது; உள்ளே அகப்பட்டுள்ள அலுவலர்களுக்கு ஏதும் நடந்துவிடக்கூடாது என்று கருதி வெள்ளைக்கொடியுடன் வந்த வைத்திய நிபுணர் சிவபாதசுதந்தரம்கூட இந்தியப் படையினரால் இரக்கமற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டார்'' என்றார் தாதிய உத்தியோகத்தர்கள் சார்பில் உரையாற்றிய திருமதி உஷா.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வைத்தியசாலையில் பணியாற்றிய 21 பேர் உட்பட 65 பேர் உயிரிழந்தனர். அவர் களில் வைத்திய நிபுணர்களான அ.சிவபாதசுந்தரம், கே.பரிமேலழகர், கே.கணேசரத்தினம் ஆகி யோரும் அடங்குவர்.

(ஒ-4)

# கூட்டமைப்பினர் - ஹிலாரி சந்திப்பை தடுத்து நிறுத்த அரசு கடும் முயற்சி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜதந்திர நடைமுறைகளை (Protocol) மீறும் செயல் என்று இலங்கை ராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பின்னணியில் தமிழ்க் கூட்டமைப்பிற்கும், அமெரிக்க வெளியுறவுச் செயலருக்குமிடையில் நேரடி சந்திப்பு இடம் பெறுமா என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று அரச தரப்பினர் தெரிவிக்கின்றனர். (உ-சி)

# இந்து இளைஞர் மன்ற பொதுக்கூட்டம்

*திக்கரை இந்து இளைஞர் மன்ற பொதுக்கூட்டம் நாளை [23.10.2011] ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு திக்கரை இந்து இளைஞர் மன்ற மடத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருவதோடு, கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.*

களபூமி, காரைநகர். *திக்கரை இந்து இளைஞர் மன்றம்,*

# மரண அறிவித்தல்கள்

## பாலசிங்கம் பரமேஸ்வரன்



ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் பரமேஸ்வரன் நேற்று முன்தினம் (20.10.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த சிவச்செல்வத்தின் பாசமிகு கணவரும், நவநீதா, தர்சிகா, நர்மதன், மிதுஷானா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், மதியாபரணம் (வவுனியா), சிங்கராசா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவசோதி மற்றும் பரமேஸ்வரி, வளர்மதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவநாயகம் (சுவிஸ்), மல்லிகா, அனுஷா, ரேகா, சுபத்திரா, பாமா, தயா, கீதா, தர்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
தர்மராஜா (தர்மா - மைத்துனன்)

## கதிரவேலு ஆறுமுகம்

(இளைப்பாறிய அதிபர், பால பண்டிதர்)



மூளாய் தெற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஆறுமுகம் கடந்த (19.10.2011) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காஞ்சென்ற பாக்கியம் (இளைப்பாறிய உப அதிபர்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வதுரை, பொன்னம்மா, பாக்கியம் மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், முருகநேசன், செல்வநேசன், நேசமலர், நேசானந்தி, நேசராணி, Dr.காந்தநேசன், நேசரஜனி, நேசபவானி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் மூளாயில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மூளாய் தெற்கு, சுழிபுரம். Dr.ஆ.காந்தநேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அபகரிப்பும் இன அழிப்பும் நீடித்தால் நல்லிணக்கம் ஏற்படாது

## நாடாளுமன்றில் சம்பந்தன் எச்சரிக்கை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பயங்கரவாதத்தை அழித்து விட்டோம், மக்களைப் பயங்கரவாதிகளிடம் இருந்து விடுவித்து விட்டோம், இனி மக்கள் தமது சொந்த இடங்களில் மீண்டும் வாழ முடியும்; அதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம் என்று ஜனாதிபதி கூறினார். ஆனால் இன்று எல்லாமே நேர்மாறாக இருக்கின்றன.

இந்த விடயத்தில் ஜனாதிபதி வெறும் பார்வையாளராக மட்டும் இருக்கக்கூடாது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும். நாங்கள் யாருடனும் விவாதம் நடத்தவில்லை. எமது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களையே இங்கு முன்வைக்கின்றோம்.

இது ஒரு பௌத்த நாடு. நான் புத்தபெருமானை மதிப்பவன். ஆனால், பௌத்தர்கள் புத்ததர்மத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என்று கூறிக் கொண்டு அதற்கு விரோதமாக செயற்படுவதுதான் வேதனையாக இருக்கின்றது.

எங்களுடைய அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்கள் தனியான மொழி, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், சமயக் கோட்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டவர்கள். ஏனைய சமூகத்தவர்கள்போல் சுதந்திரமாக வாழும் உரிமை ஊர்ஜிதப்படுத்தப்பட வேண்டும்.

இங்கு நான் சில விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். முன்பு பண்டா - செல்வா ஒப்பந்தமும் பின்னர் டட்லி - செல்வா ஒப்பந்தமும் பெரும்பான்மையினரின் அரசியல் குரோதங்களால் கிழித்தெறியப்பட்டன. மூத்த தலைவர்கள், தமிழர்களின் தனித்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று விரும்பினார்கள்.

ஆனால் அரசியல் போட்டியால் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அன்று இந்த ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் பிரச்சினைகள் ஓரளவாவது தீர்ந்திருக்கும்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியிடமும், அமைச்சர்களிடமும் பலமுறை பேசியுள்ளோம். ஆனால், எந்த விதமான பயனும் ஏற்படவில்லை.

நான் ஜனாதிபதியைக் குற்றம் காணவில்லை. அவர் ஒரு பார்வையாளரைப்போல் இருக்கக்கூடாது. காலம் வரும்போது அவர் வெறும் பார்வையாளராக மட்டுமே இருக்கும் நிலையும் வரலாம்.

காணிப் பதிவுகள் தொடர்பாக கண்டிய சட்டம் தென்பகுதியிலும், தேச வழமைச்சட்டம் வடக்கிலும் நடைமுறையில் இருக்கின்றன. இதனை ஒருபோதும் இல்லாதொழிக்க இடமளிக்க முடியாது.

யுத்தம் முடிந்துவிட்டது. புலிகளை அழித்துவிட்டோம் என்று கூறுகின்றீர்கள்.

ஆனால், இன்றும் சம்பூர் பிரதேசத்தில் எட்டு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்து 476 குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களில் தான் இருக்கின்றனர்.

அங்கே புலிகளும் இல்லை, கண்ணிவெடிகளும் இல்லை. ஏன் இவர்களை அங்கு மீள்குடியேற தடை விதிக்கின்றீர்கள்? அங்கே ஆயிரத்து 500 வருடம் பழைமை வாய்ந்த பத்திரகாளி அம்மன் கோயிலும் உண்டு. மக்கள் அங்கே சென்று வழிபடக்கூட அனுமதி இல்லை.

இந்திய அரசின் உதவியுடன் சம்பூரில் அனல் மின் நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனை நான் எதிர்க்கவில்லை. இந்திய அதிகாரிகளுடனும்,பிரதமருடனும் இவ்விடயம் தொடர்பாகப் பேசினோம். இம்மக்களை மீண்டும் குடியமர்த்த சகல உதவிகளையும் செய்வதாகக் கூறினர். ஆனால், இராணுவத்தினரே இம்மக்களை மீள் குடியமர்த்த மறுத்து வருகின்றனர்.

சம்பூரில் குடியிருப்பாளர் ஒருவர் தனது நூறு வருட காணி உறுதியை ஆதாரம்காட்டி உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

அங்கே அரச தரப்பில் ஆஜரான சட்டமா அதிபர், "சம்பூர் மக்களை மீண்டும் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, கூடிய விரைவில் இவர்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள்" என்று உயர் நீதிமன்றத்தில் கூறினார்.

ஆனால், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கூட மதிக்கப்படவில்லை. உதாசீனப்படுத்தி உள்ளீர்கள். இம்மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும்.

இதுமட்டுமல்ல, மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களின் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டுத் தென்பகுதி சிங்களவர்களுக்கு விவசாயக் காணிகள் தலா மூன்று ஏக்கரும் மேட்டுக் காணி ஒரு ஏக்கரும் என்ற அடிப்படையில் வழங்ககப்பட்டுள்ளன. ஆனால், காணிகளின் சொந்தக்காரர்கள் அகதி முகாம்களில் இருக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை, வளைஞர்மடம், ஆனந்தபுரம், முள்ளிவாய்க்கால் தெற்கு, கிழக்கு ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மீனவர்கள் வெளியேற்றப்பட்டு கடற்பரப்பிலிருந்து எட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள கோம்பாவில் கிராமத்தில் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இது அவர்கள் கடற்தொழிலை மேற்கொள்ள முடியாது தடுக்கும் ஒரு செயலாகவே அமையும்.

தொடர்ந்து இப்படியான இன சுத்திகரிப்பு ஏற்படுமானால் அது அரசுக்கும் சாதகமாக இருக்காது.

இன்று புலி புலி என்று கூச்சல் போடுகின்றீர்கள். ஆனால், புலிகளை உருவாக்கியவர்களே மாறி மாறி வந்த அரசுகள்தான். அன்று தந்தை செல்வாவுடனும், அமரர் அமிர்தலிங்கத்துடனும் நீங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முன் வந்திருந்தால் இன்று புலிகள் இயக்கம் என்று ஒன்று உருவாகியே இருக்காது.

நல்லிணக்கம் பேச்சில் மட்டுமல்ல, செயலிலும் காட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார் சம்பந்தன். (உ-2)

# சொல்ஹெய்மின் உதவியை நாடும் ஜனாதிபதி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசு நாடியுள்ளது என்று கொழும்பிலிருந்து வெளியாகும் 'தி ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.


"அரசைக் குறிவைத்து விடுதலைப் புலிகள் போர்க் குற்றச்சாட்டுகளை எழுப்பி வரும் நிலையிலேயே, கொழும்பு இந்த நகர்வை மேற்கொண்டுள்ளது" என்று அந்த நாளேடு தெரிவித்துள்ளது.

அண்மையில் நோர்வேக்குச் சென்றிருந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஒஸ்லோ சென்று நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்மையும், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜெனாஸ் கார்ஸ்ரோரையும் தனித்தனியாகச் சந்தித்து, இதுதொடர்பாகப் பேசினார் என்று அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்த அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

நோர்வேயின் அனுசரணையுடன் ஜெனீவாவில் விடுதலைப் புலிகளுடன் நடத்திய இரண்டு சுற்றுப் பேச்சுக்களிலும் அரசதரப்புக் குழுவுக்குத் தலைமை தாங்கிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவையே, நோர்வேயிடம் உதவி கோருவதற்கு ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளார். இவருடன் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவும் ஒஸ்லோ சென்றிருந்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்த மாதம் வெளியிடப்பட்ட பின்னர், விடுதலைப் புலிகளின் பரப்புரைகளை முறியடிப்பதற்கு ஜனாதிபதி இவர்களுக்கு முழுமையான அதிகாரங்களையும் வழங்கியுள்ளார் என்றும் கூறப்படுகிறது. (உ)

# புலனாய்வைப் பலப்படுத்துகிறது இலங்கை அரசு



கிளிநொச்சியில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டபோது.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

40.6 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்ட படைத் தலைமையகத்தை நேற்று பாதுகாப்பு செயலாளர் திறந்துவைத்தார். நிகழ்வில், இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, கிளிநொச்சி படைத்தலைமையகக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த, வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல். சுமேத பெரேரா, முல்லைத்தீவு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எல்.பீ.மார்க் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய கோத்தபாய, "நாட்டுக்குள்ளேயும் வெளிநாடுகளிலும் புலிகள் இயக்கத்துக்குச் சார்ப்பானவர்களின் நடவடிக்கைகள் தொடர்கின்றன. இவர்களின் செயற்பாடுகளை முடக்க வேண்டும். நாட்டுக்குள் மீண்டும் பயங்கரவாதம் தோற்றுவிக்கப்படாமல் தடுப்பதற்காக இராணுவத்துக்குள் புதிதாக ஐந்து புலனாய்வுப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன" என்றார்.

போரின்போதும் போர் முடிந்த பின்னரும், வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற புலி உறுப்பினர்கள், புலம்பெயர் தமிழர்களின் ஊடாக அந்த இயக்கத்தை மேலும் கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் பாதுகாப்புச் செயலர் குறிப்பிட்டார். (உ)

# போர்க்குற்ற அறிக்கை ஐ.நா. அறிக்கைதான்

## அடித்துச் சொல்கிறார் நிபுணர் குழுத் தலைவர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாறு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன் மூவர் கொண்ட நிபுணர் குழு ஒன்றை நியமித்தார்.

நடந்து முடிந்த குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுதல் என்ற விடயத்தை முன்னிறுத்தி அறிக்கையிடுதலே இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்ட பணி. குழுவுக்கு இந்தோனேஷியாவைச் சேர்ந்த மார்சுகி தருஸ்மன் தலைமை தாங்கினார். தென்னாபிரிக்காவைச் சேர்ந்த யஸ்மின் சூகா, அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்ரீவன் ரட்னர் ஆகியோரும் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

2010 ஜூன் 22ஆம் திகதி இந்தக் குழுவை ஐ.நா. பொதுச் செயலர் நியமித்தார். அதேயாண்டு செப்ரெம்பர் 16ஆம் திகதி குழு தனது பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது. கிடைத்த முறைப்பாடுகள், சாட்சியங்கள் என்பவற்றின் அடிப்படையில் குழு தனது அறிக்கையை 2011 ஏப்ரல் 12ஆம் திகதி ஐ.நா. பொதுச் செயலரிடம் கையளித்தது.

அந்த அறிக்கையில், இலங்கைப் படையினரும் விடுதலைப் புலிகளும் போர்க் குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டனர் என்று நம்புவதற்கான ஆதாரங்கள் உள்ள என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அது குறித்து சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. புலிகள் மீது 6 குற்றச்சாட்டுக்களையும் அரசு மற்றும் படையினர் மீது 5 குற்றச்சாட்டுக்களையும் அறிக்கை முன்வைத்தது.

### அரசு எதிர்ப்பு

இந்த ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை அரசு தொடர்ச்சியாக எதிர்த்து வந்தது. அதனை ஏற்க முடியாது என்றும் அறிவித்தது. குழு நாட்டுக்குள் வந்து விசாரணை நடத்துவதற்கான அனுமதியை வழங்கவும் அரசு மறுத்து விட்டது.

குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டதும், அதனை ஏற்பதற்கும் இலங்கை அரசு மறுத்தது. அத்துடன் அறிக்கைக்குப் பதிலளிப்பதற்கு ஐ.நா. வழங்கிய கால அவகாசத்தைப் புறக்கணித்து பதிலளிக்காமலேயே விட்டது.

ஐ.நா. பொதுச் செயலாளர் நியமித்த குழுவானது பொதுச் சபையினதோ பாதுகாப்புச் சபையினதோ அங்கீகாரம் பெற்றது அல்ல என்பதால் அந்தக் குழு வெளியிட்ட அறிக்கையை ஐ.நா. அறிக்கையாக ஏற்க முடியாது என்றும் அரசு வாதிட்டது. அந்த அறிக்கை தருஸ்மன் அறிக்கையே தவிர ஐ.நா. அறிக்கை அல்ல என்று அறிவித்த அரசு, ஊடகங்களுக்கும் அந்தப் பேரிலேயே செய்திகளை வழங்கி வந்தது.

பணத்தைப் பெற்றுக்கொண்டு தருஸ்மன், இலங்கை அரசுக்கு எதிராக அறிக்கையை தயாரித்துள்ளார் என்றும் அமைச்சர்கள் பலர் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டினர்.

### தருஸ்மன் பதில்

நீண்ட மௌனத்துக்குப் பின்னர் ஐ.நா. தற்போது இலங்கை அரசின் கூற்றுக்குப் பதிலளித்துள்ளது.

ஐ.நா. தொடர்பான உள்ளகச் செய்தியை வெளியிட்டு வரும் இன்னர் சிற்றி பிரஸ் வியாழக்கிழமை தருஸ்மனிடம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், நிபுணர் குழுவின் அறிக்கை ஐ.நா. அறிக்கைதான் என்று அவர் ஆணித்தரமாகக் கூறினார்.

"அது ஐ.நா. அறிக்கைதான். அதற்குக் கூடுதலானதும் இல்லை குறைந்ததும் இல்லை. ஐ.நா. பொதுச் செயலாளராலேயே அந்தக் குழுவின் நிபுணர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதனால் அது இலங்கை தொடர்பான ஐ.நா. அறிக்கை என்றே அறியப்பட முடியும்" என்று அழுத்தம் திருத்தமாக தருஸ்மன் பதிலளித்துள்ளார்.

எனினும் ஐ.நா. வளாகத்தில் தன்னை 'சிறிலங்கன்' என அறிமுகப்படுத்திக் கொண்ட நபர், அந்த அறிக்கையை ஐ.நா. அறிக்கை என்று கூறுவதன் மூலம் தருஸ்மன் சட்டத்தை தவறாகப் பயன்படுத்துகிறார் என்று இன்னர் சிற்றி பிரஸிடம் கூறியுள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

USAID | SRI LANKA
FROM THE AMERICAN PEOPLE

ASAP
Accelerated Skills Acquisition Program
Empowering Youth Through Career Skills

## துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள், கணனித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.



சர்வதேச அங்கீகாரமுடைய சன்றிதழ் மற்றும் பாடத்திட்டம், கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள எமது பயிற்சி நிலையங்களில் விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். க.பொ.த (சா.த), (உ.த) மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகியவர்கள் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் நேரில் வரவும்

மேலதிக விவரங்களுக்கு :

விண்ணப்பங்களை எமது காரியலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

Skills for Life
IT ISLAND
**GATEWAY CENTRE**

New Market Building,
1st Floor,
Chavakachcheri
021 227 0323/021 5670266
0715 36 36 36

347, Kasthuriyar Road,
Jaffna.
021 567 5555,
021 222 7967

வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன! பதிவுகளுக்கு முந்துங்கள்....
ENGLISH & IT @ GATEWAY FOR A PROMISING FUTURE

**வரணி மிஷன்பாம்**

இறைச்சிக்கோழி (Broiler), முட்டை (Egg) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773435719, விற்பனை நிலையம்
வரணி மிஷன் பாம், வரணி

## கல்சியம் நீக்கி

உங்கள் வீடுகளில் காணப்படும் *PVC Tank* குகள், குழாய்கள் மற்றும் பிளாஸ்ரிக் பாத்திரங்கள் மாபிள்களில் பிடித்திருக்கும் கல்சியத்தை இலகுவாக நீக்க கேட்டுவாங்குங்கள் *Duroh* கல்சியம் நீக்கி.

*Duroh* இன் மற்றைய உற்பத்திகளையும் பெற்றுக்கொள்ளலாம்

**DUROH**
- Calcium Remover
- Bike Wash
- Toilet bowl Cleaner
- Car Wash
- Tile Cleaner
- P( )nol
- Dish Wash
- Glass Cleaner

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**AHIE ZER SUPPLIERS**
இல. 289, பிறவுண வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

MyWay ஆசிரியரிடம் நேரடியாக பயிற்சிபெற.... கடைசி சந்தர்ப்பம்

A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளலாம்

MyWay இல் நடாத்தப்படும் கடைசி அடிப்படை வகுப்பு ஊடாக பயிற்சியில் சேரலாம்

கடைசி அடிப்படை வகுப்பு : 12.30-2.00 சனிக்கிழமை(இன்று)
இந்த அடிப்படைவகுப்பில் கலந்து அதன்பின் வார அல்லது சனிஞாயிறு பிரிவில் சேரலாம்

காலம் : 1 - 3 மாதங்கள் கட்டணம் : 3000 மட்டும்

திங்கள்,புதன், வெள்ளி - 3 பிரிவுகள்
8-9.30, 9.30-11, 4.00-5.30

சனி, ஞாயிறு - 4 பிரிவுகள்
8-10, 10-12, 2-4, 4-6

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

O/L, A/L தகுதியோடு நீங்களும் **British Qualified Chartered Engineer / Quantity Surveyor** ஆவதற்கு **APSS International** வழி வகுக்கின்றது.

City & Guilds UK
June 2012
பொறியியல் வகுப்புக்கள்

APSS International யாழ் நகரில் 2004 ம் ஆண்டிற்கு பின்பு தனது 1st Batch ஐ கன்னாகத்தில் பூர்த்தி செய்துள்ளது. தற்போது யாழ்நகர் மாணவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க 2nd Batch ஐ Jaffna Technical Institute (JTI) உடன் இணைந்து எதிர்வரும் நவம்பர் 7ம் திகதி ஆரம்பிக்கவுள்ளது

**Course Directors**
Prof. K. Chandirabose (Telecommunication, Electrical & Electronic)
Eng. B. Thaventhirakumar C.Eng. (Civil Engineer / Quantity Surveyor)

**APSS International Networks (Pvt) Limited**
Head Office: 5 Harmers Avenue, Colombo 06. T.P: 011-2361587
Branch Office: Jaffna Technical Institute 46, Clock Tower Road Jaffna. T.P:071-8561654
Branch Office: 242 Dr. Subramaniam Rd, Chunnakam. T.P: 021-2241731
Hot Lines: 077-3867695, 077-2306642, 077-2418804

## மாபெரும் அதிரடி மலிவு விற்பனையும் விற்றுத்தீர்த்தலும்

## ஹவுஸ் ஒவ் செலெக்ஷன்

இல.22, நவீன சந்தை,
பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.





| | விலை | மலிவு விலை |
|---|---|---|
| சில்க் சாறி W.Blouse | 850 | 500 |
| சில்க் சாறி W.Blouse | 1200 | 600 |
| கொட்டன் சாறி W.Blouse | 1250 | 890 |
| கொட்டன் சாறி W.Blouse | 1500 | 700 |
| சீக்குயின் சாறி W.Blouse | 2450 | 1000 |
| சீக்குயின் சாறி W.Blouse | 2800 | 1300 |
| சீக்குயின் சாறி W.Blouse | 3200 | 1500 |
| சாறி | 1100 | 700 |
| பஞ்சாபி | 1100 | 490 |
| பஞ்சாபி | 1200 | 500 |
| பஞ்சாபி | 1500 | [illegible] |

| | | மலிவு விலை |
|---|---|---|
| சோலிக்கிற் S.M.L | 1500 | 600 |
| ஸ்கேட் | 550 | 250 |
| ஸ்கேட் | 500 | 200 |
| ஸ்கேட் | 600 | 300 |
| பிளவுஸ் | 475 | 200 |
| பிளவுஸ் | 550 | 250 |
| பிளவுஸ் | 400 | 150 |
| லேடிஸ் T. சேட் | 350 | 100 |
| லேடிஸ் T. சேட் | 450 | 200 |
| லேடிஸ் T. சேட் | 500 | 250 |
| [illegible] | 1700 | [illegible] |

| | விலை | மலிவு விலை |
|---|---|---|
| டெனிம் ரவுசர் (சிறிது) | 750 | 300 |
| டெனிம் ரவுசர் (சிறிது) | 900 | 350 |
| T. சேட் (Boys) | 400 | 200 |
| பேபி கவுண் | 650 | 350 |
| பாட்டி புறக் | 900 | 400 |
| சேட் | 900 | 450 |
| குட்டிங் சைனிங் IL | 700 | 400 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.